T. 1998

கந்த புராணத் திரட்டு

அசுர காண்டமும், மகேந்திர காண்டமும்

ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.,

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் — சென்னை

கந்தபுராணத் திரட்டு

அசுரகாண்டமும், மகேந்திரகாண்டமும்

(பாட்டும் பயனும்)

தொகுத்தவர்:
ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
சென்னைப் பல்கலைக் கழகம்

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

விலை ரூபா] [1 - 14 - 0

முகவுரை

சென்ற ஆண்டில் வெளியிட்ட கந்தபுராணத் திரட்டு — உற்பத்தி காண்டத்தின் தொடர்பாக, இப்பொழுது அசுர காண்டமும், மகேந்திர காண்டமும் சேர்த்து வெளியிடப்படுகின்றன. கச்சியப்பர் அசுர காண்டத்தில் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றொன்பது செய்யுளும், மகேந்திர காண்டத்தில் ஆயிரத்து நூற்று எழுபத்தெட்டுச் செய்யுளும் இயற்றியருளினார். அவற்றை முறையே முன்னூற்று இருபத்தொன்பதும், இருநூற்றுப் பதினான்குமாக இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. முதற் காண்டம் போலவே இவ்விரு காண்டங்களின் திரட்டும் முருகனடியார்க்கு இன்பமும் பயனும் அளிக்கும் வண்ணம் அப்பெருமான் திருவருளை வேண்டுகின்றேன்.

சென்னை
பார்த்திப ௵
தை ௴

ரா. பி. சேதுப் பிள்ளை.

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ்,
பார்த்திப ௵ தை ௴
M. S. Q. H. 109. 1/46

உ

முருகன் துணை

கந்தபுராணத் திரட்டு

2. அசுர காண்டம்

கடவுள் வணக்கம்

ஊரிலான் குணம் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.

மாயையின் வரலாறு

வீறு காசிபன் சிறுர்களாய் மேவிய அறுபான்
ஆறு கோடிய தாகிய அவுணருக் கரசன்
மாறில் மங்கல கேசியாம் அரக்கியை மணந்து
பேற தாகவே சுரசையென் ஞெருமகள் பெற்றான். 1

---

1. மேன்மையுற்ற காசிபனுடைய புதல்வர்களாகத் தோன்றினர் அறுபத்தாறு கோடி அசுரர்கள். அன்னவர்க்கு அரசனாய் அமைந்தான் அசுரேந்திரன். அவன் மனமொத்த மங்கலகேசியென்னும் அரக்கியை மணந்து சுரசையென்ற புதல்வியைப் பெற்றான்.

தூய அம்மகள் வளர்ந்தபின் புகர்எனும் தொல்லோன்
தீய மாயையின் கல்விகள் யாவையும் தெருட்டி
ஆய விஞ்சையின் வல்லபம் நோக்கியே அவட்கு
மாயை என்றுபேர் கூறினன் மனத்திவை மதிப்பான்.

திருவும் மாரவேள் இரதியும்
திலோத்தமை என்ன
மருவு தையலும் மோகினி
என்பதோர் மாதும்
ஒரு தனித்திரு வடிவுகொண்
டால்என உலகில்
பொருவில் மாயவள் பேரழ
குருக்கொடு போனாள். 3

மாயை காசிப முனிவரை மயக்குதல்

சென்ற மாயைஅக் காசிபன் இருக்கையில் திருவாழ்
மன்றல் வாவியும் தடங்களும் சோலையும் மணிசெய்
குன்றும் மாமலர்ப் பள்ளியும் மண்டபக் குழாமும்
தன்தன் ஆணையால் துண்ணெனச் சூழ்தரச் சமைத்தாள்.

---

2. அம்மகள் தூயவளாய் வளர்ந்து வந்தாள்; அப்போது (அசுரர் குலகுருவாகிய) சுக்கிரன் அம்மங்கைக்குக் கொடிய மாயா வித்தைகள் அத்தனையும் கற்பித்தார்: அவற்றில் அவள் அடைந்த திறமையைக் கண்டு மாயை என்று பெயரிட்டார்; அம்மாயையால் எதிர் காலத்தில் அசுரர்கள் எய்த நின்ற பெருமையெல்லாம் எண்ணிப் பார்த்தார்.

3. ஒப்பற்றவள் ஆகிய மாயை, திருமகளும், ரதியும், திலோத்தமையும், மோகினியும் ஒரு திருவடிவம் கொண்டாற் போன்ற அழகிய உருவம் பூண்டு சென்றாள்.

4, காசிப முனிவரது தவச்சாலையின் அருகே நறுமணங் கமழும் அழகிய செந்தாமரைப் பொய்கையும், குளமும், சோலையும், மாணிக்க மலையும், மஞ்சமும், மண்டபமும் விரைவில் உண்டாக்கினாள்.

5. ஆண்டவன் திருவடியை நினைந்து ஐம்பொறிகளையும் அறிவினால் அடக்கித் தன்னந் தனியராய்த் தவம்

இனைத்தெலாம் அவண் வருதலும்
எந்தைதன் அடியை
மனத்தினிற்கொடு பொறியினை
உரத்தினால் வாட்டித்
தனித்து நோற்றிடும் காசிபன்
புகுந்த அத் தகைமை
அனைத்தும் நோக்கி ஈதென்கொல் என்
றதிசயம் அடைந்தான். 5

தெற்றெனத் தன்மனம் தேற்றித் தொன்மைபோல்
நற்றவம் இயற்றுவான் நணுகும் வேலையில்
மற்றது தெரிந்திடும் மாயை தூமணிப்
பொற்றையில் தமியளாய்ப் பொலிந்து தோன்றினாள்.

தோன்றினள் நிற்றலும் தொல்லை நான்முகற்கு
ஆன்றதோர் காதலன் அவளை நோக்கினான்
வான்திகழ் கற்பக வல்லி செய்தவத்து
ஈன்றதோர் கொடி இவண் எய்திற்றோ என்றான். 7

எப்பொருளை வேண்டினும் இமைப்பில் உனவாக
அப்பொருளி யாவையும் அளிப்பன் அஃதல்லால்
மெய்ப் புதல்வர் வெஃகினும் விதிப்பன் அவர்தம்மை
ஒப்பிலை இவர்க்கெனவும் உம்பரிடை உய்ப்பேன்.

புரிந்திருந்த காசிப முனிவர் அவற்றைக் கண்டு அதிசயம் அடைந்தார்.

6. உடனே தன் உள்ளத்தை ஒருமைப் படுத்தி முன் போலவே நற்றவம் புரியத் தலைப்பட்டார். அவ்வேளையில் மாயை என்னும் மங்கை மாணிக்க மலையின்மீது தனியளாய் இலங்கித் தோன்றினாள்.

7. அம்மங்கையைக் கண்ணுற்றார் காசிபர். விண்ணுலகத்தில் விளங்கும் கற்பகவல்லி தவம்செய்து பெற்ற பூங்கொடி தான் ஈங்கு வந்ததோ என்று வியந்து நின்றார்.

8. (தனியளாக நின்ற தையலை நோக்கி:) "மாதே! உனக்கு என்ன வேண்டும் என்றாலும் இன்னே தருவேன். மைந்தரை விரும்பினும் மகிழ்ந்து அளிப்பேன்; அன்னவரை ஒப்பற்ற நிலையில் வைப்பேன்" என்றார்.

முனியிது புகற லோடும்
முற்றிழை முறுவல் எய்தித்
தனியினள் என்று கொல்லோ
சாற்றினை இனைய நீர்மை
இனியது தவிர்தி மேலோர்க்கு
இசையுமோ யானும் முன்னம்
நினைவுழிச் செல்வன் நோற்று
நீஇவண் இருத்தி என்றே. 9

கங்கையின் திசையை முன்னிக்
கடிதவண் செல்வாள் என்ன
அங்கவள் போத லோடும்
அருந்தவன் தொடர்ந்து செல்ல
மங்கையும் அருவம் எய்தி
மாயையிற் கரந்து நிற்ப
எங்கணும் நோக்கிக் காணான்
இடருழந்து இரங்கி நைவான். 10

முன்னம் செய்தீர் காதலை நோன்மை முதலோடும்
பின்னம் செய்தீர் மாரனை ஏவிப் பிழை செய்தீர்
சின்னம் செய்தீர் நல்லுணர் வெல்லாம் சிறியேனுக்கு
இன்னம் செய்யும் பெற்றியும் உண்டேல் இசையீரே.

---

9. முனிவன் உரைத்த மொழி கேட்டு மாயை புன்னகை புரிந்தாள். "நான் தனியள் என்று கருதியோ இவ்வாறு உரைத்தீர்! இது போன்ற பேச்சு இனி வேண்டாம். இது தவமுடையோர்க்குத் தகுமோ? நான் முன்னமே குறித்த இடம் செல்கின்றேன். நீர் இங்கு தவம் செய்துகொண்டு இரும்" என்று சொல்லி,

10. கங்கை யாற்றின் திசையை நோக்கிக் கடிது செல்வாள் போல நடந்தாள். முனிவரும் பின் தொடர்ந்தார். மங்கை அருவம் எய்தி மாயையால் மறைந்து நின்றாள். முனிவர் அங்குமிங்கும் நோக்கி மங்கையைக் காணாது கவலையுற்றுக் கரைந்தார்.

11. "அந்தோ! முன்னே ஆசை கொடுத்தீர்; என் தவத்தை அடியோடு கெடுத்தீர். மன்மதனை ஏவி மையல்

என்னுஎன்னு இத்தகை பன்னி இடராழித்
துன்னு மாழ்கிச் சோர்தரும் எல்லைத் துகள்தீரும்
மின்னுகின்ற மாயவள் அன்னான் விழிகாண
முன்னாய் நின்றாள் எவ்வினை கட்கும் முதலானாள். 12

கந்தார் மொய்ம்பிற் காசிபன் என்போன் கடிதங்கண்
வந்தாள் செய்கை காணுத லோடும் மகிழ்வெய்தி
அந்தா உய்ந்தேன் யானென மின்கண்டு அலர்கின்ற
கொந்தார் கண்டல் போல்நகை யோடும் குலவுற்றான்.

சூரன் முதலிய மைந்தருக்குக் காசிபன் அறிவுரை பகர்தல்

உறுதிய தொன்றினை உணர்த்துகின்றனன்
அறைகழல் மைந்தர்காள் அரிய மாதவ
நெறிதனில் மூவிரும் நிற்றிர் அன்னதன்
முறைதனை வாய்மையால் மொழிவன் கேண்மினோ. 14

விளைத்தீர்! என் மெய் யறிவை யெல்லாம் சிதைத்தீர்! இன்னும் செய்ய வேண்டியது ஒன்றுண்டோ? சொல்வீர்!

12. என்று பன்னிப் பன்னி இடர்க்கடலில் மூழ்கிச் சோர்ந்தார் முனிவர். அந்நிலையில் எவ்வினைக்கும் முன்னவளாகிய மாயை அவர் கண்ணெதிரே தோன்றினாள்.

13. கருத்தழிந்து கம்பம்போல் நின்ற காசிப முனிவர் மாயையைக் கண்டார்; மகிழ்ச்சி கொண்டார்; உய்ந்தேன் உய்ந்தேன் என்றார்; மின்னொளியைக் கண்டு மலரும் தாழைமலர் போல் புன்னகை பூத்தார்; மாயையோடு கொஞ்சிக் குலாவினார். (அப்போது மாயையினிடம் சூர பன்மன் என்னும் வீரன் தோன்றினான். அவனுக்குப் பின் ஆயிரம் தலையுடைய சிங்கமுகனும், யானை முக முடைய தாரகனும், ஆட்டுத் தலையுடைய அசமுகியும் பிறந்தார்கள்.)

14. (காசிப முனிவர் அவரை நோக்கி) "என் வீர மைந்தர்காள்! உமக்கு உறுதி பயக்கும் செய்தி யொன்று சொல்கின்றேன். நீவிர் மூவரும் தவநெறியிலே நிற்றல் வேண்டும். அதற்குரிய முறையை மெய்யாக உணர்த்து வேன்; கேட்பீராக" என்று கூறலுற்றார்.

தருமம்என் றொருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்
அருமையில் வரும்பொருள் ஆகும் அன்னதும்
ஒருமையி னோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ. 15

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருள்எனும் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவம் எனும் மாட்சி எய்துமேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால். 16

ஆதலின் மைந்தர்காள் அறத்தை ஆற்றுதிர்
தீதினை விலக்குதிர் சிவனை உன்னியே
மாதவம் புரிகுதிர் மற்ற தன்றியே
ஏதுள தொரு செயல் இயற்றத் தக்கதே. 17

உடம்பினை ஒறுத்து நோற்பார்
உலகெலாம் வியப்ப வாழ்வர்
அடைந்தவர்க் காப்பர் ஒல்லார்க்கு
அழிவுசெய் திடுவர் வெஃகும்

---

15. "அறம் என்னும் பொருள் ஒன்றுண்டு. அது அழிவற்ற இம்மை மறுமை இன்பங்களை எளிதாக அளிக்கும். அருமையாகப் பெறுதற்குரியது அவ்வறம். ஒருமைப் பட்ட மனம் உடையராலன்றிப் பிறரால் அது அறிய வொண்ணாது.

16. அறத்தைப் போற்றினால் அன்பு உண்டாகும். அருள் என்னும் பேறும் வந்தடையும். அவ்விரண்டும் வந்தவுடன் தவம் என்னும் சிறப்புக் கைக்கூடும். அதன் பின்பு ஞானம் உண்டாகும். ஞானம் பெற்ற உயிர் சிவனோடு இரண்டறக் கலந்து விடும்.

17. ஆதலால் மைந்தர்காள்! அறம் செய்யுங்கள்; பாவத்தை அகற்றுங்கள். சிவபெருமானைக் கருதிச் சிறந்த தவம் புரியுங்கள். அதுவன்றி இங்கு செய்யத்தக்க செயல் வேறொன்றில்லை.

18. உடம்பை ஒறுத்துத் தவம் செய்பவர் உலகமெல்லாம் வியக்க வாழ்வர்; தம்மை அடைந்தவரை ஆதரிப்பர்; பகைவரை அழிப்பர்; விரும்பிய பொருளெல்லாம் பெறு

நெடும்பொருள் பலவும் கொள்வர்
நித்தராய் உறைவர் ஈது
திடம்பட உமக்கோர் காதை
செப்புவன் என்று சொல்வான். 18

முனிவர் மார்க்கண்டன் சரித்திரம் உரைத்தல்

மெய்படும் மறையுணர் மிருகண் டென்பவன்
அப்பெருங் கோயிலுக் கணித்தோர் பாங்கரில்
செப்புறும் ஆகமத் தெளிவு நாடியே
மைப்பெருங் கண்டனை வழிபட் டானரோ. 19

பூதல இடும்பை நீங்கப் புரைதவிர் தருமம் ஓங்க
மாதவ முனிவர் உய்ய வைதிக சைவம் வாழ
ஆதிதன் அருளி னாலே அந்தகன் மாள அன்னோன்
காதலி உதரத் தாங்கோர் கருப்பம் வந்தடைந்த தன்றே.

கறை யுயிர்த்து இலங்கு தந்தக்
காய்சின அரவம் கவ்வக்
குறையுயிர்ப் படிவத் திங்கள்
அமிர்தினைக் கொடுத்திட் டாங்கு

வர்; என்றும் அழிவின்றி இருப்பர். இவ்வுண்மை உங்கள் மனத்தில் நன்கு பதியும் வண்ணம் ஒரு சரித்திரம் சொல்கின்றேன் கேளுங்கள்.

19. மெய்யான வேதங்களை உணர்ந்தவர் மிருகண்டு முனிவர். அவர் (காசியை அடைந்து) திருக்கோயிலின் அருகே சிவாகம முறைப்படி நீலகண்டனாகிய சிவபெருமானை வழிபட்டு வந்தார்.

20. இவ்நிலவுலகத்தில் உள்ள துன்பம் நீங்கவும், நல்லறங்கள் செழித்து ஓங்கவும், மாதவ முனிவர்கள் சிறந்து மல்கவும், வைதிக சைவம் வாழவும், கண்ணற்ற காலன் மாளவும், ஆதி முதல்வனாகிய சிவபெருமான் திருவருளால், அம்முனிவரின் மனையாள் கருப்பம் உற்றாள்.

21. நஞ்சுடைய நாகத்தின் வாய்ப்பட்டு நலிவுற்ற சந்திரன், விடுபட்டு அமிர்தத்தைத் தருவதுபோல் அழகும்

மறையுயிர்த் தருளும் செவ்வாய்
மதலையை வயாவின் மாழ்கிப்
பொறை யுயிர்த் தருளிற் றந்தாள்
பொறைதரு திருவைப் போல்வாள். 21

தந்தையும் அதனைக் கேளாத்
தடம் புனற் கங்கை மூழ்கி
அந்தணர் முதலோர்க் கெல்லாம்
ஆடகம் பலவும் நல்கி
முந்துறு கடன்கள் ஆற்ற
முளரிமேல் முனிவன் மேவி
மைந்தனுக் குரிய நாமம்
மார்க்கண்டன் என்று செய்தான். 22

ஏதமில் ஐந்தின் மூன்நூல்
இலக்கண விதியும் செய்தே
ஓதிடும் கலைகள் எல்லாம்
உள்ளுற உணர்த்துங் காலை
வேதமும் பிறவும் கொண்ட
வியன்பொருள் தெரிந்து மேலாம்
ஆதியே சிவனென் றெண்ணி
அவனடி அரண் என் றுற்றான். 23

பொறுமையும் வாய்ந்த அம்மாது கருப்ப வேதனையால் வருந்தி, வேத மணம் கமழும் செவ்விய வாயினையுடைய குழந்தையைப் பெற்றாள்.

22. மைந்தன் பிறந்தான் என்று கேட்ட முனிவர் கங்கையிலே நீராடினார்; அந்தணர் முதலிய அறவோர்க்குப் பொன்னும் பொருளும் வழங்கினார்; செய்யத் தக்க சடங்குகளை யெல்லாம் செய்தார்; அப்போது பிரமதேவன் அங்கு எழுந்தருளி மைந்தனுக்கு மார்க்கண்டன் என்று பெயர் இட்டான்.

23. அம்மைந்தனுக்கு முனிவர் ஐந்தாம் ஆண்டில் உபநயனம் செய்தார். ஓதுதற்குரிய கலைகளை யெல்லாம் அவன் உள்ளங்கொள்ள உணர்த்தினார்; வேத நூல் முதலாய கலைகளெல்லாம் கூறும் மெய்ப்பொருளை உணர்ந்து,

இந்தவாறு இயலுங் காலை
    எண்ணிரண் டான யாண்டும்
வந்ததால் அதனை நோக்கி
    மைந்தனை நோக்கி வாளா
தந்தையும் பயந்த தாயும்
    தனித்தனி இருந்து சால
வெந்துயர்க் கடலின் மூழ்கி
    விம்மலுற்று இரங்கி நைந்தார். 24

ஆங்கது மதலை காணு
    அடியிணை வணங்கி அன்னோர்
பாங்குற அணுகி நீவிர்
    பருவரல் உறுகின் றீரால்
ஈங்கிது என்னே இன்னும்
    யாதும் ஒன் றறிதல் தேற்றேன்
நீங்குமின் அவலம் நும்பால்
    எய்திய நிகழ்த்தும் என்றான். 25

கூறிய மொழியுட் கொண்டு
    குமரநீ இருக்க நம்பால்
வேறொரு துயரம் எய்தி
    மெலிவதும் உண்டோ மேனாள்

சிவபெருமானே ஆதி முதல்வன் என்றறிந்து, அவர் சேவடியே தஞ்சமாகக் கொண்டான், மார்க்கண்டன்.

24. இவ்வாறு நடைபெறும்பொழுது மார்க்கண்டனுக்குப் பதினாறு வயதும் வந்தது. பாலனையும் பதினாறும் ஆண்டையும் மாறி மாறி எண்ணிப் பெற்றோர் இருவரும் தனித் தனியே இருந்து பேதுற்றார்; துன்பக் கடலில் மூழ்கினார்; விம்மினார், அழுதார், நலிவுற்றார்.

25. அதனை அறிந்த மார்க்கண்டன் பெற்றோரை அடி வணங்கி அருகே சென்று, "நீங்கள் ஏன் இவ்வாறு துன்புறுகின்றீர்கள். வருந்தத் தக்க காரியம் ஒன்றும் வந்ததாகத் தெரியவில்லையே! துக்கப்படாதீர்கள். என்ன நிகழ்ந்ததென்று சொல்லுங்கள்" என்று வினவினான்.

26. அம்மொழி கேட்ட தந்தை 'அப்பனே, நீ இருக்க எமக்குத் துன்பமும் உண்டோ? உனக்கு வயது

ஏறுடை அமல மூர்த்தி
யாண்டுநின் தனக்கீர் ஐந்தும்
ஆறும் என்றளித்தான் அந்நாள்
அடைதலின் அவலம் செய்தேம். 26

என்றுரை செய்த தாதை
இடருறும் முகத்தை நோக்கி
ஒன்றும் நீர் இரங்கல் வேண்டாம்
உயிர்க்குயிர் ஆகி என்றும்
நின்றிடும் அரனை ஏத்தி
அருச்சனை நிரப்பிக் கூற்றின்
வன்திறல் கடந்து நும்பால்
வல்லைவந் தடைவன் மன்னோ. 27

இருத்திரால் ஈண்டே என்னா
ஏதுக்கள் பலவும் செப்பிக்
கருத்துற நெடிது தேற்றிக்
கால்முறை வணங்கி நிற்பத்
திருத்தகு குமரற் புல்லிச்
சென்னியும் மோந்து முன்னர்
வருத்தமும் நீங்கிச் சிந்தை
மகிழ்ந்தனர் பயந்த மேலோர். 28

பதினாறு என்று சிவபெருமான் முன்னமே அருளிச் செய்தார். அவ்வயது வந்து விட்டதே என்றுதான் வருந்துகின்றோம்''

27. என்றுரைத்தார். அப்போது தந்தையின் துன்புற்ற முகத்தை நோக்கி "ஐயனே! நீங்கள் வருந்தாதிர்கள். உயிர்க்கெல்லாம் உயிராகி, என்றும் நின்று நிலவும் பெருமானை வழிபட்டு, கால அவதி என்னும் விதியைக் கடந்து, உங்களிடம் வந்து சேர்வேன்.

28. அதுவரையும் இங்கே இருங்கள்" என்று பலவாறாகச் சொல்லிப் பெற்றோர் மனத்தைத் தேற்றி அவர் பாதம் பணிந்து நின்றான் மார்க்கண்டன். அருமந்த திருமகனை இருவரும் எடுத்தணைத்து, உச்சிமோந்து, துன்பம் விட்டு இன்பம் அடைந்தனர்.

இருமுது குரவர் தத்தம்
ஏவலின் ஈசன் என்னும்
ஒருவனது அருளும் அன்பும்
உடனுறு துணையாய்ச் செல்லப்
பொருவரும் மகிழ்ச்சி பொங்கப்
பொள்ளெனப் பெயர்ந்து போகித்
திருமணி கன்றி கைப்பேர்ச்
செம்பொன் ஆலயத்திற் புக்கான். 29

என்புநெக் குருகக் கண்ணீர்
இழிதர வலஞ்செய்து ஈசன்
முன்புற வணக்கம் செய்து
முடிமிசை அடிகள் சூடித்
தென்புலத் தொருசார் எய்திச்
சிவனுருச் செய்து பன்னாள்
அன்புடன் அருச்சித் தேத்தி
அருந்தவம் இயற்றி யிட்டான். 30

ஐயனே அமலனே அனைத்தும் ஆகிய
மெய்யனே பரமனே விமலனே அழல்
கையனே கையனேன் காலன் கையுறாது
உய்யநேர் வந்துநீ உதவென்று ஓதலும். 31

---

29. பெற்றோர் பணித்தவாறே, இறைவனின் அருளும் அன்புமே உறுதுணையாகக்கொண்டு, உள்ளத்தில் ஒப்பற்ற மகிழ்ச்சிபொங்க, விடைபெற்று விரைந்து போந்து, காசியிலுள்ள மணிகன்றிகை யென்னும் செம்பொன் மயமான சிவாலயத்தை அடைந்தான் மார்க்கண்டன்.

30. அன்பினால் என்பு உருக, கண்ணீர் பொங்கி வழிய, மார்க்கண்டன் திருக்கோவிலை வலம் வந்தான்; ஈசனை வணங்கினான்: அவர் திருவடியைத் தன் முடியிலே தரித்தான்; ஆலயத்தின் தென்பால் ஒரு பக்கத்தில் ஈசன் திருவுருவை நிறுவினான்; பலநாள் அன்புடன் தொழுது போற்றி அருந்தவம் புரியலுற்றான்.

31. "ஐயனே! அமலனே! எப்பொருளும் ஆகி நின்ற மெய்ப்பொருளே! பரம்பொருளே! விமலனே! தீயேந்திய

அஞ்சலை அஞ்சலை அந்த கற்கெனுச்
செஞ்சரண் இரண்டையும் சென்னி சேர்த்தலும்
உஞ்சனன் இனியென ஓத ஒல்லையில்
நஞ்சணி மிடற்றினுன் மறைந்து நண்ணினுன். 32

அந்தகன் அத்துணை அமைச்சன் ஆகிய
வெந்திறற் காலனை விளித்துக் காசியில்
அந்தணன் ஒருமகன் அவன தாவியைத்
தந்திடு கென்றலும் தரணி எய்தினுன். 33

விழியிடைத் தெரிவுற மேவி மைந்தனைத்
தொழுதனன் யாரைநீ சொல்லு கென்றலும்
முழுதுல குயிரெலாம் முடிக்கும் ஆணையான்
கழலிணை அடிமைசெய் கின்ற காலன் யான். 34

திருக்கரத்தானே! அடியேன் காலன் கைப்படாது கடைத் தேறும் வண்ணம் நேர்நின்று காத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

32. அப்பொழுது சிவபெருமான் 'அஞ்சேல் அஞ் சேல்' என்று அபயம் அளித்துத் தம் சேவடி இரண்டை யும் அவன் சென்னியில் சேர்த்தார். 'உய்ந்தேன் அடியேன்' என்று மார்க்கண்டன் போற்றி நின்றான். ஈசன் மறைந் தருளினர்.

33. அவ்வேளையில் கூற்றுவன் தன் அமைச்சனுகிய கொடிய காலனை அழைத்தான்; "அந்தணன் மகன் ஒரு வன் காசியில் உள்ளான்; அவன் உயிரைக் கவர்ந்து வா" என்று கட்டளையிட்டான். அப்பணியேற்ற காலன் நில வுலகத்தை யடைந்தான்.

34. மார்க்கண்டன் கண்ணெதிரே தோன்றினுன்; தொழுதுநின்றான். நீயார் என்று அவன் கேட்டலும், 'சகல உலகங்களிலும் உள்ள உயிர்களைச் சங்காரம் செய்யும் அதிகாரமுடைய யமதேவனது அடியிணை பணியும் காலன் யான்' என்றான்.

நாத னார்தம தடியவர்க்கு
அடியவன் நானும்
ஆத லான்உமது அந்தகன்
புரந்தனக் கணுகேன்
வேதன் மால்அமர் பதங்களும்
வெஃகலன் விரைவில்
போதி போகிஎன் றுரைத்தலும்
நன்றெனப் போனான். 35

போன காலனும் மறலியை
வணங்கியே புகுந்த
பான்மை யாவையும் உரைத்தலும்
உளம்பதைப் பதைப்ப
மேனி மார்பகம் வியர்ப்புற
விழிகனல் பொழியக்
கூனல் வார்புரு வக்கடை
நிமிர்ந்திடக் கொதித்தான். 36

அழைத்திர் மேதியை என்னலும்
போந்ததால் அதன்மேல்
புழைக்கை மால்கரி யாமென
வெரிநிடைப் புகுந்து

---

35. அதுகேட்ட மார்க்கண்டன் 'யாவர்க்கும் தலைவனாகிய ஈசனாரின் அடியார்க்கு அடியவன் யான். ஆதலால் உமது யமலோகத்திற்கு வரமாட்டேன். பிரமன் திருமால் ஆகிய இருவர் பதவியையும் விரும்பேன். நீ விரைந்து செல்' என்று கூறினான். காலனும் நன்று நன்று என்று சொல்லிச் சென்றான்.

36. யமலோகம் போந்த காலன் தலைவனை அடிவணங்கி நிகழ்ந்தவற்றையெல்லாம் எடுத்துரைத்தான். அப்போது யமதருமன் மனம் பதைத்தான்; மேனி வியர்த்தான்; கண்களால் கனல் பொழிந்தான்; நெடும் புருவங்களை நிமிர்த்தான்; சீற்றம் உற்றான்.

37. 'என் எருமை வாகனத்தைத் தருக' என்றான். வந்து எதிரே நின்ற எருமைக்கடாவின் முதுகில் துதிக்கை

நிழற்று இன்றதோர் கவிகையும்
துவசமும் நிவப்ப
வழுத்தி வீரர்கள் சுற்றிட
அந்தகன் வந்தான். 37

போந்து காசியின் முனிமகன்
இருந்துழிப் போகிச்
சேந்த குஞ்சியும் முகில்புரை
மேனியும் சினத்தில்
காந்து கண்களும் பிடித்ததோர்
பாசமும் கரத்தில்
ஏந்து தண்டமும் சூலமும்
ஆகியே எதிர்ந்தான். 38

தேவர் காப்பினும் செய்தளித் தீறுசெய்
மூவர் காப்பினும் மொய்ம்பினர் ஆயினோர்
ஏவர் காப்பினும் காத்திட இன்றுநின்
ஆவி கொண்டன்றி மீண்டும் அகல்வனோ. 39

என்றான் வானத் தேறென ஆர்த்தான் இவன்நேரே
நின்றால் வாரான் என்று நினைந்தே நெடுநீலக்
குன்றாம் என்னப் பாலகன்முன்னம் கொலைவேலான்
சென்றான் பாசம் வீசுவதற்குச் சிந்தித்தான். 40

யுடைய யானைபோல் ஏறி அமர்ந்தான். குடையும் கொடியும் எழுந்து முன்னே செல்ல, வீரர் பலர் தொழுத கையினராய்ச் சூழ்ந்துவர, யமதருமன் வந்தான்.

38. காசியில் மார்க்கண்டன் இருந்த இடத்தை யடைந்தான். செக்கச் சிவந்த தலையும், காரெனக் கறுத்த மேனியும், எரிவினால் எரியும் கண்ணும், பாசமும் தண்டும் சூலமும் ஏந்திய கைகளும் உடையவனாய் மார்க்கண்டன் கண்ணெதிரே தோன்றினான்.

39. "தேவர் தடுப்பினும், முத்தொழில் புரியும் மூவர் தடுப்பினும், மற்றும் வலிமை சான்றவர் ஏவர் தடுப்பினும், இன்று உன் உயிரைக் கொண்டே செல்வேன்."

40. என்று இடிபோல் முழங்கினான் யமன். வா என்று முறையாக அழைத்தால் இவன் வரமாட்டான்

எறிந்தான் பாசம் ஈர்த்திடல் உற்றான் இதுபோழ்தில்
அறிந்தான் தானும் ஈசனை ஏத்தி அடிநீழல்
பிறிந்தான் அல்லன் மற்றினி இந்தப் பெருமைந்தன்
மறிந்தான் அன்றோ என்றிமை யோரும் மருளுற்றார்.

மதத்தான் மிக்கான் மற்றிவன்
மைந்தன் உயிர்வாங்கப்
பதைத்தான் என்னா உன்னி
வெகுண்டான் பதிமூன்றும்
சிதைத்தான் வாமச் சேவடி
தன்னால் சிறிதுந்தி
உதைத்தான் கூற்றன் விண்முகில்
போல்மண் ணுறவீழ்ந்தான். 42

மைந்த நீநமை வழுத்தி மாசிலா
முந்து பூசனை முயன்ற தன்மையால்
அந்தம் இல்லதோர் ஆயுள் நிற்குயாம்
தந்து நல்கினாம் என்று சாற்றினான். 43

என்றெண்ணி முன்னே போந்து பாசத்தை வீசத்துணிந்தான்.

41. அவ்வாறே பாசத்தை வீசிப் பற்றி இழுத்தான். அதனை அறிந்த மார்க்கண்டன் ஈசனைத் துதித்து அவன் இணையடி பிரியாதிருந்தான். அக்காட்சியைக் கண்ட தேவரும் 'மைந்தன் இறந்தான் அன்றோ' என்று மறுகி நின்றார்.

42. மதங்கொண்ட யமன் மைந்தனது உயிர்வாங்க முனைந்தான் என்று திருவுளங்கொண்டு திரிபுரம் எரித்த தேவதேவன் சீற்றமுற்றார்; இடது சேவடியால் உந்தி உதைத்தார். கூற்றுவன் கருமேகம்போல் தரையிடைக் கடிது வீழ்ந்தான்.

43. அந்நிலையில் ஈசன் "மைந்தா! நீ நம்மைப்போற்றி மாசற்ற பூசனை புரிந்தாய். ஆதலால் அந்தமற்ற ஆயுளை உனக்குத் தந்தோம்' என்று அருளினார்.

அப்பெரும் திருமகன் ஆற்றும் நோன்பினால்
தப்பரும் விதியினைத் தணந்து கூற்றுவன்
துப்பினை அகற்றியே தொலைவு கண்டுபின்
எப்பொழு தத்தினும் இறப்பின் றாயினான். 44

அன்னது சரதமே
அறிதிர் ஆதலால்
இன்னமும் மொழிகுவன்
இயற்றும் நோன்பென
முன்னுறு காசிப
முனிவன் செப்பலும்
நன்னய மாயவள்
நகைத்துக் கூறுவாள். 45

மாயையின் உபதேசம்

மறைதெரி முனிவநீ வாய்மை யாகிய
உறுதியை மொழிந்தனை உயர்ந்த வீடுறும்
அறிவுடை முனிவரர்க் கன்றி நாம் அருள்
சிறுவருக் கித்திறம் செப்பல் ஆகுமோ. 46

---

44. அப்பெருமை வாய்ந்த திருமகன் ஆற்றிய தவத்தால் விலக்கலாகாத விதியையும் கடந்தான்; கூற்றுவனது ஆற்றலையையும் அழித்தான்; என்றும் இறவாத பெரும் பேறு பெற்றான்.

45. இது மெய்யான சரித்திரம். இதனை அறிந்து கொள்ளுங்கள்; இன்னமும் சொல்கின்றேன். தவம் புரியுங்கள்" என்று காசிபன் கூறினான். அப்போது நளினம் வாய்ந்த மாயை நகைத்தாள்.

46. "மறை யறிந்த முனிவரே! நீர் உண்மையாகிய உறுதியைத்தான் கூறினீர். அது மேலான வீட்டின்பத்தை நாடும் முனிவர்களுக்குத் தகுமேயன்றி நாம் பெற்ற மைந்தருக்கு அந்நெறியைச் சொல்லலாமோ?

நன்பெருஞ் செல்வமும் நவையில் கொற்றமும்
இன்பமும் அழிவிலா திருக்கும் ஆயுளும்
மன்பெருஞ் சீர்த்தியும் மறுவில் வாழ்க்கையும்
அன்புடை இனையவர் அடைதல் வேண்டுமால். 47

பிறந்தநல் லுயிர்க்கெலாம் பெருமை நல்கிய
இறந்ததோர் பொருண்மைய திரண்டின் வன்மையும்
அறிந்தவர் தெரிவரேல் அரிய கல்வியில்
சிறந்தது திருவெனச் செப்பல் ஆகுமால். 48

அளப்பரும் விஞ்சையே யன்றி மேன்மையும்
உளப்படு தருமமும் உயர்ந்த சீர்த்தியும்
கொளப்படு கொற்றமும் பிறவும் கூட்டலால்
வளத்தினிற் சிறந்தது மற்றொன் றில்லையே. 49

செங்கண்மால் அயன் முதல் தேவர் யாவரும்
எங்கள்நா யகன்என இறைஞ்ச மேதகு
கங்கைவார் சடைமுடிக் கடவுள் போற்றியே
பொங்குதீ வேள்வியைப் புரிதிர் பற்பகல். 50

---

47. நம் காதல் மைந்தர்கள், சிறந்த பெருஞ்செல்வமும், குற்றமற்ற வெற்றியும் பெறுதல்வேண்டும்; ஐம்பொறிகளால் அனுபவிக்கத் தக்க இன்பமெல்லாம் அடைதல் வேண்டும்; அழிவற்ற ஆயுளும், நிலைபெற்ற புகழும், மாசிலா வாழ்வும் பெறுதல்வேண்டும்.

48. இவ்வுலகிற் பிறந்த உயிர்க்கெல்லாம் பெருமையளிக்கும் சிறந்தபொருள்கள் இரண்டு; ஒன்று கல்வி, மற்றொன்று செல்வம். இவற்றின் திறத்தை ஆராய்வோமாயின் அருமையான கல்வியினும் செல்வமே சிறந்ததென்று சொல்லத்தகும்.

49. செல்வமே அளவிறந்த கலைஞானத்தையும் மேன்மையையும் அளிக்கும்; அறத்தையும் ஆன்ற புகழையும் ஈட்டும்; கொற்றமும் பிறவும் கூட்டும். ஆதலால் செல்வத்திற் சிறந்தது வேறொன்றில்லை.

50. எனவே, அருமை மைந்தர்காள்! திருமாலும் பிரமனும் மற்றுமுள்ள தேவர்களும் இறைவன் என

இன்னதோர் காலையில் ஈன்ற மாயவள்
தன்னொடு தந்தையைத் தாழ்ந்து போற்றியே
அன்னவர் விடுத்திட அவுணர் மேலையோன்
பின்னவர் தம்மொடும் பெயர்வுற் றேகினான். 51

ஏகிய காலையில் இணையில் மாயவள்
மோகமொடு அயலுறும் முனியை நோக்கியே
போகுவன் யான்இனிப் புதல்வர்ப் பேணுவான்
நீகவ லேல்என நிறுவிப் போயினாள். 52

சூரன் செய்த வீர வேள்வி

வழிமுறை பயக்க நோற்கும்
வடபுலம் தன்னில் ஏகிப்
பழுமர வனத்தில் ஆங்கோர்
பாங்கரிற் குறுகிச் சூரன்
அழல்கெழு மகத்தை ஆற்ற
அயுதயோ சனையுள் வைத்துச்
செழுமதில் அதுசூழ் பான்மை
செய்திடச் சிந்தை செய்தான். 53

வணங்கும் ஈசனைப்போற்றி, வெம்மை சான்ற வேள்வியை நெடுங்காலம் செய்வீராக."

51. என்று மாயை அறிவித்த அளவில் அசுரர் தலைவனாகிய சூரன், ஈன்ற தாயையும் தந்தையையும் தொழுது போற்றினான்; அவரிடம் விடைபெற்றுத் தம்பியவர் இருவரோடும் வேள்வி செய்யப் புறப்பட்டான்.

52. அன்னவர் சென்ற பின்னர், மோகமுற்றுத் தன் அருகே நின்ற முனிவரை நோக்கி, "ஐயனே! நான் மைந்தரைப் பாதுகாப்பதற்குச் செல்கிறேன்; நீர் மனக் கவலை ஒழிக" என்று கூறி மாயை பிரிந்து போயினாள்.

53. அசுரர் குலத்திற்கு ஆக்கம் தரும் வேள்வி செய்யுமாறு சூரன் வடதிசையிற் போந்தான்; ஆலமரங்கள் நிறைந்த வனத்தின் அருகே வெய்யதோர் வேள்வி செய்யக் கருதினான்; பதினாயிரம் யோசனை அளவு கொண்ட நிலத்தை உயர்ந்த மதிலால் வளைக்க முன்னினான்.

மூவகை வேதியும் ஆனபின்
வேள்வியை முயல்வானுய்
ஆவதோர் பல்பொருள் வேண்டி
நினைந்தனன் அருள் யாயைப்
பாவனை பண்ணலும் அங்கது
கண்டனள் பரிவெய்தித்
தேவர்கள் தேவன தின்னரு
ளால் இவை சேர்விப்பாள். 54

வேதி யெய்தி விதியுளி அர்ச்சனை
யாதும் ஓர்குறை இன்றி இயற்றியே
மாதோர் பங்குடை வள்ளலை உன்னியோர்
ஏதில் வேள்வி இயற்றுதல் மேயினுன். 55

கண்ணு தற்பரன் அருள்செயாத்
தன்மையைக் கருத்தில்
எண்ணி இச்செயற் குறுவனே
சிவன்என இசையாப்
பண்ணும் அத்தொழில் பின்னவர்
தங்கள்பாற் பணித்து
விண்ண கத்தின்மீச் சென்றனன்
கடவுளர் வெருவ. 56

---

54. மூவகைப்பட்ட ஓமகுண்டங்களும் அமைத்த பின்பு, வேள்வி இயற்றுதற்கு வேண்டிய பொருள்களெல்லாம் தரும்படி தாயாகிய மாயையை மனத்திலே நினைத்தான். அவளும் அன்புகொண்டு சிவனருளால் அப்பொருள்களைச் சேர்ப்பித்தாள்.

55. சூரன் ஓமகுண்டத்தை அடைந்து, முறையாக அர்ச்சனையெல்லாம் குறைவின்றிச் செய்து, மங்கை பங்கனுகிய ஈசனை மனத்தில் எண்ணி மாசற்ற மகம் புரிவானுயினுன்.

56. (நெடுங்காலமாக வேள்வி செய்தும்) ஈசன் திருவருள் செய்தானல்லன். அதனை அறிந்த சூரன் "இதற்கெல்லாம் சிவபெருமான் இசைந்து அருள் செய்வாரோ" என்று கூறி, வேள்வித் தொழிலைத் தம்பியரிடம்

வான கத்திடை நீற்புறு சூரபன் மாவாம்
தான வர்க்கிறை வாள்கொடே ஈர்ந்துதன் மெய்யின்
ஊன் அனைத்தையும் அங்கிமேல் அவியென ஓச்சிச்
சோனை யொத்ததன் குருதியை இழுதெனச் சொரிந்தான்.

ஆண்டொர் ஆயிரம் இம்மகம் அந்தரத் தியற்ற
நீண்ட மாலுடன் நான்முகன் தேடரும் நிமலன்
ஆண்டும் வந்திலன் சூரன்அத் தன்மைகண் டழுங்கி
மாண்டு போவதே இனிக்கடன் எனமனம் வலித்தான்.

உன்னி இத்திறம் சூரபன் மாவெனும் ஒருவன்
வன்னி சுற்றிய ஆதிகுண் டத்திடை வதிந்து
செந்நி றத்ததாய் ஆணையால் அங்கியிற் சிதையாக்
கொன்னு னைத்தலை வச்சிர கம்பமேற் குதித்தான். 59

தம்பியர் புலம்பல்

சிங்க முகனும் திறல்கெழுவு தாரகனும்
தங்கள் முதல்வன் தவறுற் றதுநோக்கி
அங்கண் அரற்ற அதுகண்ட தானவர்கள்
பொங்கும் கடல்போல் பொருமிப் புலம்பினரே.

விட்டு, வானவர் அச்சம் கொள்ள விண்ணிலே பறந்தெழுந்தான்.

57. ஆகாயத்தில் நின்று, சூரன் தன் உடம்பிலுள்ள தசையெல்லாம் வாளால் அறுத்து வேள்வித் தீயிலே அவிர்ப்பாகமாகச் சொரிந்தான்; மழைபோல் குருதியை நெய்யாகப் பொழிந்தான்.

58. இவ்வண்ணம் ஆயிரம் ஆண்டுகளாக ஆகாயத்தில் நின்று ஆகுதி செய்தும் தேவதேவன் தோன்றினான் அல்லன்; அதுகண்டு சூரன் மனம் வருந்தி "இனி மாண்டு போவதே என் கடன்" எனத் துணிந்தான்.

59. அவ்வாறே நெருப்புச் சூழ்ந்த முதற்குண்டத்தில், தாயாகிய மாயையின் தவவலிமையால் எரியாது நின்ற கூரிய நுனியுடைய வச்சிர கம்பத்தின்மேல் குதித்தான்.

60. தம்பியராகிய சிங்கமுகனும் தாரகனும் முன்னவன் முடிந்தது கண்டு ஏங்கி அழுதார்கள். இருவர் துயரத்தையும் அறிந்த அசுரர் யாவரும் பொங்கும் கடல்போல் பொருமிப் புலம்பினர்.

நின்றதொரு காலை நிருதர் உடன்அரற்றித்
துன்றுதுயர் மூழ்கிச் சோர்கின்ற சீயமுகன்
நன்றெனுயிர் போக நானிருப்ப தேஇங்ஙன்
என்று கடிதுமனத் தெண்ணி எழுந்தனனே. 61

இறைவன் தோன்றி வரந்தருதல்

கண்ட கறைமிடற்றுக் கண்ணுதலோன் சுந்தரனை
விண்டு முதலோர் வியப்பவே வெண்ணெயில்ஆட்
கொண்ட தொருபனவக் கோலம் தனைத்தரித்துத்
தண்டும் ஒருகை தனில்ஊன்றி வந்தனனே. 62

அங்கண் மகவேதி அணித்தாக வேகுறுகிச்
சிங்க முகனைச் சிவபெருமான் கண்ணுற்றே
இங்கு மிகநீர் எவரும் இரங்குகின்றீர்
நுங்கள் பரிசு நுவலும் எனமொழிந்தான். 63

மொழிந்த காலை அங்கண்நின்ற
முக்கண் இறைநும் முன்னோன்போல்
ஒழிந்து நீரும் மாயாதே
உமது சூரன் தனை இன்னே

---

61. அப்பொழுது அசுரர்களோடு அழுது சோர்ந்த சிங்கமுகன், 'அந்தோ! என் உயிராகிய தமையன் இறந்தான்; இனி நான் இங்கு இருத்தல் தகுமோ'' என்று எண்ணி (நெருப்பிலே குதிக்க) எழுந்தான்.

62. அது கண்ட சிவபெருமான், திருமால் முதலிய தேவர்கள் வியக்கத் திருவெண்ணெய் நல்லூரில் சுந்தர மூர்த்தியைத் தடுத்தாட்கொள்ள வந்தாற்போன்று விருத்த வேதிய வடிவங்கொண்டு, தண்டூன்றி நடந்து வந்தார்.

63. அங்கு அமைந்த ஓமகுண்டத்தின் அருகே சென்று சிங்கமுகனை நோக்கி ''இங்கு எல்லோரும் வருந்துகின்றீர்களே! என்ன நேர்ந்தது' என்று வினவினர்.

64. நிகழ்ந்ததையெல்லாம் சிங்கமுகன் சொல்லக் கேட்ட பெருமான் "சூரனைப்போல் நீங்கள் இறந்துபோக வேண்டாம். உங்கள் தலைவனை இப்பொழுதே வேள்வித்

அழிந்த தியுள் நின்றெழுவித்
தருள்செய் கின்றும் அதுகாண்டிர்
கழிந்த சோகம் விடுதிர்எனுக்
கங்கை தன்னை நினைந்தனனே. 64

மேலா கியவிண் ணுலகனைத்தும்
விரைவிற் கடந்து மேதினியின்
பாலாய் எங்கள் பிரான்பதங்கள்
பணிந்து பணியாற் படர்செந்தீ
ஏலா நின்ற நடுக்குண்டத்து
இடையே புகலும் எறிகடல்வாய்
ஆலா லம்வந் துதித்ததென
அவுணர் கோமான் ஆர்த்தெழுந்தான். 65

தொன்மை போல வேதியினில்
சூர பன்மாத் தோன்றலும் அத்
தன்மை கண்ட அரிமுகனும்
தார கப்போர் வீரனுமாய்
இன்மை கொண்டோர் பெருவளம்பெற்
றென்ன மகிழ்வுற் றெல்லையிலா
வன்மை யெய்திக் கடிதோடி
மன்னன் பதமேல் வணங்கினரே. 66

தியினின்றும் எழுப்பித் தருவோம்! துயர் ஒழிக' என்று கூறிக் கங்கையை மனத்திலே கருதினார்.

65. கங்கை யாறு புறப்பட்டது; விண்ணுலகை யெல்லாம் விரைவிற் கடந்தது; நிலவுலகிற் போந்து ஈசன் திருவடியை வணங்கிற்று; அவர் பணித்தவாறே ஓங்கி எரிந்த ஓமகுண்டத்தின் இடையே பாய்ந்தது. அந்நிலையில் பாற்கடலின் நின்றும் எழுந்த ஆலகாலம் போல் அசுரர் தலைவனாகிய சூரன் ஆரவாரித்து எழுந்தான்.

66. முன்போலவே தோன்றினான் சூரன். அவனைக் கண்ட சிங்கமுகனும் தாரகனும் பெருஞ்செல்வம் பெற்ற வறியவர்போல் மகிழ்வுற்றார்; அளவிறந்த ஊற்றம் பெற்றார்; விரைந்து ஓடி அவன் பாதம் பணிந்தார்.

அரந்தைதனை இகந்த இரு துணைவர்களும்
பாங்கர் உற அவுணர் சேனை
பரந்துபல வாழ்த்தெடுப்பச் சூரபன்மன்
திகழ்வேலை படியும் வானும்
நிரந்தபுனற் கங்கைதனை வருவித்து
மறையவன்போல் நின்ற எம்மான்
கரந்துதனை உணர்கின்ற உருவினொடு
தோன்றினான் ககனம் மீதே. 67

நின்றுபுகழ் சூரபன்மன் முகம்நோக்கி
நமையுன்னி நெடிது காலம்
வன்திறல்மா மகம்ஆற்றி எய்த்தனையால்
வேண்டுவதென் வகுத்தி யென்னப்
பொன்திகழும் மலர்க்கமலப் பொருட்டுறைவோன்
முதலியபுத் தேளிர் யாரும்
இன்றெமது தலைமையெலாம் போயிற்றால்
என இரங்க இதனைச் சொல்வான். 68

கொன்றாரும் புலிப்பாலாய்ப் பலபுவனம்
கொண்ட அண்டக் குழுவுக் கெல்லாம்
மன்னாகி உறல்வேண்டும் அவை காக்கும்
தனியாழி வரனும் வேண்டும்

---

67. துன்பம் ஒழிந்த தம்பியர் இருவரும் அருகே நிற்க. விரிந்த பெருஞ்சேனை வாழ்த்துரை வழங்க, சூரன் சிறந்துவிளங்கினான். அவ்வேளையில், கங்கையாற்றை வருவித்து வேதியன்போல் நின்ற விமலன் மறைந்து அன்னார் கருதிய சிவவடிவத்திற் காட்சியளித்தார்.

68. ஈசனைப் போற்றிப் புகழ்ந்து நின்றான் சூரன். அப்போது அவன் முகம் பார்த்து, "நீ நம்மைக்குறித்து நெடுங்காலம் பெருவேள்வி செய்து இளைத்தாய்; உனக்கு என்னவரம் வேண்டும்" என வினவினார் சிவபெருமான். பிரமன் முதலிய வானவர் யாவரும் தம் பெருமை ஒழிந்ததென்று வருந்தி நிற்க, சூரன் கூறலுற்றான்.

69. "திண்ணிய பிருதிவி பூதத்திலுள்ள புவனங்கள் பலவும்கொண்ட அண்டங்கள் அனைத்திற்கும் யான்

உன்னுமுன் அவையனைத்தும் செல்வதற்கு
ஊர்திகளும் உதவல் வேண்டும்
எந்நாளும் அழியாமல் இருக்கின்ற
மேனியும் எற்கு ஈதல் வேண்டும். 69

அலையாழி மிசைத்துயிர்கூர் பண்ணவனே
முதலோர்கள் அமர்செய் தாலும்
உலையாது கடந்திடுபோர் ஆற்றலொடும்
பலபடையும் உதவல் வேண்டும்
தொலையாமே எஞ்ஞான்றும் இருந்திடலும்
வேண்டும்எனச் சூரன் வேண்டக்
கலையார்வெண் மதியிலைச்சும் செஞ்சடிலத்
தனிக்கடவுள் கருணை செய்வான். 70

மண்தனக்கு ஆயிரகோடி அண்டங்கள்
உளவாகும் மற்ற வற்றுள்
அண்டம்ஓர் ஆயிரத்தெட்டுகம் நூற்றெட்டு
ஆள்கஎன அருளால் நல்கி
எண்தொகைபெற் றிடுகின்ற அவ்வண்டப்
பரப்பெங்கும் ஏகும் வண்ணம்
திண்திறல்பெற் றிடுகின்ற இந்திரஞா
லமதென்னும் தேரும் நல்கி. 71

அரசனுதல்வேண்டும். அவற்றைக் காக்கும் ஆக்ஞா சக்கரமும் அருளல்வேண்டும்; அண்டங்கள்தோறும் செல்வதற்கு மனோவேகமுடைய வாகனங்கள் வேண்டும்; என்றும் அழியாத உடலும் அளித்தல் வேண்டும்.

70. பாற்கடலிற் கண்வளரும் பரந்தாமன் முதலியோர் போர் செய்தாலும் அன்னுரை வெல்லுதற்குரிய வெம்படைகள் வேண்டும். அழிவின்றி என்றும் நான் வாழ வேண்டும்'', எனச் சூரன் விண்ணப்பம் செய்தான். ஈசன் கருணை கூர்ந்து வரமளிப்பாராயினர்.

71. ''பிருதிவி தத்துவத்தில் ஆயிரங்கோடி அண்டங்கள் உண்டு; அவற்றுள் ஆயிரத்தெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகம் நீ அரசாள்வாயாக'' என்று வரம் தந்து, அவ் அண்டங்களைப் பார்த்து வருவதற்கு இந்திரஞாலம் என்னும் தேரும் வழங்கினர்.

எண்ணுபல புவனங்கள் கொண்ட அண்டத்
தொகைதன்னை என்றும் போற்றக்
கண்ணனது நேமியினும் வலிபெறும்ஓர்
அடலாழி கடிதின் நல்கி
அண்ணலுறு சினஏற்றுக் கோளரிஊர்
தியும் நல்கி அகிலத் துள்ள
விண்ணவர்கள் யாவருக்கும் அன்றுமுதல்
முதல்வனும் மேன்மை நல்கி. 72

மேற்றிகழும் வானவரைத் தானவரை
ஏனவரை வெற்றி கொள்ளும்
ஆற்றலொடு பெருந்திறலும் பாசுபத
மாப்படையே ஆதி யாகத்
தோற்றமுறு கின்றதெய்வப் படையனைத்தும்
எந்நாளும் தொலைந்தி டாமல்
ஏற்றமிகும் வச்சிரமா கியமேனி
யும்உதவி இதற்குப் பின்னர். 73

தேவர் யாவரும் சென்று தொழப்படும்
மூவர் ஆகி மொழிந்திடும் துங்கனைத்
தாவி லாதநம் சத்தியொன் றேயலால்
ஏவர் வெல்பவர் என்று விளம்பிமேல். 74

---

72. மேலும் அண்டங்கள் ஆயிரத்தெட்டையும் காக்கும் வண்ணம் திருமாலின் நேமிப்படையினும் வலியதோர் ஆழிப்படை அளித்தார்; சிங்கவாகனமும் தந்தார்; அன்று முதல் அகில லோகத்திலுள்ள வானவர்க்கும் தலைவனாயிருக்கும் தகுதியும் வழங்கினார்.

73. விண்ணுலகில் வாழும் வானவரையும், தானவர், ஏனவர் முதலிய யாவரையும் வெல்லுதற்குரிய வீரமும், பாசுபதம் முதலிய சிறந்த தெய்வப்படைகளும், என்றும் அழியாமல் ஏற்றமுறும் வச்சிர மேனியும் அளித்தார். பின்னர்,

74. (சூரன் முதலிய மூவரையும் நோக்கி) 'தேவர் எல்லாம் வந்து வணங்கும் மூவர் ஆகிய உம்மை ஈறிலாத

ஈறு ருத இரதமும் தன்பெயர்
கூறு தெய்வப் படையும் கொடுத்திடா
வேறு வேறு மிகஅருள் செய்துமேல்
ஆறு சேர்சடை ஆண்டகை ஏகினன். 75

கண்ண கன்புயக் காவலன் தானைகள்
மண்ணும் வானமும் மாதிர எல்லையும்
தண்ண றச்செலத் தம்பியர் தம்மொடும்
எண்ணி வேள்வி இருங்களம் நீங்கினன். 76

சூரனுக்குச் சுக்கிரன் உபதேசித்தல்

கேட்டு ணர்ந்திடு கேழ்கிளர் தேசிகன்
வாட்டம் நீங்கி மகிழ்நறை மாந்தியே
வேட்டம் எய்தி விரைந்துதம் சீடர்தம்
கூட்ட மோடெதிர் கொண்டு குறுகவே. 77

உற்றதோர் மேன்மை நாடி
உன்னை நீ பிரமம் என்றே
தெற்றெனத் தெளிதி மற்றத்
திசைமுகன் முதலோர் தம்மைப்

நம் சக்தி யொன்றே யன்றி யாவரே வெல்ல வல்லார்'' என்று திருவாய் மலர்ந்து,

75. அழிவற்ற தேரும், தம் பெயர்தாங்கிய தெய்வப்படையும் கொடுத்து, மூவருக்கும் தனித்தனி அருள் புரிந்து ஈசனுர் மறைந்தருளினுர்.

76. விரிந்த தோள்களையுடைய சூரன் தம்பியோடு வேள்விச்சாலையினின்று புறப்பட்டான். அசுரப்படை மண்ணும் விண்ணும் எண்திசையும் நெருங்கிச் சென்றது.

77. சூரன் வரம்பெற்று வருதலை அறிந்தார் சுக்கிரன்; வாட்டம் நீங்கினுர்; இன்பம் என்னும் மதுவை உண்டார்; ஆசையோடு விரைந்தெழுந்தார்; மாணவ கணங்களோடு சூரனை எதிர்கொண்டார்.

78. (அடிபணிந்து எழுந்த சூரனை அன்புடன் நோக்கி வரம்பெற்றுயர்ந்த வீரனே) ''உனது மேன்மையை உணர்ந்து நீயே பிரமம் என்று தெளிக; பிரமன் முதலிய தேவர்களே மேலோர் என்று பணிதலை ஒழிக; வானவர்

பற்றலை மேலோர் என்று
பணியலை இமையோர் உங்கள்
செற்றவர் அவரை வல்லே
செறுமதி திருவும் சிந்தி. 78

இந்திரன் என்போன் வானோர்க்
கிறையவன் அவனே யென்னல்
அந்தமில் அவுணர் தங்கள்
ஆருயிர் கொண்டான் அன்னான்
உய்ந்தனன் போகா வண்ணம்
ஒல்லையில் அவனைப் பற்றி
மைந்துறு நிகளம் சேர்த்தி
வன்சிறை புரிதி மாதோ. 79

சிறையினை இழைத்துச் செய்யும்
தீயன பலவும் செய்து
மறைபுகல் முனிவர் தம்மை
வானவர் தம்மைத் திக்கின்
இறையவர் தம்மை நாளும்
ஏவல்கொண் டிடுதி அன்னார்
உறைதரு பதங்கள் எல்லாம்
உதவுதி அவுணர்க் கம்மா. 80

உமது குலப்பகைவர். அன்னார் செல்வத்தை யழித்து அவரைச் சிறையில் இடுக.

79. இந்திரன் என்பவன் வானவர்க்கு அரசன்; சற்றுமுன் எண்ணிறந்த அசுரரின் உயிர் கவர்ந்தவன் அவனே: தப்பிப் போகாமல் அவனைப் பிடித்து, விலங்கினாற் பிணித்து விரைவிலே சிறை யிடுக.

80. சிறைக்கோட்டத்தில் அவனை அடைத்துக் கொடுமைகள் பலவும் செய்திடுக. வேதம் ஓதும் முனிவரையும் தேவரையும் திக்குப் பாலரையும் தினந்தோறும் ஏவல் கொண்டிடுக; அவர் பதவிகளையெல்லாம் பறித்து அசுரர்க்கு அளித்திடுக.

கொலையொடு களவு காமம்
குறித்திடு வஞ்சம் எல்லாம்
நிலையெனப் புரிதி அற்றால்
நினக்குமேல் வருந்தீது ஒன்றும்
இலைஅவை செய்தி டாயேல்
இறைவநீ விரும்பிற் றெல்லாம்
உலகிடை ஒருங்கு நண்ணா
உனக்கெவர் வெருவும் நீரார். 81

வண்துழாய் மிலைச்சும் சென்னி
மால்விடைப் பாகன் தந்த
அண்டம் ஆயிரமேல் எட்டும்
அனிகமோடு இன்னே ஏகிக்
கண்டுகண்டு அவண்நீ செய்யும்
கடன்முறை இறைமை யாற்றி
எண்திசை புகழ மீண்டே
ஈண்டுவீற் றிருத்தி என்றான். 82

---

81. கொலை, களவு, காமம் என்னும் மூன்றும் குறிக் கொண்டு செய்க. வஞ்சனை யெல்லாம் இயற்றிடுக. அதனால் வருங் கேடொன்றும் இல்லை: அவ்விதம் செய்யா விடில் அரசே, நீ கருதியதெல்லாம் கைகூடமாட்டாது. அன்றியும் எவரும் உனக்கு அஞ்சமாட்டார்கள்.

82. வளமான துளசிமாலையை முடியிலே யணிந்த திருமாலை இடபவாகனமாக வுடைய சிவபெருமான் தந்த அண்டங்கள் ஆயிரத்தெட்டையும் இன்றே சேனையோடு சென்று கண்டு, அங்கு உன்னரசுரிமையைச் செலுத்தி மீண்டு வந்து இவ்வண்டத்திலே திக்கெலாம் புகழவீற் றிருப்பாயாக" என்று கூறினார். (குருவின் வாசகத்தைக் கேட்டு மகிழ்வுற்ற சூரன் அவரிடம் விடைபெற்றுச் சென்றான்.)

83. சிவபெருமான் அருளால் மைந்தர் மூவரும் பெற்ற பெருவரங்களையும் வலிமையையும் மனத்தினுள்ளே

மாயையின் உபதேசம்

அந்தி வார்சடைக் கண்ணுதற் கடவுள்தன் அருளால்
மைந்தர் மூவரும் பெற்றதொல் வரங்களும் வலியும்
சிந்தை உள்ளுற நாடியே அளியொடும் சேணில்
வந்து தோன்றினள் தொல்லைநாள் நோற்றிடு மாயை.

தோன்றும் எல்லையின் முந்துறக் கண்டு வெஞ் சூரன்
ஆன்ற தம்பியர் தம்மொடும் அசமுகி யோடும்
ஊன்றும் அன்பொடு பணிதலும் அன்னை தன் உள்ளம்
ஈன்ற ஞான்றினும் உவந்தனள் ஆசிகள் இசைத்தாள்.

ஆசி கூறியே வேள்வியிற் செய்கையும் அதனுக்கு
ஈசன் நல்கிய வரங்களும் கேட்டனன் ஈண்டு
நேச மோடுமைக் காணிய வந்தனன் நீவிர்
வாச வன்முத லோர்தமை வெல்லுதிர் வலியால். 85

வென்ற பின்னர்எவ் உலகமும் புரந்து மேதினியில்
என்றும் வாழுதிர் மாயைகள் வேண்டிடின் என்னை
ஒன்றும் அன்புடன் உன்னுதிர் உன்னிய பொழுதே
சென்று வெஃகிய தன்மைகள் செய்துயான் முடிப்பேன்.

நினைத்து, மிகுந்த அன்புடன் மாயை வானத்தில் வந்து தோன்றினாள்.

84. தாயைக் கண்ட சூரன் தம்பியரோடும், தங்கையாகிய அசமுகியோடும் சென்று அன்புடன் வணங்கினான்; அப்போது மாயை அவரைப் பெற்றபோதிலும் பெரு மகிழ்ச்சியுற்று, ஆசி கூறினாள்.

85. "மைந்தர்காள்! நீர் வேள்வி யாற்றிய விதமும், ஈசன் நுமக்கு அளித்த வரமும் கேட்டேன்; உம்மைக் காண விருப்புற்று வந்தேன். இந்திரன் முதலிய தேவரை யெல்லாம் உமது வலிமையால் வெல்வீராக!

86. வெற்றிபெற்ற பின்னர் எல்லா வுலகங்களையும் ஆண்டுகொண்டு நிலவுலகில் நீடுழி வாழ்வீராக. மாயம் புரியவேண்டுமாயின் என்னை மனத்தில் அன்போடு நினைத்தால் உடனே யான் வந்து நீர் விரும்பியவற்றைச் செய்து முடிப்பேன்.

ஈதலால் உமைப் பிரியலன் டன்முறை யானே
காத லோடுமைக் காணிய செல்குவன் கலந்து
பேதம் நீரற இருத்திரால் ஈண்டெனப் பேசி
மாதும் ஏகினள் மைந்தர்கள் மூவரும் வணங்க. 87

தோடுலா விழிப் பொற்றொடி ஏகலும் சூரன்
கோடி தேருடன் தானவர் தங்களைக் கூவி
நீடு நம்பெருந் தானைகள் நிதிபதிக் கேகப்
பாடல் மாமுரச றைமினோ கடிதெனப் பணித்தான்.

சூரன் திக்கு விசயம் செய்தல்

பூநடுங்கின பணிக்குலம் நடுங்கின புரைதீர்
வான்நடுங்கின மாதிரம் நடுங்கின வரைகள்
தாம் நடுங்கின புணரிகள் நடுங்கின தறுகண்
தீநடுங்கின நிருதர்கோன் பெரும்படை செல்ல. 89

இனைய தன்மையில் சேனைகள் தம்மொடும் இறைவன்
தனதன் மாநகர் வளைந்தனன் அன்னதோர் தன்மை
வினவி ஓடியே தூதுவர் இயக்கர்கோன மேவும்
கனக மாமணிக் கோநகர் சென்றனர் கடிதின். 90

---

87. நெடுங்காலம் உம்மை நான் பிரிந்திருக்கலாற்றேன். காதலோடு யானே வந்து பன்முறை காண்பேன். மூவரும் வேற்றுமையின்றிக் கலந்து வாழ்வீராக!" என்று கூறி மாயை சென்றாள். மைந்தர் அவளை வணங்கி நின்றார்.

88. பின்பு சூரன் அசுரரை அழைத்து "கோடி தேருடன் நமது சேனை குபேரன் நகரத்திற்குச் செல்லுதல் வேண்டும்: விரைவில் முரசறைக" எனப் பணித்தான்.

89. பெரும்படை திரண்டு எழுந்தது. அப்போது பூமி நடுங்கிற்று; பூமியைத் தாங்கும் ஆதிசேடன் குலம் நடுங்கிற்று; வானம் நடுங்கிற்று; எட்டுத் திசையும் நடுங்கிற்று; மலையெல்லாம் நடுங்கிற்று; கடல் நடுங்கிற்று; கனலும் நடுங்கிற்று.

90. இவ்வாறாகச் சென்ற சேனையோடு சூரன் குபேரனது நகரமாகிய அளகாபுரியை வளைந்தான்; அதையறிந்த தூதுவர் விரைந்து ஓடிப் பொன்னகரின் மன்னனிடம் போந்தனர்.

தூதுவர் உரைத்தல் கேளாத்
துன்புகூர் துளக்கம் எய்தி
ஏதமில் அவுணர் தம்மை
யாம்வெலற் கரிது முக்கண்
ஆதிதன் வரங்கொண் டுள்ளார்
அவர்ப்புகழ்ந்து ஆசி செய்வான்
போதுதல் கடனே என்னாப்
பொருக்கென எழுந்து போனான். 91

போயினன் அளகை அண்ணல்
புட்பகம் மீது சென்று
தூயதோர் இயக்க ரோடும்
சூரனைத் தொழுது போற்றி
ஏயின ஆசி கூறி
யான்உமக்கு அடியன் என்ன
நீயினி திருத்தி என்றே
விடுத்தனன் நிருதர் போற்ற. 92

அதுபொழுது அவுணர்கள் அளகை யூடுபோய்
நிதிகளும் மணிகளும் நீடு மானமும்
சிதைவறு படைகளும் தேரும் மாக்களும்
கதிகெழு களிறுடன் கவர்ந்து மேவினார். 93

---

91. தூதுவர் சொல்லிய செய்தி கேட்ட குபேரன் துன்பமுற்றான்; துணுக்கம் உற்றான்; "அசுரரை நாம் வெல்லுதல் அரிது. அன்னார் ஈசனிடம் வரம் பெற்றுள்ளார். ஆதலால் அவரைப் புகழ்ந்து ஆசி கூறப் புறப்படுதலே முறை" என்று விரைந்து எழுந்து சென்றான்.

92. புஷ்பக விமானத்தின் மேல் ஏறிப் போந்து, சிறந்த இயக்கரோடும் சூரன் முன்னின்று வணங்கித் துதித்தான். அளவற்ற ஆசி கூறி "யான் உமக்கு அடியன்" என்றான். அது கேட்ட சூரன் 'இங்கு நீ இனிது வாழ்க' என்று கூறி யனுப்பினான்.

93. அப்போது அசுரர்கள் அளகாபுரியின் உள்ளே புகுந்தார்கள்; பொன்னும் மணியும், விமானங்களும் வேறுள்ள படைக்கலங்களும், தேரும் குதிரையும் யானையும் கவர்ந்து சென்றார்கள்.

அளகையை நீங்கியே ஆசைக்கு ஈறதாய்
உளநகர் எய்தினன் ஒளிரும் நீலமார்
களன்உரு வெய்திய கடவுள் வைகிய
வளநகர் ஈதென மன்னன் உன்னினன். 94

அந்தமா நகரைவிட்டு அவுணர் கோமகன்
முந்துதன் படையொடு முனிந்து கீழ்த்திசை
இந்திரன் நகர்புக இதனை நாடியே
வெந்துயர் அமரர்கோன் விண்ணிற் போயினன்.

போயதை நாடிஅப் புரத்தை முற்றவும்
காயெரி கைக்கொளக் கடிதின் நல்கியே
ஆயிடை அனிகமோடு அகன்று வெய்யசெந்
தீயுறு நகரிடைச் சேறல் மேயினன். 96

சிறந்திடும் அவுணர்கோன் சேனை மாக்கடல்
வறந்திட இப்பகல் மாய்ப்பன் யானென
நிறைந்திடும் அவுணமா நீத்தம் எங்கணும்
செறிந்தனன் வளைந்தனன் சிதைத்தல் மேயினன்.

---

94. அளகாபுரியைவிட்டுக் கீழ்த்திசையின் கோடியி லுள்ள ஈசான நகரத்தை அடைந்தான், சூரன். இது நீல கண்டனாகிய சிவபெருமானது சாரூபத்தைப்பெற்ற ஈசான மூர்த்தி வாழும் வளநகர் என்று மனத்தில் எண்ணினன்.

95. அந்த நகரத்தைவிட்டு, அசுர சேனையோடு சூரன் சீற்றமுற்றுக் கீழ்த்திசையில் உள்ள இந்திரன் நகரத்தை அடைந்தான். அதனை யறிந்து துன்புற்ற இந்திரன் விண்ணுலகத்திற்குப் போய்விட்டான்.

96. அப்போது சூரன் அந்நகரத்தைச் சுட்டெரித்து அசுரர் சேனையோடு அங்கித்தேவன் வாழும் நகரத்திற்குச் செல்லலுற்றான்.

97. 'அசுரர் சேனைப் பெருங்கடலை வற்றவைத்து அழிப்பேன்' என்று அங்கித் தேவன் அவ்வெள்ளத்தை நெருங்கி வளைத்து எரிக்கத் தொடங்கினன்.

உருத்திடு தாரகன் ஒருதன் தேரொடு
மருத்தினும் விசையுற வந்து தானையை
எரித்திடும் அங்கியை எதிர்ந்து செங்கையில்
தரித்திடு கார்முகம் தன்னை வாங்கினான். 98

எடுத்திடும் எல்லையில் எரிகண்டு இங்கிது
தொடுத்திடின் உலகெலாம் தொலைக்கும் என்னையும்
முடித்திடும் நான்முகன் முதலி னோரையும்
படுத்திடும் இன்றெனப் பையுள் எய்தினான். 99

சுடுங்கனற் கடவுளும் சுருக்கித் தன்னுரு
ஒடுங்கினன் ஆகுலம் உற்றுச் சிந்தையுள்
நடுங்கினன் தாரகன் முன்னர் நண்ணினான்
கடுங்கதி யதனொடும் கரங்கள் கூப்பியே. 100

பொறுத்திஎன் பிழையெனப் போற்றி நிற்றலும்
கறுத்திடும் மிடறுடைக் கடவுள் மாப்படை
செறுத்தவன் மீமிசைச் செல்ல விட்டிலன்
மறுத்தனன் சினத்தினை மகிழ்ச்சி எய்தினான்.

---

98. அதைக் கண்டு சீறினான் தாரகன்; தேர்மீது ஏறினான்; காற்றினும் கடிது சென்றான்; எரித்திடும் அங்கியை எதிர்த்தான்; கையில் வில்லை எடுத்து வளைத்தான்.

99. அதனைக் கண்டான் அங்கித்தேவன். அசுரன் இவ்வில்லில் அம்பு தொடுப்பானாயின் இன்றே உலகமெல்லாம் ஒழிந்திடும்; என்னுயிரும் முடிந்திடும்; பிரமன் முதலிய வானவர் குலமெல்லாம் மடிந்திடும்" என்று துன்பம் எய்தினான்.

100. சினம் அடங்கி ஒடுங்கினான்; துயரமுற்று நடுங்கினான்; கரம் குவித்து வணங்கித் தாரகன் முன்னே விரைந்து போந்தான்.

101. "பிழை பொறுக்கவேண்டும்" என்று போற்றி நின்றான். ஈசனுடைய பாசுபதப் படையை ஏந்தி நின்ற தாரகன் பொறுத்தான்; சீற்றம் விடுத்தான்; மகிழ்ச்சியுற்றான்.

தானவர் யாரையும் விலக்கித் தாரகன்
நீநமது ஏவலின் நிற்றி நின்னுயிர்
போனதை உதவினம் போதி போதிநின்
மாநகர் இடையென வல்லை கூறினான். 102

ஆர்த்தன படரும் சேனை
அதிர்ந்தன முரசம் எங்கும்
போர்த்தன கரிதேர் வாசி
புகுந்தன பூழி வேலை
தூர்த்தன துவசம் விண்ணைத்
தொடர்ந்தன தூசி என்னும்
தார்த்தொகை முன்னம் ஏகித்
தண்டன்ஊர் அடைந்த அன்றே. 103

தேற்றமொ டெழுந்துதன் மகிடம் சேர்ந்தனன்
ஏற்றயில் படைஞரும் ஈண்ட ஏகிய
கூற்றுவன் இமைப்பினில் குறுகிச் சூரனைப்
போற்றினன் தொழுதனன் புகலும் ஆசியான்.

---

102. அசுரர் சேனையை விலக்கி, அங்கினித்தேவனை நோக்கி 'நீ எமக்கு ஏவல் செய்திடுக; உன்னுயிரை உனக்குத் தந்தேன். இன்னே நின் நகரத்திற்குச் செல்க' என்றான் தாரகன்.

103. அசுர சேனை ஆரவாரித்து எழுந்து சென்றது. வெற்றி முரசம் விறிட்டு ஒலித்தது; எங்கும் கரிப்படையும், தேர்ப்படையும், பரிப்படையும் நெருங்கி நடந்தன; அவை எழுப்பிய புழுதி கடலைத் தூர்த்தது; அசுரக் கொடிகள் ஆகாயத்தை அடைந்தன; கொடியேந்திய முன்னணிப் படை முந்திச் சென்று எமனுடைய நகரத்தை அடைந்தது.

104. அது கண்ட எமன், தெளிந்த மனத்தோடு எழுந்தான்; எருமைக்கடாவின் மேல் ஏறினான்; சுருங்கிய சேனை சுற்றிச் செல்ல இமைப்பொழுதில் சூரனிடம் போந்தான்; போற்றினான்; தொழுதான்; ஆசி கூறினான்.

திருத்தகு மறலிதன் செய்கை நோக்கியே
அருத்தியின் மகிழ்வுறும் அவுணன் நம்பணி
பரித்தனை ஈண்டுநின் பரிச னத்தொடும்
இருத்திஎன்று அனையனை ஏவிப் போயினான்.

கூற்றுவன் பெருவலி குறைந்த வண்ணமும்
போற்றினன் போயதும் புந்தி உன்னியே
ஆற்றவும் மகிழ்வுறீஇ அனிக மோடுதென்
மேற்றிசை நிருதிமேல் விரைவின் ஏகினான். 106

உன்னினன் தானையோடு ஒருங்கு மேவியே
மன்னவன் எதிர்புகா வழுத்தி மற்றவன்
தன்னடி வணங்கிஉன் தமரி யான்எனப்
பன்னினன் தாரகன் பாங்கர் ஏகினான். 107

அருகுற வருதலும் அவுணர் கோமகன்
நிருதியின் நகரினை நீங்கி ஏகலும்
வருணனும் மருத்துவும் வாரி தன்னினும்
இருள்செறி உலகினும் இமைப்பிற் போயினார்.

---

105. சிறப்பு வாய்ந்த எமனது செய்கையை நோக்கினான் சூரன்; அன்பு கூர்ந்து இன்பமுற்றான். "நமது ஆணையை மேற்கொண்டு நின் பரிவாரங்களுடன் ஈண்டு வாழ்க" என்று பணித்து மேலே சென்றான்.

106. கூற்றுவன் வலியிழந்து குறுகிய தன்மையும், அவன் பணிந்து சென்ற பான்மையும் மனத்தில் எண்ணி மிக மகிழ்ந்த சூரன், தென்மேற்றிசையில் உள்ள நிருதியின் நகரை நோக்கி விரைந்தான்.

107. மாற்றான் வலிமையும், தன் வலிமையும் மனத்தில் எண்ணி ஆராய்ந்த நிருதி தன் சேனையோடு சென்று சூரனைத் துதித்தான்; அவனடி பணிந்தான்; நான் உன் உறவினன் என்றான்; அதற்கு அடையாளமாகத் தாரகன் அருகே சென்று நின்றான்.

108. இவ்வாறு நெருங்கிய உறவு பூண்ட நிருதியின் நகரைவிட்டு நீங்கினான் அசுரர் கோமான். அவன் வருவதை யறிந்த வருணதேவன் கருங் கடலிற் புகுந்தான்; வாயுதேவன் இருளுலகில் ஒளித்தான்.

போதலும் அவரவர் புரத்தைச் சூறைகொண்டு
ஏதமது இயற்றுவித்து எழுவ கைத்தெனும்
பாதல உலகினில் படர்ந்து தானவர்
ஆதியர் போற்றிட அருள்செய் தேகினான். 109

உற்றனன் நாகர்கோன் உலகில் அன்னவன்
செற்றமொ டேசெருச் செய்யத் தானையால்
வெற்றிகொண் டேஅவன் வியந்து போற்றிட
மற்றவன் இருக்கையோர் வைகல் வைகினான்.

அத்தலை உரகர்கோன் அமரர் தந்திட
வைத்திடும் அமுதினை வலிதின் வாங்கியே
மெய்த்தகு தம்பிய ரோடும் மேன்மையால்
துய்த்தனன் அகன்றனன் சூர பன்மனே. 111

பூவுல கிடையே போந்து
புணரியொன் றகன்று மற்றைத்
தீவினை ஒருவிச் சூரன்
சேனைமா நீத்தம் சூழ

---

109. இருவர் நகரையும் சூரன் சூறையாடினான்; கொடுமை யெல்லாம் விளைத்தான்; அப்பால் எழு வகைப் பட்ட பாதாள லோகம் புகுந்தான்; அங்குள்ள அசுரர் முதலியோர் அனைவரும் வணங்கினர்; அவர்க்கு அருள் செய்து மேலும் சென்றான்;

110. ஆதிசேடனது உலகத்தை அணுகினான்; அவன் சீற்றங்கொண்டு எழுந்தான்; போர் புரிந்தான். அவன் சேனையை அசுரர் படை வென்றது. அந்நிலையில் ஆதி சேடன் சூரனை வியந்து போற்றினான். அவன் நகரத்தில் ஒரு நாள் தங்கினான் சூரன்.

111. தேவர்கள் ஆதிசேடனிடம் அடைக்கலமாக ஒப்புவித்திருந்த அமிர்தத்தை அப்போது சூரன் வற் புறுத்தி வாங்கினான்; மெய்யன்பு வாய்ந்த தம்பியரோடு அதனை இன்புற்றுப் பருகினான்; அந்நகரைவிட்டுச் சென்றான்.

112. பூவுலகத்திற் போந்து, உவர்க் கடலையும் தீவ கத்தையும் கடந்து, சேனைப் பெருங் கடல் சூழ்ந்துவரச்

மாவொடு புவனி போற்ற
வரியரா அணையின் நேமிக்
காவலன் துயில்கூர் பாலின்
கடலிடைக் கடிது புக்கான். 112

ஆர்த்திடும் முழக்கம் கேளா
அம்புயத் திருவும் பாரும்
வேர்த்துடல் பதைப்ப அஞ்சி
வெருக்கொடு கரிய மேனித்
தீர்த்தனது அகலத் தூடு
சேர்ந்தனர் தழுவ அன்னோன்
பார்த்தனன் அஞ்சல் என்று
பகர்ந்தனன் துயிலை நீங்கி. 113

சிந்தையில் உன்னும் முன்னம்
திறல்மிகும் உவணர் கோமான்
வந்தனன் அவன்பொன் தோள்மேல்
மடங்கல் ஏறென்னப் புக்குச்
சந்திரன் அனைய சங்கம்
சக்கரம் கதைவாள் சாபம்
ஐந்தெனும் படையும் ஏந்தி
அவுணர்தம் படைமுன் சென்றான். 114

சூரன் சென்றான். திருமகளும் நிலமகளும் துதிக்கப் பாம்பணையில் பள்ளிகொண்டு திருமால் கண் வளரும் திருப்பாற் கடலை அடைந்தான்.

113. அசுரர் செய்த ஆரவாரத்தைக் கேட்டு மங்கையர் இருவரும் வேர்த்து விதிர் விதித்தார்; அச்சமுற்று அஞ்சன வண்ணனைப் பற்றிக்கொண்டார். அந்நிலையில் உறக்கம் தெளிந்தார் திருமால்; அஞ்சேல் என்று இருவருக்கும் அபயம் அளித்தார். (தன் வாகனமாகிய கருடனை நினைத்தார்)

114. அவர் நினைப்பதற்கு முன்னே வலிமை சான்ற கருடன் அங்கு வந்தடைந்தான். அவன் தோள்மீது அரிமான்போல் ஏறினார் திருமால்; சங்கு, சக்கரம், கதை, வாள், வில் என்னும் ஐம்படையும் கொண்டு அசுர சேனையின் எதிரே சென்றார்.

விண்ணுலாம் படிவ மாயோன்
மேதகும் உவணத் தோடு
மண்ணுலாம் கடலாம் என்ன
அவுணரை வளைந்து சுற்றி
எண்ணிலா உருவம் காட்டி
யாவரும் போகா வண்ணம்
அண்ணல்வாம் பகழி சிந்தி
அமர்செய்தான் அமரர் ஆர்ப்ப. 115

அடுசமர் புரியும் எல்லை
ஆங்கவை உருத்து நோக்கி
உடைவதோர் அனிகம் தன்னை
ஒன்றுநீர் அஞ்சல் என்று
வடவரை அனைய ஆற்றல்
மாபெருந் தனுஒன்று ஏந்தி
இடியுறழ் கலிமான் தேர்மேல்
தாரகன் இமைப்பின் வந்தான். 116

எதிர்வரும் அவுணன் தன்மேல்
எண்ணிலாப் பகழி மாரி
விதியினை அளித்த மாயன்
வீசலும் அவற்றை யெல்லாம்

115. கார்மேக வண்ணனாகிய திருமால், கருட வாகனனாய், மண்ணுலகத்தைச் சூழ்ந்த கடல்போன்று அசுரப் படையை வளைந்து சுற்றி, எண்ணிறந்த மாயா வடிவம் காட்டி, பகைவர் எவரும் தப்பிப் போகாதவண்ணம் சரமாரி பொழிந்து போர்புரிந்தார். அது கண்ட தேவர் ஆரவாரித்தனர்.

116. இவ்வாறு கொலைப் போர் புரியும்போது தாரகன் சிற்றமுற்றுப் போர்க்களத்தை நோக்கினான்; சிதறியோடும் சேனையை அஞ்சேல் என்று தேற்றினான்; மேருமலைபோன்ற வலிய வில்லைக் கையில் எடுத்தான்; இடியென முழங்கும் குதிரை பூண்ட தேர்மீது ஏறி நொடிப் பொழுதில் வந்தான்.

117. வந்த தாரகன்மீது திருமால் சரமாரி பொழிந்தார். அவற்றை ஒரு தண்டால் விலக்கித் தன

கதையொடு விலக்கிச் சிந்திக்
கனன்றுமுன் கடிதிற் செல்ல
அதுதனை நோக்கி மாலும்
ஆழியம் படையை உய்த்தான். 117

ஓரிமை ஒடுங்கும் முன்னம்
உலகெலாம் தொலைக்கும் தன்மைப்
போரயில் நேமி தானும்
புராரிதன் வரத்தாற் சென்று
தாரக அசுரன் கண்டம்
தன்னைவந்து அணுகிச் செம்பொன்
ஆரம தாயிற் றம்மா
தவத்தினும் ஆக்கம் உண்டோ. 118

வன்திறற் கடவுள் ஆழி
மணிப்பணி ஆயிற் றென்றால்
வென்றியும் உனதே அன்றோ
வேறினிப் போரும் உண்டோ
உன்திறம் இதுவே என்னில்
உனக்குமுன் னவராய் அங்கண்
நின்றவர் பெருமை தன்னை
யாவர்கொல் நிகழ்த்தற் பாலார். 119

னினான் தாரகன்; சீற்றம் கொண்டு முன்னேறினான். அது கண்ட திருமால் நேமிப் படையை எடுத்து விட்டார்.

118. இமைகொட்டும் நேரத்தில் உலகெலாம் அழிக்கும் தன்மை வாய்ந்த அப்படை சென்று தாரகன் கண்டத்தை அணுகிற்று. ஆயினும் சிவபெருமான் அளித்த வரத்தின் செம்மையால் அது அவன் கழுத்தில் ஒரு பொன்னாரமாக விழுந்தது. ஆஹா! தவத்தினும் வலிய தொன்றுண்டோ?

119. "வலிமை வாய்ந்த தெய்வப் படையாகிய நேமியே மணியாரமாயிற் றென்றால் வெற்றி உனதே யாகும்; இனிச் செய்யும் போரும் உண்டோ? இளையோனாகிய உன் திறம் இதுவாயின் உனக்கு மூத்தவராய் அங்கே நிற்கும் வீரரது பெருமையை யாவரே விரித்துரைக்க வல்லார்?

சங்கரன் மகிழு மாற்றால்
தழல்மகம் பன்னாள் ஆற்றி
உங்களின் வலிபெற் றுள்ளார்
அவுணரில் ஒருவர் இல்லை
இங்குமை வெல்வார் யாரே
எமக்குநீர் தமரே என்னு
மங்கல மரபின் ஆசி
வரம்பில புகன்று போனான். 120

மாதவன் அகன்ற காலை
மற்றுமோர் வையத் தேறித்
தாதவிழ் தொடையல் வாகைத்
தாரகன் தம்முன் நேராய்ப்
போதலும் அவனை மீண்டு
புகுந்தவா றுணர்ந்து புல்லி
ஆதர மகிழ்ச்சி எய்தி
அனிகமோடு அகன்றான் அப்பால். 121

இந்தவாறு அவுணர்கோன் துறக்கத் தேகலும்
முந்திய ஒற்றரில் சிலவர் ஓடியே
வந்தனன் சூரனும் வலியன் தானென
அந்தர நாயகன் அறியக் கூறவே. 122

---

120. ஈசனார் மகிழும் வண்ணம், நெடுங்காலம் கனல் வேள்வி செய்து வரம்பெற்றுள்ளீர்! உங்களினும் வலிமை பெற்ற அசுரர் இவ்வுலகில் எவரும் இல்லை. ஆதலால் உம்மை வெல்ல வல்லவரும் உண்டோ? இனி எனக்கு நீர் உறவினர்'' என்று மங்கல முறையில் அளவற்ற ஆசி கூறிச் சென்றார் திருமால்.

121. திருமால் சென்ற பின்னர், வெற்றி மாலை சூடிய தாரகன் வேறொரு தேர்மீது ஏறினான்; சூரன் முன்னே சென்றான். அவனும் நிகழ்ந்த வெல்லாம் அறிந்து மனமகிழ்ந்து தம்பியைத் தழுவிக் கொண்டான். அப்பால் அசுரசேனை புறப்பட்டது.

122. இவ்வாறு எழுந்த சேனை சுவர்க்கலோகத்தை அடைந்தது. ஒற்றர் சிலர் ஓடிச்சென்று சூரன் வந்தான் என்று இந்திரனிடம் அறிவித்தார்கள்.

அஞ்சினன் உயிர்த்தனன் அலந்து தேம்பினன்
துஞ்சினனே என உணர்வு சோர்ந்துளான்
எஞ்சலில் வன்மைய திகந்து தன்னுடை
நெஞ்சினில் இனையன நினைத்தல் மேயினான்.

அவ்வயிற் போந்திடும் அவுணன் தன்னெதிர்
செவ்விதிற் சென்றுயான் செருவில் நேர்வனேல்
இவ்வுயிர்க் கிறுதியாம் இருப்பனேல் இடர்ப்
பவ்வமுற்று இறந்திடாப் பழியின் மூழ்குவேன்.

இம்முறை வாசவன் எண்ணியே எழீஇக்
கொம்மென மனையுடன் குயில் உருக்கொடே
விம்முறு பீழையன் விண்ணிற் போயினான்
தெம்முனை அவுணர்கள் தேடிக் காண்கிலார். 125

பிடித்தனர் அமரரை அவுணர் பேதுற
அடித்தனர் குற்றினர் அனையர் தானையால்
தடித்திடும் தோள்களைத் தமது கைகளால்
ஒடித்தனராம்என ஒல்லை வீக்கினார். 126

---

123. அங்கிலையில் இந்திரன் அஞ்சினான்; பெருமூச் செறிந்தான்; அலந்து தேம்பினான்; அறிவழிந்து சாம்பினான்; மனத் திண்மை யிழந்து மேல்வருமாறு எண்ணலுற்றான்.

124. "இங்கு வந்திடும் சூரனெதிரே சென்று முறையாக யான் போர் புரிந்தால் இவ்வுயிரை இழப்பேன். அல்லது இறவாதிருந்தால் இடர்க்கடலில் வீழ்ந்து மாயாப் பழியில் மூழ்குவேன்."

125. என்று இந்திரன் நினைந்து விரைந்து எழுந்தான்; இந்திராணியோடு குயில் வடிவங்கொண்டு வானத்திற் பறந்து போயினான். பகைவர்கள் அவ்விருவரையும் எங்கும் தேடினார்; காணாராயினார்.

126. அகப்பட்ட தேவர்களை அசுரர்கள் பிடித்தார்கள்; கலங்க அடித்தார்கள்; கைகளாற் குத்தினார்கள்; அன்னார் பெருந்தோள் நெரிய மேலாடைகளால் நெருக்கி இறுக்கினார்கள்.

தண்ணளி யாவும்இன் றுய தானவர்
விண்ணவர் தங்களை விழுமம் செய்திடா
அண்ணலந் திருவுறும் அரசன் முன்னுறத்
துண்ணென உய்த்தலும் தொழுது போற்றுவார்.

இற்றைஇப் பகல்முதல் என்றும் எங்களுக்கு
உற்றதோர் கடவுள்நீ ஓம்பும் வேந்தும்நீ
மற்றுள தமரும்நீ பலரும் யாம்இனி
மற்றுனது ஏவலை மரபிற் செய்துமால். 128

என்றிவை புகன்று போற்றும்
இமையவர் தம்மை நோக்கி
நன்றுநும் செய்கை என்னு
நகைசெய்து யாப்பு நீக்கி
மன்றநம் பணிமேற் கொண்டு
வைகுதிர் இனிநீர் என்னு
அன்றவர் தம்மை விட்டான்
அழல்மகத்து ஆவி விட்டான். 129

கற்றுணர் கேள்வி யான்மார்க்
கண்டேயன் ஆதி வானோர்
உற்றிடும் பதமாம் தொல்பேர்
உலகமே முதல மூன்றும்

---

127. இரக்கமற்ற அசுரர் வானவரை இங்ஙனம் வருத்திச் சூரன் முன்னே கொண்டு நிறுத்தினர். அந்நிலையில் அன்னார் அவனை வணங்கி,

128 "ஐயனே! இன்றுமுதல் என்றும் எமக்கு அமைந்த தெய்வம் நீயே! எம்மைக் காக்கும் மன்னனும் நீயே! பற்றுடைய சுற்றமும் நீயே! இனி நாங்கள் அனைவரும் நின் ஆணையின்படியே ஏவல் செய்வோம்,"

129. என்று சொல்லித் தொழுது நின்றார்கள். சூரனும், அவர் செய்கையை மெச்சி அகமகிழ்ந்தான்; கட்டவிழ்த்து விடுவித்தான். 'இனி நாம் ஏவிய பணியைச் செய்து வாழ்க! என்று கூறி விடை கொடுத்தான்.

130. பின்பு கல்வி கேள்விகளிற் சிறந்த மார்க்கண்டன் முதலிய மாதவத்தோர் வாழும் மகலோகம், சன

மற்றவர் பரவ நீங்கி
மலரயன் பதத்திற் போகத்
தெற்றெனஅதனைத் தேர்ந்து
திசைமுகன் துணுக்கம் உற்றான். 130

ஆழி மால்கடல் அன்னதொர் சேனை
சூழ வேவரு சூரனை எய்தி
வாழி வாழிய வைகலும் என்னாக்
கேழில் ஆசி கிளத்திய பின்னர். 131

மன்ன நீஇவண் வந்திட மேனாள்
என்ன நோன்மை இயற்றின னேயான்
அன்ன வாறுண ரேன்சிவன் அல்லால்
உன்னி நாடி உணர்ந்துளர் யாரே. 132

அருத்தி எய்தி அயன்தனை அங்கண்
இருத்தி மாயைமுன் ஈந்தருள் மைந்தன்
மருத் துழாய்முடி மன்னவன் வைகும்
திருத் தகும்உல கத்திடைச் சென்றான். 133

லோகம், தவலோகம் என்னும் மூன்று உலகமும் போற்றச் சூரன் பிரமலோகம் போந்தான். அதையறிந்த பிரம தேவன் நடுக்கமுற்றான்.

131. பெருங்கடல் போன்ற சேனைகளின் நடுவே வந்த சூரனிடம் போந்து "அரசே வாழ்க; வாழ்க" என்று ஆசி கூறினான்.

132. "மன்னவா! இங்கு நீ வருவதற்கு நான் என்ன மாதவம் செய்தேனோ! அத்தவத்தின் தன்மையை ஆதி சிவன் ஒருவனேயன்றி யாவரே அறிய வல்லார்"?

133. என்று பேசிய பிரமனிடம் அன்பு கூர்ந்தான் சூரன். பிரமலோகத்தில் அவனை இருக்கும்படி பணித்து, துளவமாலை யணிந்த திருமால் வீற்றிருக்கும் வைகுந்தம் போந்தான்.

அந்த வேலையில் ஆண்டுறும் மாலோன்
வந்து சூரபன் மாவினை எய்தி
நந்தல் இல்லதொர் நாளொடு வாழ்கென்று
அந்தம் இல்பல ஆசி புகன்றான். 134

அரிஅயன் முதலா உள்ள
அமரர்கள் யார்க்கும் தத்தம்
உரியதோர் ஆணை எல்லாம்
உலப்புறாது உதவி வைகும்
பரமனது உலகம் நண்ணிப்
பரிசனம் யாவும் நீங்கிச்
சுரர்புகழ் சூர பன்பன்
துணைவர்க ளோடு போனான். 135

போந்தனன் அமலன் கோயில்
புறங்கடை வாயில் நின்றே
ஆய்ந்திடும் நந்தி எந்தை
அருள்முறை உய்ப்பச் சென்று
காந்தளை அனைய செங்கைக்
கவுரியோடு உறையும் முக்கண்
ஏந்தல்முன் அணுகி ஆர்வத்
திறைஞ்சியே ஏத்தி நின்றான். 136

---

134. சூரனைக் கண்ட மாயோன் எழுந்து வந்து, 'நெடிது வாழ்க' என்று எல்லையற்ற ஆசி கூறினான்.

135. பின்பு, திருமால் பிரமன் முதலாகவுள்ள தேவர்க்குரிய ஆணையெல்லாம் அளித்தருளி தேவதேவனது சிவலோகத்தை அணுகினான் சூரன், தன் பரிசனங்களை யெல்லாம் ஓர் எல்லையில் நிறுத்தித் தம்பியர் இருவரோடும் திருக்கோயிலை நோக்கி நடந்தான்.

136. ஈசனது கோயிலின் கடை வாயிலில் நின்ற சூரனை ஆணைப்படி திருநந்திதேவர் உள்ளே செல்லவிட்டார். காந்தள் மலர் போன்ற கைகளையுடைய கவுரி தேவியோடு வீற்றிருந்தருளும் கண்ணுதற் கடவுளை அணுகி அன்புடன் அடிபணிந்து போற்றி நின்றான் அசுரமன்னன்.

கண்டநஞ் சுடைய அண்ணல்
கருணைசெய்து இனிநீ ஏனை
அண்டமும் சென்று நாடி
ஆணையால் அகிலம் யாவும்
எண்டிசை புகழ மாற்றால்
இறைபுரிந்து இருத்தி என்னப்
புண்டரீ கத்தாள் போற்றி
விடைகொண்டு புறத்து வந்தான். 137

ஏனை அண் டங்கள் எல்லாம்
எம்பிரான் கணமாய் உள்ளோர்
ஆனவர் அருளிற் போகி
அகிலமும் நாடி அங்கண்
வானவர் தம்மை வென்று
வளமெலாம் கவர்ந்து தன்பால்
தானவர் பலரை அங்கண்
தன்னர சளிப்ப உய்த்தான். 138

அசுரேந்திரன் சூரனைக்கண்டு மகிழ்தல்

ஆர்ந்ததொல் கிளையொடும் அவுணர் காவலன்
சேர்ந்தனன் சூரனைச் செங்கை யால்தொழாப்
பேர்ந்திடும் ஆவியைப் பிரிந்த தோர்உடல்
சார்ந்திடு கின்றதோர் தன்மை என்னவே. 139

---

137. நீலகண்டனாகிய பெருமான் அருள் கூர்ந்து சூரனை நோக்கி "நீ மற்றைய அண்டங்களையும் கண்டு நம் ஆணையால் எத்திசையும் புகழ இனிது அரசாள்க" எனத் திருவாய் மலர்ந்தார். அதுகேட்ட அசுரர் கோமான் ஐயன் மலரடி பணிந்து விடைபெற்றுப் புறப்பட்டான்.

138. ஈசன் பணித்தவாறே ஏனைய அண்டங்களையும் சிவகணங்களின் உதவியால் சென்று கண்டு, அங்குள்ள வானவரையெல்லாம் வென்று, அவர் செல்வங்களைக் கவர்ந்து, தன்னுடன் இருந்த அசுரர் பலரை அங்கு அரசாள வைத்தான் சூரன்.

139. சூரனது சிறப்பெலாம் அறிந்த அசுரேந்திரன் உயிரைப் பிரிந்த உடல் மீண்டும் வந்து பொருந்திறாற்

ஆயிடை வெய்யசூர் அவுணர் கோவினை
நீயினி திருத்திகொல் என்ன நீயுளை
தீயன அடையுமோ சிறுமை எய்துமோ
மேயநும் குலமுறை விளங்கத் தோன்றினாய். 140

நிலவுலகத்தில் சூரனுக்கு வரவேற்பு

என்றிவை நயமொழி இயம்பி யேபுடை
சென்றனன் மாயையின் செய்ய காதலன்
துன்றிய தகுவர்தம் அனிகம் சூழ்தர
வென்றியொடு அவனிமேல் விரைவின் மீளவே. 141

மருத்துழாய் மவுலியாதி வானவர்முனிவர் யாரும்
திருத்தகு சூரன்நேரே சென்றுநின்று ஆசிகூறி
அருத்திய தாகப்போற்ற அவர்களுள் பதினோர்கோடி
உருத்திரர்தொகுதியானோர் ஒருங்குடன் நிற்பக்கண்டான்.

அவனியை அளித்தோன் தன்பால்
அடைந்துளார் அண்டம் தன்னில்
புவனமேல் இருந்தார் அன்னார்
புரிந்திடத் தொன்னாள் வந்த

போன்று தன் சுற்றத்தாருடன் எதிர்கொண்டு கை கூப்பித் தொழுதான்.

140. அதுகண்ட சூரன் "ஐயனே! நீ சுகமாக இருக்கின்றாயா" என்று வினவினான். "அசுரர் குலம் விளங்கத் தோன்றிய அரசே! நீ யிருக்க எமக்குத் தின்மை யுண்டோ? தாழ்வுண்டோ?"

141. என்று இனிய மொழி பேசி அசுரேந்திரன் அவன் பக்கத்திற் சென்றான். அசுரர் சேனையோடு, வெற்றி மாலை சூடிய சூரன் நிலவுலகத்திற்கு விரைந்து திரும்பினான்.

142. அங்கு திருமால் முதலிய தேவரும் முனிவரும் சூரனை எதிர்கொண்டு அழைத்து ஆசி கூறி அன்போடு போற்றினர். அவர்களோடு கலந்து நின்ற பதினொரு கோடி ருத்திர கணங்களை நோக்கினான் சூரன்.

143. உலகத்தைப் படைத்த பிரமதேவனிடம் பதினொரு உருத்திரர் தோன்றினர். அன்னார் மேற் புவனத்தில்

பவர்முதல் உருத்தி ரேசர்
 பதினொரு கோடி யுள்ளார்
இவர்சிவன் அருளால் வானோர்
 இனத்துடன் ஈண்டி யுற்றார். 143

சூரன் முதலியோர்க்குச் சிறந்த நகரங்கள் அமைத்தல்

எனஅரி புகலக் கேளா
 இன்னதோ நிகழ்ச்சி என்றான்
அனையதன் பின்னர் ஆண்டை
 அமரர்கம் மியனை நோக்கி
வனைகழற் சூர பன்மன்
 மற்றுயாம் உறைதற்கு ஒத்த
புனைதரு நகரம் வல்லே
 புரிமதி புலவ என்றான். 144

நாற்பெரு வாயி லோடு
 மேருவே நண்ணிற் றென்ன
மாற்பெருங் கோபு ரங்கள்
 மணிவெயில் எறிப்ப நல்கி
நூற்படும் ஒழுக்கம் நாடி
 நூறுயோ சனையொன் றாகப்
பாற்படும் மாட வீதி
 பற்பல அமைத்து மன்னோ. 145

இருந்தார். அவர் படைத்த பவர் முதலிய பதினொரு கோடி ருத்திரர்களே இவர்கள்; ஈசன் அருளால் வானவர் இனத்தில் சேர்ந்து வந்துள்ளார்.''

144. என்று திருமால் சொல்லக் கேட்ட சூரன் 'இதுவோ அவர் வரலாறு' என்று கூறினான். பின்பு அங்கு நின்ற தேவ தச்சனை நோக்கி ''அறிஞனே, நாம் வசித்தற்கு ஏற்ற நகரத்தை விரைவிலே ஆக்குக'' எனப் பணித்தான்.

145. சிற்ப நூல்களிற் சொல்லிய முறைகளை ஆராய்ந்து மாமேரு மலை போன்ற நான்கு கோபுர வாயில்

கோவியல் மரபினோர் கொள்கைக் கேற்றன
யாவையும் நல்கியே இதனுக் குள்ளுற
மாவுறு சூரபன் மாவும் தன்குலத்
தேவியும் உறையவோர் உறையுள் செய்தரோ. 146

காவியும் குமுதமும் கமல மும்செறி
வாவிகள் ஓடைகள் பொய்கை வான்தொடு
பூவியல் தண்டலை பொலன்செய் குன்றுடன்
யாவையும் முறைபட இயற்றி னைரோ. 147

அள்ளலம் திரைக்கடல் அகழி யாகவே
உள்ளுறும் நகரிடை உறையும் கோயிலில்
தள்ளறும் பொன்சுடர் தழைத்த பொற்பினால்
வெள்ளிய தானது மேலைப் பொன்னகர். 148

இன்னவையும் ஏனவையும்
எண்ணிமனத் தால்அருளித்
தன்னிகரில் அவுணர்பிரான்
சயத்தோடு பெருந்தலைமை

கள் அமைத்து, நூறு யோசனை நீளத்தில் பல மாட வீதிகள் வகுத்து,

146. இன்னும் மன்னரது இயல்புக் கேற்ற மற்றவற்றையும் உண்டாக்கி, நகரின் நடுவே சூரனும் அவன் தேவியும் வசிப்பதற்கு ஓர் மாளிகையும் நிருமித்தான்.

147. நீல மலரும் குமுதமும் கமலமும் நெருங்கிப் பூத்த நீர்நிலைகளும், வானளாவிய பூஞ்சோலைகளும், அழகிய செய்குன்றுகளும் முறையாக அமைத்தான்.

148. அலைகடலே அகழியாகக் கொண்ட நகரத்தில் நின்ற அரண்மனை, அழகிய பொன்னொளி விரித்தமையால் விண்ணுலகில் உள்ள பொன்னகரம் வெள்ளிநகரம் போலாயிற்று.

149. இவ்வாறாகத் தெய்வத் தச்சன் தன் மனத்திலே மாண்புற நினைத்தவண்ணம் அமைத்த பின்னர், ஒப்பற்ற அசுர மன்னனது வெற்றிப்புகழும் பெருமையும் பெறநின்ற

மன்னவரு தலின்வீர
மகேந்திரமே யாம்என்றே
அந்நகருக்கு ஓர்நாமம்
அணிபெறுத்தி அளித்தனனே. 149

மாண்தகுசீர் கெழுவீர
மகேந்திரம்இவ் வாறுதவி
ஆண்டதுபோல் அகன்பரப்பில்
ஆசுரமென்று ஒருநகரம்
நீண்ட வட கடல்நடுவண்
நிருதர்புகழ்ந் திடுமாற்றால்
காண்டகைய சீயமுகக்
காவலற்கு நல்கினனே. 150

நீடு மேரு நெடுவரைத் தென்புடை
நாடு சீர்கெழு நாவலந் தீவினில்
கூடு கின்றபொற் கூடம் தனக்கொரு
மாடு போந்தனன் மாமயன் தாதையே. 151

பகரு கின்றஅப் பாற்படும் எல்லையில்
தகுவர் போற்றிடும் தாரகற் காகவே
மகிழ்வின் நீரொடு மாயா புரம்என
நகரம் ஒன்றை அணிபெற நல்கினன். 152

அந்நகர்க்கு வீரமகேந்திரம் என்னும் சிறந்த பெயரை இட்டான்.

150. வீரமகேந்திரத்தைச் செய்த பின்னர், வடகடலின் நடுவே சிங்கமுகன் என்னும் அசுர மன்னனுக்கு ஒரு பெரு நகரம் அமைத்து, அதற்கு ஆசுரம் என்று பேரிட்டான்.

151. நெடிய பேரு மலையின் தென்பால் அமைந்த நாவலந் தீவில் உள்ள ஏமகூட மலையின் அருகே தெய்வத் தச்சனது தந்தையாகிய விசுவகர்மன் சென்றான்.

152. அங்கு தாரக மன்னனுக்கு மாயாபுரம் என்னும் மணி நகரை உண்டாக்கினன்.

சூரன் அரசு வீற்றிருத்தல்

கோவில் நண்ணிய கொற்றவன் மற்றொரு
தாவில் பீடிகை தன்மிசை வைகியே
மாவு லாவிய மால்கடல் தெண்புனல்
தேவர் ஆட்டச் சிறப்புடன் ஆடினான். 153

வந்து சீய மணித்தவி சேறினன்
அந்த எல்லையில் அச்சுதற் காமெனும்
இந்தி ரத்திரு மாமுடி ஏந்தியே
சுந்த ரத்தொடு நான்முகன் சூட்டினான். 154

அன்ன வேலை அமரர் முனிவர்கள்
பொன்ன வாநறும் போது கரங்கொடே
மன்னர் மன்னன் மணிமுடி யின்மிசை
முன்னி வாழ்த்தி முறைமுறை வீசினார். 155

அரம்பைமே னகையே மிக்க
உருப்பசி ஆதியாகி
வரம்பறும் அமரர் மாதர்
வரன்முறை விதியின் நாடி

---

153. வீரமகேந்திர மாளிகையில் வாழ்ந்த சூரன், அழகிய பீடத்தில் அமர்ந்து, திருமகளுக்கு உறைவிடமாகிய தெள்ளிய திருப்பாற் கடலின் நீரால் தேவர்களால் அபிஷேகம் செய்யப்பெற்றான்.

154. பின்பு ஆடை அணிகளால் அலங்கரித்துக் கொண்டு, அரியாசனத்தில் வந்தமர்ந்தான். அப்போது திருமால் புனைதற்கேற்ற அழகிய திருமுடியைப் பிரமதேவன் எடுத்துச் சூரன் தலையிலே சூட்டினான்.

155. அமரரும் முனிவரும் பொன்மலர் எடுத்து மன்னர்மன்னது சென்னியில் விளங்கிய திருமுடியில் முறையாகச் சொரிந்தார்கள்.

156. அரம்பை, மேனகை, ஊர்வசி முதலிய வான மங்கையர் பலர், இன்னிசைக் கருவிகளில் எழுந்த பாட

நரம்பியல் சுருதி பாடல்
இயத்தொடு படிந்து நண்ணித்
திரம்பயில் நடனம் மூன்றும்
செவ்விதிற் புரியல் உற்றார். 156

மதிமுகத் திருவே போல்வாள்
வானவர் புனைவன் தந்த
மதுமகோ மளைஎன்று ஓதும்
பாவையைப் புகரோன் நாடிச்
சதுர்முகன் முதலாம் தேவர்
தானவர் பிறரும் போற்ற
விதிமுறை வதுவை செய்து
விழைவொடு மேவி யுற்றான். 157

அரிமுகத்து அவுணர் வேந்தற்கு
அந்தகன் மகளாய் உள்ள
திருமிகு விபுதை தன்னைச்
சீர்மணம் செய்து நல்கி
நிருதிதன் புதல்வி யான
நேரிழை சவுரி தன்னைக்
கரிமுக இளவல் சேரக்
கடிமணம் புரிவித் திட்டான். 158

லுக்கு ஏற்பத் தேசிகம், வடுகு, சிங்களம் என்னும் மூவகை ஆடல்களையும் முறையாகப் புரியலுற்றார்.

157. இவ்வாறு சிறப்பாக அரசு வீற்றிருந்த சூரன், தெய்வத் தச்சன் பெற்ற மதுமகோமளை என்னும் மதி முகம் வாய்ந்த மங்கையை, பிரமன் முதலிய வானவரும் தானவரும் பிறரும் போற்ற விதிமுறைப்படி திருமணம் செய்து அன்புகொண்டு வாழ்ந்தான்.

158. சிங்கமுக அசுரனுக்கு எமதருமன் திருமகளாகிய விபுதை என்னும் மங்கையை வதுவை செய்வித்தான். நிருதியின் புதல்வியான சவுரி என்னும் நங்கையைத் தாரக அரசனுக்குத் திருமணம் புரிவித்தான்.

இவ்வகை மணஞ்செய் பின்றை
இருதுணை வரையும் நோக்கி
மெய்வளம் பெறநுங் கட்கு
விதித்திடும் மூதூர் ஏகி
அவ்விரு கோடி வெள்ளம்
அனிகமோடு இருத்திர் என்றுத்
தெவ்வடு சூரன் அன்னோர்
செல்லுமாறு ஏவி னுனல். 159

துர்க்குணன் தரும கோபன்
துன்முகன் சங்க பாலன்
வக்கிர பாலன் தீய
மகிடனே முதலோர் தம்மைத்
தொக்கமந் திரிகள் ஆகத்
துணைக்கொடே சூர பன்மன்
மிக்கவா னவர்கள் போற்ற
வீற்றிருந்து அரசு செய்தான். 160

அரசு செய்தலும் அந்தர நாதனும்
சுரரும் ஏனை முனிவரும் தொக்குறீஇ
வரைசெய் மாட மகேந்திர மாபுரத்து
ஒருவன் ஏவலின் முன்னம் ஒழுகுவார். 161

---

159. பின்பு சூரன் தம்பியர் இருவரையும் நோக்கி "நீங்கள் உங்களுக்குரிய வளநகரம் போந்து இருகோடி வெள்ளமாகிய சேனைகளோடு இனிது வாழ்வீராக" என்று விடை கொடுத்து அனுப்பினுன்.

160. (தம்பியர் இருவரும் தத்தம் நகரத்திற்குச் சென்ற பின்னர்) துர்க்குணன், தருமகோபன், துன்முகன், சங்கபாலன், வக்கிரபாலன், மகிடன் முதலியோரை மந்திரிகளாகக் கொண்டு, சூரன் வானவர் போற்ற வீரமகேந்திரத்தில் வீற்றிருந்து அரசு செய்தான்.

161. இங்ஙனம் மலைபோல் உயர்ந்த மாடங்களையுடைய மகேந்திரபுரத்தில் சூரன் அரசு செய்யும்பொழுது, இந்திரனும் வானவரும் முனிவரும் அங்குப் போந்து அவன் ஏவுதற்கு முன்னமே குறிப்பறிந்து நடப்பாராயினர்.

வானவர் ஈனத்தொழில் புரிதல்

ஊனம் உற்ளுேர் போல்இவ்வாறு உலேகின்ற
காலத்தில் ஒருநாள் சூரன்
வானகத்துத் தலேவனேயும் அமரரையும்
வருகஎன வலித்துக் கூவித்
தானவர்க்குத் தம்பியர்நீர் அவர்பணிநும்
பணியன்ருே தரங்க வேலே
மீன்அனேத்தும் சூறைகொண்டு வைகலும்உய்த்
திடுதிர்என விளம்பி னுனல். 162

உரைக்கும்மொழி அதுகேளா அனேயரெலாம்
உளநடுங்கி உயங்கி வெள்கித்
திரைக்கடலின் மீன்தனக்குத் தருகென்ருன்
இதற்கினிநாம் செய்வது ஏதோ
விரைக்கமலத் தனிக்கடவுள இப்படியும்
நம்தலேயில் விதித்தான் என்னு
இரக்கமொடு மறுத்தல்அஞ்சி அத்திறமே
புரிதும்என இறைஞ்சிப் போனுர். 163

---

162. இவ்வாறு வானவர் ஊனமுற்றவர்போல் உலே வுற்றுப் பணி செய்து வரும்பொழுது, ஒரு நாள் இந்திரனேயும் வானவரையும் சூரன் வரவழைத்து, "நீங்கள் அசுரர்க்குத் தம்பியர் அல்லரோ? அந்த முறையால் அவர் பணி உமது பணியன்ருே? நாள்தோறும் நீங்கள் அலே கடலிற் போந்து அங்குள்ள மீன்களேயெல்லாம் அள்ளி வரக் கடவீர்" என்ருன்.

163. அம்மொழி கேட்ட வானவர் மனம் நடுங்கினுர்; மயங்கினுர்; மானத்தால் குறுகினுர். கடல் மீனேக் கவர்ந்துவரக் கட்டளே யிட்டானே காவலன்! இனி என் செய்வோம்! இப்படியும் பிரமதேவன் நம் தலேயில் விதித்தானே! என்று ஏங்கினுர். அரசன் ஆணையை மறுத்தற்கு அஞ்சிப் பணி செய்யப் புறப்பட்டார்.

போகின்ற நெறியின்கண் இமையவரும்
புரந்தரனும் பொருமி ஏங்கி
ஆகின்றது எமக்கேயோர் பழியன்றோ
அனையதுவந்து அணுகா முன்னர்
சாகின்ற தேமிகவும் இனிதாகும்
எமக்குஅதுவும் சாராது அந்தோ
வேகின்ற சிந்தையினேம் செய்வதெவன்
எனப்புலம்பி வேலை புக்கார். 164

அவ்வேலை இமையவர்கோன் வருணன்எனும்
கடவுளைநின்று அழையா இந்த
மைவேலை தனக்கிறைவன் நீயன்றோ
நின்னினும்ஓர் வலியார் உண்டோ
கைவேலைப் பணியியற்றித் திமிங்கிலமே
முதலாய கணிப்பில் மீன்கள்
இவ்வேலை ஏற்றுதியேல் இடர்வேலைக்
கரையில்எமை எடுத்தி என்றான். 165

---

164. கடலை நோக்கி வழி நடந்து செல்லும்போது வானவரும் இந்திரனும் வருந்தி ஏங்கினர்; "இப்பணி புரிதல் நமக்குத் தீராப் பழியன்றோ? இவ்வசை வந்தடையும் முன்னே உயிர் விடுதல் சாலவும் நன்று; அந்தோ! சாவும் நம்மைச் சாராதே! என் செய்வோம்" என்று மனம் வெதும்பினர்; புலம்பினர்; கடற்கரையை வந்தடைந்தார்.

165. அந்த வேளையில் இந்திரன் வருண தேவனை அழைத்து "ஐயனே! கருங்கடலின் பெருந் தெய்வம் நீயே அன்றோ? உன்னினும் வலியார் இவ்வுலகத்தில் உண்டோ உன் கைத்திறத்தால் திமிங்கிலம் முதலிய கணக்கற்ற மீன்களை இக்கடற் கரையில் ஏற்றுவாயாயின் எம்மை இடர்க் கடலினின்றும் கரையேற்றியவன் ஆவாய்" என்றுரைத்தான்.

தடக்கடலின் வேலைதனில் வருணர்பிரான்
ஒல்லைதனில் தந்த மீனத்து
அடுக்கல்முழு வதும்நோக்கிக் கடவுளரை
விளித்திவற்றை ஆற்றலாலே
எடுப்பதுநும் தொழில்என்றே இந்திரன்தான்
விளம்புதலும் இமையோர் எல்லாம்
நடுக்கமுடன் உளம்பதைப்ப விழிபனிப்பக்
கரங்குலைத்து நாணுக் கொண்டார். 166

தேனுலவும் தாருத் திருநிழற்கீழ் இன்பமுறும்
வானவர்கள் என்றே மதிக்கும் தகைமையினேம்
ஈனமொடு மீன்சுமந்தே எல்லோர் களும்நகைக்கத்
தானவர்முன் செல்வதினும் சாதல்மிக நன்றுநன்றே.

என்னு மொழிகள் இயம்பிப் புலம்புற்றுத்
துன்னு திருதர்புகழ் சூரன் திருநகரின்
மன்னுதிசை யாளரொடும் வந்தனரால் அவ்வளவில்
அன்னசெயல் கண்டே அவுணர்உரை செய்குவார்.

---

166. வருணன் அதற்கு இசைந்து, பெருங் கடற் கரையிலே மீன்களை அடுக்கடுக்காக விரைவில் குவித்தான். அப்போது தேவர்களை நோக்கி 'இவற்றை இனி எடுத்துச் செல்லுதல் உமது பணியாகும்' என்று ஏவினான் இந்திரன். வானவர் உடல் நடுங்கினர்; உளம் பதைத்தனர்; கண் கலங்கினர்; கரம் குலைத்தனர்; நாணத்தால் நலிந்தனர்.

167. தேனார்ந்த கற்பகத்தின் திருநிழலில் இன்புற்று வாழ்பவர் என்று ஏற்றமாக எண்ணப்படும் நாம் மீனைச் சுமந்து ஈனர்களாய், எல்லோரும் சிரிக்க அசுரர் முன்னே செல்வதைவிட ஆவி துறத்தல் நன்று, என்று,

168. இவ்வாறு பன்னிப் புலம்பி, (மீனைச் சுமந்து கொண்டு) திக்குப் பாலகர்களோடு சூரன் திருநகரை நோக்கி நடந்தார்கள். அப்போது அவரைக் கண்ட அசுரர் பலவாறு பேசுவாரானார்.

மாதோ யம்தன்னை வயிறலைத்து மற்றிவர்தாம்
ஈதோ சிலமீன் தருகின் றனர்என்பார்
மீதோ டியபரிதி வெய்யோன்முன் உண்டவெறும்
கோதோ எமக்குக் கொணர்கின்றூர் என்றுரைப்பார்.

வேத நெறிமுறைமை விட்டார் வினைசெய்யும்
பேதை நெறியே பிடித்தார் இவர்என்பார்
கோதுபடா நம்தம் குலத்தை மிகநலிந்தார்
ஏதுபடார் இன்னம் இமையோர் எனஉரைப்பார்.

மண்ணோர் களும்இகழும் வன்பழிதன் பால்வரவும்
விண்ணோர்க்கு இறைவன் விரைவின்உயிர் விட்டில
கண்ணோ பெரிது கருத்தோ சிறிதுஎன்பார் (றுல்
பெண்ணோ அலிதானோ பேடோ எனஉரைப்பார்.

எளித்தல் எய்தும் இமையவர் உய்த்தமீன்
துளித்த தேன்தொடைச் சூர்முதல் காணுறீஇக்
களித்து வந்து கடவுளர் வைகலும்
அளித்திர் என்ன அழகிதென்று ஏகினர். 172

---

169. நெடுங் கடலைக் கலக்கி, இதோ! சில மீன் தரு கின்றூர் இவர் என்பார். சாரமெல்லாம் கதிரவன் உண்ட பின்னர் வெறும் சக்கையை நமக்குத் தருகின்றூர் இவர் என்பார்கள்.

170. வேத நெறி முறையை விட்டொழிந்தார் இன்னூர்; ஏவல் புரியும் பேதை நெறியை ஏற்றூர் என்பார் கள். குற்றமற்ற நம் குலத்தை இகழ்ந்தவர் இப்பாடும் படுவார்; இன்னமும் படுவார் என்பார்.

171. மண்ணவரும் இகழும் வன்பழியைப் பெற்றும் விண்ணவர் தலைவன் இன்னும் உயிர் விட்டிலனே என் பார்; கண்ணாயிரம் படைத்த விண்ணவர் தலைவனுக்குக் கருத்து மிகக் குறைவே என்பார்; அவன் பெண்ணோ அலியோ பேடோ எனப் பழிப்பார்.

172. இவ்வாறு நிகழ்ந்த ஏளனப் பேச்சுக்கிடையே ஈனமுற்ற வானவர்கள் எடுத்து வந்த மீன்களைத் தார ணிந்த சூரன் கண்ணுற்றுன்; களிப்புற்றுன். நாள்தோறும் இப்படியே கொண்டு வருக என்று பணித்தான். நல்லது என்றூர் வானவர்.

சூரன் முதலியோர் வீரமக்களைப் பெறுதல்

அதுபொழுது அவுணர் கோமான்
ஆற்றிய தவத்தின் சீரால்
பதுமகோ மளைன்று ஓதும்
பாவைதன் உதரம் போந்து
புதுமதிக் குழவி யேபோல்
பொற்பொடு பொலிந்து முன்னம்
மதலையங்கு ஒருவன் வந்தான்
மறலிக்கு மறலி போல்வான். 173

பானு கோபன்என் றொருபெயர் பெற்றஅப் பாலன்
மானை நேர்விழி மங்கையர் மதன்என மயங்க
ஆன பேர்உரு எய்தியே அம்புயத் திருவின்
கோனொ டேபொருது அவன்தனைப் பெருந்திறல் கொண்டான்.

பரிதி யின்பகை யாம்இவற் பெற்றபின் பரிவால்
நிருதர் காவலன் அங்கிமா முகத்தனை நிறஞ்சேர்
இரணி யன்தனை வச்சிர வாகுவை எழிலார்
மருவு லாம்குழல் பதுமகோ மளைதர மகிழ்ந்தான்.

சீற்றம் உற்றிடு சிங்க முகன்கணே
தோற்றி னன்அதி சூரன்என் றோர்மகன்

---

173. இவ்வண்ணம் நிகழும் நாளில் சூரன் ஆற்றிய தவத்தின் செம்மையால் பதுமை என்னும் பாவை புதுமதி போன்றதோர் பிள்ளையைப் பெற்றாள்: அப்பிள்ளை காலனுக்கும் காலன்போல் விளங்கினான்.

174. பானுகோபன் என்று பெயர் பெற்ற அப்பாலன், மன்மதனே என மங்கையர் மயங்கத்தக்க பேரழகு வாய்த்து வளர்ந்தான்; திருமகளின் தலைவனாகிய திருமாலொடு பொருது வெற்றி பெற்றான்.

175. பானுகோபனுக்குப்பின் அங்கிமுகன், இரணியன், வச்சிரவாகு என்னும் மைந்தரைப் பெற்றாள் பதுமை. சூரன் அவர்களைக் கண்டு மகிழ்ந்தான்.

176. சிங்கமுக அசுரன் மைந்தராய் அதிசூரனும்

வீற்று நூற்றுவர் மேவினர் அன்னவர்
ஆற்றல் யாவர் அறைந்திட வல்லரே. 176

அந்த நாளில் அவன்தன் இளவலாம்
தந்தி மாமுகத் தாரகன் தன்னிடை
முந்து செய்தவ மொய்ம்பின் ஓர் மாமகன்
வந்து தோன்றினன் வான்கதிர்ப் பிள்ளைபோல். 177

அன்னவர் உடன்வந்தாள்
அசமுகி எனும் நாமம்
மன்னினள் ஒருவன்தன்
மனையெனும் முறை யில்லாள்
தன்நிறை தவிர்கின்றாள்
தருமம திலள் வானோர்
பன்னியர் தமை மூன்றோன்
படர்புயம் உற உய்ப்பாள். 178

தாயின துருவாயும் தந்தைதன் உருவாயும்
மேயின இருமைந்தர் வில்வலன் வாதாவி
ஆயதோர் பெயர்பெற்றோர் அன்னைதன் உரைகொண்டே
தூயதோர் குரவோன்தன் துணையடி பணிகுற்றார்.

நூற்றுவரும் தோற்றினர்; அன்னவரது வல்லமையை யாவரே சொல்ல வல்லார்?

177. சிங்கமுகன் தம்பியாகிய தாரகன் முன்னர்ச் செய்த தவத்தின் வலிமையால் பால சூரியனைப்போன்ற மைந்தன் ஒருவனைப் பெற்றான்.

178. சூரன் முதலிய மூவருடன் பிறந்த அசமுகி என்பவள் ஒருவருக்கும் வாழ்க்கைப் படாதவளாய், முறையற்ற செயல்களால் நிறையழிந்து, அறம் துறந்து, வானவர்க்குரிய மாதரை உடன் பிறந்த மூவர்க்கும் உதவி வந்தாள்.

179. அவள் துர்வாச முனிவரை வலிதிற் சேர்ந்து, பெற்ற மைந்தர் இருவர். தாய் வடிவத்தவன் ஒருவன்; தந்தை வடிவத்தவன் மற்றொருவன்; வில்வலன் வாதாவி என்பது அவர் பெயர்; அவ்விருவரும் அன்னையின் சொற்படி அப்பனாகிய முனிவனைத் தொழுதார்கள்.

இப்படி அவுணர்கள் இனையர் ஏனையோர்
செப்பரும் முனிவரைத் தேவர் தங்களை
ஒப்பரும் நரர்தமை ஒறுப்ப மாயைதன்
வைப்புறு காதலன் அரசின் மன்னினான். 180

சூரன் இந்திராணியை விரும்புதல்

அவ்வகை யால்அர சாற்றும் எல்லையில்
எவ்வமில் சூர்முதல் இந்திரன் எனும்
தெவ்வினை வன்சிறை செய்து தேவியை
வவ்விய உன்னினன் வருவ தோர்கிலான். 181

உன்னிய தீயவன் ஒருதன் தானையின்
மன்னனை விளித்துநீ வாசவன் தனை
இன்னதோர் பொழுதினில் எய்திப் பற்றிஎன்
முன்னுற விடுகென முன்னம் ஏவியே. 182

ஒன்பது கோடியர் தம்மை ஒல்லையில்
அன்புடன் விளித்துநீர் அமரர் தம்மிறை
இன்புறு தேவியைப் பற்றி ஈம்என
வன்பொடு போக்கினன் மன்னர் மன்னனே. 183

---

180. இப்படிப் பெருக்கமுற்ற அசுர மைந்தரும் பிறரும், முனிவரையும் தேவரையும் மனிதரையும் வருத்துவாராயினர். சூரன் சிறப்பாக அரசு புரிந்திருந்தான்.

181. அந்நிலையில் இந்திரனைச் சிறை செய்து அவன் தேவியைக் கைப்பற்றக் கருதினான், பின் வருவதறியாத அசுர மன்னன்.

182. படைத் தலைவருள் ஒருவனை அழைத்து "நீ போய் இப்பொழுதே இந்திரனைப் பிடித்து வந்து இங்கே விடுக' என்று ஏவினான்.

183. பின்னும் ஒன்பது கோடி அசுர மாதரை அழைத்து 'தேவேந்திரனோடு இன்புற்றிருக்கும் தேவியை இங்கே எடுத்துவந்து கொடுத்திடுக' என்று வலிய படைத் துணையோடு விடுத்தான்.

வந்தனர் அவுணரும் வயங்கொள் மாதரும்
அந்தமில் படையொடும் அடல்செய் நீரர்போல்
சிந்தனை யாவதோ தெரிந்தி லோம்என
இந்திரன் வின்வுற இசைத்து நிற்கவே. 184

இந்திரன் தேவியோடு தன்நாடு விட்டு ஓடுதல்

பொம்மென அவர்தமைப் போக்கித் தீயினும்
வெம்மைகொள் நெஞ்சினர் வினையம் உன்னியே
அம்மனை மனைவியோடு அகன்று மாயையால்
இம்மென இப்புவி தன்னில் ஏகினன். 185

வினைவயின் சென்றிடும் வீரர் யாவரும்
துணைமகத் திறைவனைத் துருவிக் காண்கிலர்
மனைவியைக் காண்கிலர் மாதர் யாவரும்
நினைவயர்த்து உள்ளுறு கவலை நீடினார். 186

போயினர் இருவரும் புறத்த ராய்என
ஆயவர் மொழியவே அவுணர் மன்னவன்
தீயென வெகுண்டனன் தேடொ ணாததோர்
தாய்மணி இழந்திடும் அரவின் துன்புளான். 187

---

184. "அளவற்ற படைகளோடு அசுரர் வந்தனர்; அசுர மாதரும் அமர் செய்பவர் போல் அணுகினர்; அன்னார் கருத்து யாதோ அறிகிலோம்" என ஒற்றர் வந்து இந்திரனிடம் உரைத்து நின்றார்கள்.

185. அவர்களை விரைவாக அனுப்பிவிட்டு, தீயினும் கொடிய அசுரர் கருதிய சூழ்ச்சியை அறிந்து தேவியோடு மாயையால் மறைந்து பூவுலகத்தை அடைந்தான் இந்திரன்.

186. விண்ணவர் தலைவனைப் பிடிக்கச் சென்ற வீரர் யாவரும் அவனைத் தேடினர்; அசுர மாதர்கள் சசியைத் தேடினர் இருவரையும் காணாது மனம் சோர்ந்து பெருங் கவலை கொண்டார்.

187. இருவரும் தப்பிப் போயினர் என்று அசுரர் கோமானிடம் சென்று அறிவித்தார்கள். அந்நிலையில் அவன் நெருப்பெனச் சீற்றமுற்றான். அருமணி யிழந்த நாகம்போல் அலக்கண் உற்றான்.

இந்திரன் மைந்தனுகிய சயந்தனை நாரதன் தேற்றுதல்

இருந்திடு சயந்தன் என்போன்
இந்திரன் இறைவி யோடும்
கரந்துடன் போந்த வாறும்
காமரு துறக்கம் தன்னில்
விரைந்துவந்து அவுணர் தேடி
மீண்டிட விண்ணு ளோர்கள்
அரந்தையோடு உற்ற வாறும்
அங்ஙனம் தேர்ந்தான் அம்மா. 188

பொன்னகர் புக்க மைந்தன்
புலம்புறு சுரரைக் கண்டு
தன்னுயிர் போலும் தந்தை
தாய்தனைக் காணுன் ஆகி
இன்னலம் கடலின் மூழ்கி
ஏக்கமோடு இரக்கம் மிக்குப்
பின்னொரு செயலும் இன்றிப்
பித்தரே போல உற்ருன். 189

---

188. (அப்போது வைகுந்தத்தில்) இருந்த இந்திரன் மைந்தனுகிய சயந்தன், பெற்ருேர் இருவரும் ஒளித்துப் போந்தவாறும், அசுரர் படை அவர்களைத் தேடிக் காணுது மீண்டவாறும், வானவர் துன்புற்றவாறும் அங்கிருந்த படியே அறிந்தான்.

189. (வானவர் நாடு வேந்தன் இன்றி வறிதே இருத்தல் ஆகாது என்று கருதி) அங்குப் போந்தான்; வருந்திப் புலம்பிய வானவரைக் கண்டான்; தாய் தந்தையரைக் காணுது துன்பக் கடலில் மூழ்கினுன்; ஏக்கமும் இரக்கமும் எய்தினுன். இன்ன செய்வது என்றறியாது பித்தர்போல் சித்தம் கலங்கி நின்ருன்.

உற்றிடும் எல்லை தன்னில்
உம்பர்கோன் மதலை உள்ளம்
தெற்றெனத் தெளிப்ப உன்னி
நாரதன் என்னும் சீர்சால்
நற்றவ முனிவன் செல்ல
நடுக்கமோடு எழுந்து தாழ்ந்து
மற்றொரு தவிசு நல்கி
இருத்தியே மருங்கு நின்றான். 190

இன்பம தடைந்த காலை
இனிதென மகிழ்ச்சி எய்தார்
துன்பம துற்ற போதும்
துண்ணெனத் துளங்கிச் சோரார்
இன்பமும் துன்பம தானும்
இவ்வுடற்கு இயைந்த என்றே
முன்புறு தொடர்பை ஓர்வார்
முழுவதும் உணர்ந்த நீரார். 191

வறியவர் செல்வர் ஆவர்
செல்வர்பின் வறியர் ஆவர்
சிறியவர் உயர்ந்தோர் ஆவர்
உயர்ந்துளோர் சிறியர் ஆவர்

---

190. அவ்வேளையில் அப்பாலன் உள்ளத்தைத் தேற்றக் கருதி நாரதன் என்னும் நற்றவ முனிவன் அங்கு வந்துற்றான். நடுங்கிய மேனியனாய் எழுந்து வணங்கினான் இந்திரன் மைந்தன்; ஓர் ஆசனத்தில் அவனை அமர்த்தி அருகே நின்றான்.

191. அப்போது முனிவர் அவனை நோக்கி "ஐயனே! முற்றும் உணர்ந்தவர்கள், இன்பம் வந்தடைந்தபோது மகிழ்ந்திடமாட்டார்; துன்பம் வந்துற்றபோது துளங்கிடவும் மாட்டார்; பிறந்தோர்க்கெல்லாம் இன்பமும் துன்பமும் உடலோடு பொருந்தின அன்றோ? இரண்டும் முன்னை வினைப் பயன் என்றுன்னி அமைவார்.

192. ஒரு காலத்தில் வறியராயிருப்போர் மற்றொரு காலத்தில் செல்வராவர். செல்வமுற்றோர் பின்னொரு காலத்தில் வறியராவர். சிறியோர் பெரியோர் ஆவர்;

முறைமுறை நிகழும் ஈது
முன்னைஊழ் வினையே கண்டாய்
எறிகதிர் வழங்கும் ஞாலத்து
இயற்கையும் இனைய தன்றே. 192

ஆதலின் உமது தாழ்வும்
அவுணர்தம் உயர்வும் நில்லா
ஈதுமெய் என்று கோடி
இந்நகர் தணந்து போன
தாதையும் பயந்த தாயும்
தம்உருக் கரந்து போந்து
மேதினி வரைப்பின் ஊடு
மேவினர் போலும் அன்றே. 193

என்றிவை பலவும் கூறி
இன்னினி வெஞ்சூர் தானும்
பொன்றிடும் உமது துன்பும்
பொள்ளென அகன்று போகும்
நன்றிது துணிதி என்றே
நாரத முனிவன் தேற்றிச்
சென்றனன் சயந்தன் அங்கண்
இருந்தனன் தெட்பம் எய்தி. 194

பெரியோர் சிறியோர் ஆவர். இவ்வாறு முறை முறையே மாறி வருதல் அவரவர் செய்த பழவினையின் பயனேயாகும். சந்திர சூரியர் சஞ்சரிக்கும் உலகத்தியற்கை இதுவே.

193. ஆதலின் இப்போதுள்ள அமரர் தாழ்வும், அசுரர் வாழ்வும் இப்படியே நிற்கமாட்டா. இதனை உண்மையென்று மனத்திற் கொள்க. உன்னைப் பெற்ற தாயும் தந்தையும் இந்நகரை விட்டு அகன்று, தம் இயற்கை வடிவத்தை மறைத்து நிலவுலகத்தை அடைந்துள்ளார்கள்.

194. இனிக் கொடிய சூரன் இறந்துபடுவான். உமது துயரமும் விரைவில் விலகி ஒழியும். இதனை உள்ளத்தில் தெளிவாகக் கொள்க என்று நாரத முனிவன் தேற்றிச் சென்றான். ஒருவாறு சஞ்சலம் தீர்ந்த சயந்தன் தெளிவுற்று இருந்தான்.

இந்திரன் சீகாழியில் பூஞ்சோலை வளர்த்தல்

மெய்த்தரு நீழல் வைகும்
வெறுக்கையை வெறுத்துப் பாரில்
சித்திர மனைவி யோடும்
தெக்கிண தேயம் புக்குப்
பத்துடன் இரண்டு நாமம்
படைத்த தொல்காழி நண்ணி
இத்தலம் இனிதே என்று
இருந்தனன் இமையோர் கோமான். 195

அந்நகல் இருக்கை தன்னில்
அயர்வுயிர்த்து இறைவி யோடும்
இந்திரன் இருந்த பின்னர்
என்றும்நாம் இறைவற் போற்றிப்
புந்திகொள் மகிழ்வால் பூசை
புரிதும்என் றுன்னி ஆண்டோர்
நந்தன வனத்தை வைப்பான்
நாடியே இனைய செய்வான். 196

உற்றிடும் எல்லை தன்னில்
உலகினில் அவுணர்க் கெல்லாம்
கொற்றவன் விடுத்த ஒற்றர்
குவலயம் துருவிச் செல்ல

---

195. வேண்டியவர்க்கு வேண்டியபொருளைத் தப்பாது அளிக்கும் கற்பகச் சோலையின் நிழலில் வீற்றிருக்கும் அற்புத வாழ்க்கையை வெறுத்து, சித்திர மனைவியாகிய சசியோடு தெக்கண தேசத்திற் போந்து, பன்னிரு பெயர் பெற்ற பழம்பதியாகிய சீகாழியை அடைந்து, அதுவே சிறந்த இடமெனத் தெளிந்து அங்குத் தங்கினான் இந்திரன்.

196. அந்த நற்பதியில் இந்திராணியோடு தளர்வுற்றுத் தங்கியிருந்த இந்திரன், நாள்தோறும் ஈசனைப்போற்றி அகமகிழ்ந்து பூசனை புரியக் கருதி அங்கு ஓர் நந்தவனம் அமைக்கத் தலைப்பட்டான்.

197. அப்பொழுது அசுரர்களுக்கெல்லாம் தலைவனாகிய சூரன் அனுப்பிய ஒற்றர்கள் அவனை உலகம் எங்கும்

அற்றது தெரிந்து வல்லே
அமரர்கோன் துணைவி யோடும்
மற்றவண் வேணு வாகி
மறைந்துநோற் றிருந்தான் மாதோ' 197

வேணுவின் உருப்போல் நின்று
மெலிவொடு நோற்று நாளும்
தாணுவை வழிபட்டு அங்கண்
சதமகன் சாரும் நாளில்
காணிலர் ஒற்றர் போனார்
கருமுகில் அவுணர் தங்கள்
ஆணையிற் பெய்யா தாக
அவ்வனம் வாடிற் றன்றே. 198

நீடிய காமர் பூங்கா
நெருப்புறு தன்மைத் தென்ன
வாடின நீரின் றாகி
மற்றது மகத்தின் கோமான்
நாடினன் கவன்று தொன்னாள்
நான்முகத் தவனும் மாலும்
தேடரும் பரனை உன்னி
இரங்கினன் செயல்வே றில்லான். 199

தேடித் திரிந்தார்கள். அதை அறிந்த இந்திரன் தன் தேவியோடு மூங்கில் உருவம் கொண்டு மறைந்திருந்து தவம் புரிவானாயினன்.

198. இங்ஙனம் வேணுவாய் நின்று தாணுவைப் போற்றிய விண்ணவர் தலைவனை ஒற்றர்கள் காணாது ஒழிந்தனர்; ஆயினும் அசுரரது கொடுங்கோல் ஆட்சியால் வானம் மழை பெய்யாது பொய்த்தது; இந்திரன் வளர்த்த நந்தவனம் வாடி நலிந்தது.

199. நெடிய பூஞ்சோலை நெருப்புற்றாற்போல் பொரிந்து கரிந்து போயிற்று. அதைக்கண்டு கண்டு கவலை கொண்டான் இந்திரன். திசைமுகனும் திருமாலும் தேடுதற்கரிய ஈசனை நினைந்து இரங்குவதல்லால் வேறொன்றும் செய்வதறியான்.

திருந்தலர் புரமூன்று அட்ட
சேவகற் பரவ லோடும்
பொருந்தலர் பூங்கா வாடிப்
போயின.எனினும் பொன்று
இருந்தலம் இதனில் யாறொன்று
எய்துமால் மகவான் இன்னே
வருந்தலை என்றோர் மாற்றம்
வானிடை எழுந்த தன்றே. 200

காவிரியைக்கொண்டு தமிழ்முனிவர் புறப்படல்

விந்த மால்வரை மேருவை மாறுகொண்டு
அந்த ரத்தை அடைத்தது அதன்வலி
சிந்த என்கண் சிறிதருள் செய்கெனச்
சந்த நூற்றமிழ்த் தாபதன் கூறினான். 201

அக்க ணத்துனக்கு ஆற்றல் வழங்கினும்
மிக்க விந்தத்தை வேரொடும் வீட்டிஅத்
தெக்கி ணம்சென்று சீர்ப்பொதி யத்திடைப்
புக்கு வைகெனப் புங்கவன் செப்பினான். 202

---

200. இவ்வாறு திரிபுரம் எரித்த தேவதேவனை மனமுருகித் தொழுது வரும்பொழுது விண்ணிலே ஒரு குரல் எழுந்தது. "வாசவனே! வருந்தாதே! வாடிய சோலை வறண்டு ஒழியாது; இப்பதியில் ஒரு நதி வந்து எய்தும்" என்று ஆகாயவாணி கூறிற்று. (இஃது இவ்வாறாக)

201. முத்தமிழ் முனிவராகிய அகத்தியர், (ஈசனைத் தொழுது) "ஐயனே! அகந்தை கொண்ட விந்தமாமலை, மேருவைப் பகைத்து அந்தர வழியை அடைத்தது. அதன் வலிமையை அழிக்கத் திருவருள் புரிதல்வேண்டும்" என்றார்.

202. அப்போது சிவபெருமான் 'முனிவா! அதற்கு ஏற்ற வன்மையை உனக்கு அளித்தோம்' விந்த மலையை வேரோடழித்து, தென்திசைப் போந்து, பொதிய மலையில் நீ வாழ்வாயாக' எனப் பணித்தார்.

அனைய காலை அருங்கயி லாயமேல்
இனிது வைகிய ஏழ்நதி தன்னுளும்
புனித மாகிய பூம்புனற் பொன்னியைப்
பணிமதிச் சடைப் பண்ணவன் முன்னினான். 203

நீடு காவிரி நீத்தத்தை நீயினிக்
கோடி உன்பெருங் குண்டிகைப் பால்என
நாடி அத்திறம் செய்தலும் நன்முனி
மாடு சேர்ந்தனள் மாநதி என்பவே. 204

முனிவர் கிரவுஞ்சன் என்னும் அசுரனை ஒறுத்தல்

பொன்திகழ் வரையின் நின்றும்
குறுமுனி புவியே ஆருத்
தென்திசைக்கு ஏகும் எல்லைத்
திறல்அரிக்கு இளவல் வாழ்க்கை
வன்திறல் மாய மூதூர்
வந்தெய்த ஆண்டை வைகும்
அன்றிலம் பேர்பெற் றுள்ள
அவுணன்அத் தன்மை கண்டான். 205

---

203. அப்பணி தலைமேற் கொண்டார் அகத்தியர். அந்நிலையில் கயிலையங்கிரியிலுள்ள நதிகள் ஏழினும் நலம் மிக வாய்ந்ததும், நன்னீர் உடையதும் ஆகிய பொன்னி யென்னும் காவிரியாற்றைக் கருதினார் சிவபெருமான்.

204. "இந்நெடிய காவிரியாற்றை உனது பெரிய கமண்டலத்திற் கொள்க" என்று அருளினார் சிவபெருமான். முனிவரும் அவ்வண்ணமே செய்தார். அகன்ற காவேரி அகத்தியன் கமண்டலத்திற் புகுந்தாள்.

205. பொன்மலையினின்றும் புறப்பட்டார் முனிவர்; தென் திசையை நோக்கி நடந்தார்; வழியில் வலிமை சான்ற சிங்கமுகனுக்குத் தம்பியாகிய தாரகன் வாழ்ந்த மாய நகரத்தை வந்தடைந்தார். அங்கிருந்த கிரவுஞ்சன் என்னும் பேர்பெற்ற அசுரன் அவர் வருகையை நோக்கினான்.

அணுவினை மேரு ஆக்கும்
அன்னதோர் மேரு வெற்பை
நுணுகிய அணுவே ஆக்கும்
நொய்தெனப் புவனி தன்னைப்
புணரிய தாக்கும் நேமிப்
புணரியைப் புவனம் ஆக்கும்
இணருறு நேமித் தீயை
எல்லைநீர் ஆகச் செய்யும். 206

அத்தகு தகுவர் கோமான்
அடற்கிர வுஞ்சன் என்போன்
மெய்த்தமிழ் முனிவன் செல்லும்
வியன்நெறி விந்த மேபோல்
கொத்துயர் குவடு மல்கிக்
குன்றுருக் கொண்டு தன்பால்
உய்த்திடும் ஆறு போக்கி
உறுதலும் குறியோன் கண்டான். 207

ஆறது செல்லும் எல்லை
அடலெரி கனைந்து சூழச்
சூறைகள் மயங்க மங்குல்
துண்ணென மாரி தூவ

---

206. அவன் அணுவை மகாமேரு மலை யாக்குவான்; மகாமேருவை அணுவினும் நுண்ணியதாக்குவான்; நிலவுலகத்தை நெடுங் கடலாக்குவான்; நெடுங்கடலை நிலவுலகாக்குவான்; கொழுந்துவிட்டு எரியும் பெருந் தீயைக் குளிர்ந்த நீராக்குவான்.

207. அத்தகைய அசுரன் மெய்த் தமிழ் முனிவர் செல்லும் வழியில் விந்தமலை போன்று கொத்தும் குவடும் நிறைந்ததோர் நெடுமலையாகி நின்றான். அம் மலையின் ஊடே ஒரு பாதை சென்றது. அதனை அகத்தியர் கண்டார்.

208. முனிவர் அவ்வழியாகச் செல்லும்பொழுது கருங்கனல் எழுந்து சூழ்ந்தது; சூறவளி சுழன்று அடித்தது; சோனைமாரி சொரிந்தது; இடி இடித்தது; இருட்

மாறகல் உறுமுச் சிந்த
வல்லிருள் படலே சுற்ற
ஈறகல் மாயை சூழ்ந்தான்
ஏறும்வலி அவுணர் கோமான். 208

நன்று நன்று அவுணன் கொல்லாம்
நமக்கிது புரியும் நீரான்
இன்றிவன் வன்மை நீப்பன்
யானென அவுண வெய்யோன்
குன்றுரு அதனில் குற்றிக்
குறுமுனி பாணித் தண்டால்
துன்றிரும் பூழை யாக்கிச்
சூள் இவை புகலல் உற்றான். 209

மாற்படும் நமது பாணி
வலிகெழு தண்டால் உன்தன்
பாற்படு புழைகள் யாவும்
பற்பல மாயைக் கெல்லாம்
ஏற்புடை இருக்கை யாக
எம்பிரான் உதவும் செவ்வேள்
வேற்படை தன்னில் பின்னாள்
வீளிகுதி விரைவின் என்றான். 210

படலம் சூழ்ந்தது. இங்ஙனம் எண்ணிறந்த மாயை இயற்றினான் அசுரன்.

209. அதுகண்ட அகத்திய முனிவர் 'நன்று நன்று: அசுரனே இவ்வண்ணம் செய்ய வல்லான்? அவன் வலிமையை இன்றே அழிக்கின்றேன்! என்று தமது கையிலமைந்த திரிதண்டத்தால் அம் மலையினைக் குத்திக் குடைந்து ஒரு வஞ்சினம் கூறலுற்றார்.

210. "இங்கு நம் தண்டத்தால் உண்டாகிய பிலங்கள் எல்லாம் நானாவித மாயைக்கு இருப்பிடம் ஆகுக; எம்பெருமான் பெற்ற செம்பொருளாகிய முருகன் வேற்படையால் இக்குன்றம் விரைவில் அழிந்து ஒழிக" என்று சாபம் அளித்தார்.

முனிவர் விந்தமலையின் அகந்தையை அழித்தல்

கங்கைசென்று ஒழுகும் காசிக்
   கறைமிடற் றகில நாதன்
பங்கய அடிகள் தாழ்ந்து
   பரவல்செய்து ஆண்டு நீங்கித்
துங்கதைக் கொண்ட விந்தத்
   தொல்வரைக் கொருசார் ஏகி
அங்கதன் நிலைமை நோக்கி
   அறிவன்ஒன் றியம்பல் உற்றான். 211

சேயுயர் சிவப்பிற் றாகிச்
   சேண்புகும் விந்தம் என்னும்
மாயிரும் குவடு கேண்மோ
   மற்றுயாம் பொதிய வெற்பில்
போயிருந் திடவே உன்னிப்
   போந்தனம் அதனுக்கு இன்னே
நீயொரு சிறிது செல்லும்
   நெறியளித் திடுதி என்றான். 212

அற்புதம் அமரர் கொள்ள
   ஆற்றவும் குறியோன் விந்த
வெற்பின தும்பர் தன்னின்
   மீயுயர் குடங்கை சேர்த்தி

---

211. அப்பால் கங்கையாற்றின் கரையில் அமைந்த காசிப்பதியிற் கோயில் கொண்ட ஈசனது கமல பாதம் பணிந்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு ஓங்கி உயர்ந்த விந்த மலையின் ஒரு பக்கம் சென்று அதன் நிலையை அறியுமாறு பேச்சுக் கொடுத்தார்.

212. "ஓங்கி எழுந்து விண்ணளாவி நிற்கும் விந்தமா மலையே! நாம் பொதிய மலையிற் போந்து இருந்திடக் கருதி வந்தோம். நாம் செல்லுதற்குச் சிறிது வழி விடுக" என்றார்.

213. (அம்மலை வழிதர மறுத்தவுடன்) மிகச் சிறியவராகிய முனிவர், விந்தமலையின் முடியினைத் தம் அங்கையால் அழுத்தினார். அப்பொழுது வானவர் வியப்புற விந்த

வற்புற ஊன்ற வல்லே
மற்றது புவிக்கண் தாழ்ந்து
சொற்பிலம் புகுந்து சேடன்
தொன்னிலை அடைந்த தன்றே. 213

அதுபொழுது அலரி ஆதி
அமரர்கள் அகத்தியன்பால்
கதுமென அடைந்து போற்றிக்
கைதொழுது எந்தை செய்த
உதவியார் புரிவர் நின்னால்
உம்பராறு ஒழுகப் பெற்றோம்
பொதியமேல் இனிநீ நண்ணி
இருத்திஎம் பொருட்டால் என்றார். 214

முனிவர் வில்வலனையும் வாதாவியையும் முடித்தல்

என்றலும் விழுமி தென்றா
இசைவுகொண்டு அமரர் தம்மைச்
சென்றிட வானில் தூண்டித்
தெக்கிணம் தொடர்ந்து செல்லக்
குன்றமர் குடாது தேயம்
குறுகும்வில் வலன்வா தாவி
அன்றுயிர் இழப்ப நின்றார்
அகத்தியன் வரவு கண்டார். 215

மலை தரையளவாகத் தாழ்ந்து, பின் பாதாளவுலகிற் போந்து, ஆதிசேடனது எல்லையை அடைந்தது.

214. அப்பொழுது சூரியன் முதலாகிய வானவர் அகத்திய முனிவரிடம் விரைந்து போந்து வணங்கித் துதித்து, "எந்தாய்! நீ செய்த உதவி வேறு யாவர் செய்வார்? இவ்வுதவியால் நாங்கள் ஆகாய வழியாகச் செல்லும் பேறு பெற்றோம். இனிப் பொதியமலையிற்போந்து எம்பொருட்டு இருந்தருளுவீராக" என்று நல்லுரை பகர்ந்தனர்.

215. முனிவரும் நன்றென இசைந்து வானவரிடம் விடைபெற்றுத் தெற்கு நோக்கிச் சென்றார்; குன்றுகள்

மீதுறு சடையும் நீறும்
விளங்கிய நுதலும் வேடம்
காதணி குழையின் சீரும்
கண்டிகைக் கலனும் மேற்கொள்
பூதியும் தண்டும் கையும்
புனையுரி உடையும் ஆக
மாதவ வேடம் தாங்கி
முனிவன்நேர் வல்லை வந்தான் 216

எந்தைநீ யானும் ஏனை
என்குலத் தவரும் உய்ய
வந்தனை போலும் இந்நாள்
மற்றெனது இருக்கை எய்தி
வெந்திடு புற்கை யேனும்
மிசைந்தனை எனக்குச் சேடம்
தந்தருள் புரிந்து போதி
தவத்தரின் தலைவ என்றான். 217

செறிந்த குடகு நாட்டின் வழியே செல்லும்பொழுது அன்று உயிர் இழக்க நின்ற வில்வலன் வாதாவி என்னும் இருவரும் அவர் வருகையை நோக்கினார்கள்.

216. தலையிலே அமைந்த சடையும், நெற்றியில் இட்ட திருநீறும், காதில் அணிந்த குழையும், மார்பில் அணிந்த தாழ்வடமும், மேனியிற் பூசிய வெண்ணீறும், கையில் ஏந்திய தண்டமும், இடையில் உடுத்த மரவுரியும் ஆகச் சிறந்த தவவேடம் தாங்கி வில்வலன் அகத்திய முனிவர் முன்னே விரைந்து சென்றான்.

217. "என் தந்தையே! தவக்குலத் தலைவனே! யானும் என் குலமும் ஈடேறும் வண்ணம் இங்கு எழுந்தருளினாய் போலும்! இன்று என் குடிசையில் தங்கி, நான் சமைத்துத் தரும் புல்லுணவைப் புசித்து, மிச்சிலை எனக்குத் தந்து அருள் புரிதல் வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தான்;

அட்டிடு சாலை மாட்டே
அகத்தியற் கொடுபோய் ஆங்கண்
இட்டதோர் இருக்கை தன்னில்
இருத்தியே முகமன் கூறி
மட்டுறு தூநீர் கந்தம்
மலர்புகை தீபம் கொண்டு
பட்டிமை நெறியிற் பூசை
புரிந்துபின் பதநேர் குற்றான். 218

அடுகின்ற உண்டி கறிவர்க்கம் ஏனை
அவைஅன்பி லாத அசுரன்
இடுகின்ற தேதும் முடிவெய்து காறும்
இனிதுண்டு பின்றை முனிவன்
கடிகொண்ட நாரம் அனையன் கொணர்ந்து
கரமுய்ப்ப நுங்கி எழுவான்
பொடிகொண்டு தன்கை மலர்நீவி மிக்க
புனல்கொண்டு மண்ணல் புரியா. 219

வேதா அளித்த வரமுன்னி யேவில்
வலனென்னும் வெய்ய அசுரன்
போதா இருந்த முனிஆவி கோடல்
பொருளாக நெஞ்சில் நினையா

---

218. பாகசாலையின் அருகே அகத்தியரை அழைத்துச் சென்றான்; அங்கு இட்டிருந்த ஆசனத்தில் அவரை அமர்த்தினான்; உபசாரமொழி பேசினான்; வாசங் கலந்த நன்னீரும், கந்தமும், மலரும், நறும்புகையும் தீபமும் கொண்டு வஞ்சக முறையாகப் பூசனை செய்து திருவடிகளில் விழுந்து வணங்கினான்.

219. சமைத்த உணவையும் கறிவகைகளையும் அன்பிலானாகிய அசுரன் படைத்தான். அவற்றைப் பசி தீரும் அளவாக இனிது அருந்தினார் முனிவர்; பின்பு அசுரன் தன் கரத்திற் கொடுத்த வாச நீரைப் பருகி எழுந்து பொடியினாற் கைகளைத் தேய்த்துத் தண்ணீரால் கழுவி (அமர்ந்தார்.)

220. அப்போது கொடிய அசுரன் பிரமதேவன் அளித்த வரத்தை மனத்தில் நினைத்து, விருந்தினராகிய

வாதாவி மைந்த இளையாய் விரைந்து
வருகென்று கூற முனிவன்
தீதார் வயிற்றின் இடையே எழுந்து
திறல்மேட மாகி மொழிவான். 220

எண்ணும லேமுன்பு கடலுண்ட தேபோல
எனதூனும் உண்ட கொடியோன்
உண்ணுடும் உயிர்கொண்ட வலிகொண்டு குழிதான
உதரம் கிழித்து வருவன்
அண்ணுவில் வலனேயெ னக்கூறி யேதம்பி
அரிபோல் முழங்கி யிடலும்
மண்ணுடர் புகழ்கும்ப முனிதீயர் செய்திட்ட
மாயம் தெரிந்து வெகுள்வான். 221

ஊன்கொண்ட கறியாகி நுகர்வுற்ற வாதாவி
உயிர்போகி உண்ட இயல்பே
தான்கொண்டு முடிகென்று சடரத்தை ஒருகாலை
தமிழ்வல்ல முனிதடவலும்

அருந்தவ முனிவரைக் கொல்லும் வண்ணம் "வாதாவி! மைந்தா! இளையோய்! விரைந்து வா வா" என்று அழைத்தான். அங்ஙனே யில் முனிவரது வயிற்றிலே கறியாகக் கிடந்த வாதாவி ஆடாக எழுந்து பேசத் தொடங்கினான்.

221. "அண்ணு வில்வலா! அன்று கடலைப் பருகிய கொடியோன் இன்று எண்ணிப் பாராது என் உடலையும் உண்டான்; இவன் உயிரைக் கவர்ந்து குழிய வயிற்றைக் கிழித்து வருவேன்" என ஆடாகிய தம்பி அரிமான்போல் முழங்கினான். மாநிலம் புகழும் முனிவர் தீயோர் செய்த மாயம் தெரிந்து சீற்றமுற்றார்.

222. "ஊன் கொண்ட கறியாகி, உணவாகிய வாதாவி அப்படியே உயிர் நீங்கி ஒழிக" என்று தம் வயிற்றை ஒருமுறை தடவினார் முனிவர். காட்டுத் தீயில் அகப்பட்ட

கான்கொண்ட எரிமண்டு சிறுபுன் புதல்போன்று
கடியோனும் முடிவா கவே
வான்கொண்டல் எனஅங்கண் முன்னின்ற வன்தம்பி
மாய்வுற்ற துன்னி வருவான். 222

மெய்க்கொண்ட தொன்னாள் உருக்கொண்டு முனிதன்னை
வெகுளுற்றோர் தண்டம் அதனைக்
கைக்கொண்டு கொலையுன்னி வருபோழ்தில் முனிவன்
கரத்தில் தருப்பை ஒன்றை
மைக்கண்டர் படையாக நினைகுற்று விடவில்
வலன்தானும் மடிவெய் தலும்
அக்கண்ட கக்கள்வர் உறையுற்ற இடம்நீங்கி
அப்பால் அகன்றனன்அரோ. 223

விழுமி தாகிய விரதர் வீயவே
வழியி ருந்திடும் வஞ்சர் ஆவிகொள்
பழிய கன்றிடப் பரமன் தாள்மிசை
அழிவில் அன்பொடே அருச்சித் தானரோ. 224

சிறு செடிபோல் வாதாவி சாபத் தீயால் இறந்தொழிந்தான்; கருமேகம்போல் எதிரே நின்ற வில்வலன் தம்பி இறந்த தறிந்து எழுந்தான்.

223. புனைந்திருந்த சிவக்கோலத்தை விட்டுப் பழைய அசுர வடிவம் கொண்டான். கழியொன்றைக் கையில் எடுத்து முனிவரை அடித்துக் கொல்லக் கருதி வந்தான்; அப்பொழுது அவர் அங்கிருந்த புல் ஒன்றை எடுத்தார்; அதனைச் சிவப்படையாகக் கருதி விடுத்தார்; அப்படையின் வேகத்திற்கு ஆற்றாது வில்வலன் வீழ்ந்து மடிந்தான். அப்பொழுதே கொடிய வஞ்சகரது இடத்தை விட்டு அகன்றார் அகத்தியர்.

224. மேன்மை வாய்ந்த முனிவர்களை முடிவு செய்யுமாறு வழியிலே வாசம் செய்த வஞ்சகரது உயிர் கவர்ந்த முனிவர் அப்பாவம் தீர்ந்தொழியும் வண்ணம் பரமசிவன் திருவடியில் ஆர்வத்தோடு அர்ச்சனை புரிந்தார்.

விநாயகர் காகமாய்ச் சென்று காவிரியைக் கவிழ்த்தல்

அனைய காலையில் அரிய தீந்தமிழ்
முனிவ ரன்செயல் முற்றும் நாடியே
துனியில் நாரதன் தொல்லை வானவர்க்கு
இனிய கோமகன் இருக்கை எய்தினன். 225

தன்னிகர் இலாத முக்கண்
சங்கரன் பொதிய வெற்பின்
முன்னுறை கென்று கும்ப
முனிவனை விடுத்த வாறும்
அன்னவன் விந்தம் தன்னை
அகன்பிலத் திட்ட வாறும்
துன்னெறி புரிந்த வெஞ்சூர்
மருகரைத் தொலைத்த வாறும். 226

அப்பழி தீரும் ஆற்றால்
ஐதெனக் கொங்கின் நண்ணி
முப்புரம் எரித்த தொல்லை
முதல்வனை அருச்சித் தேத்தி

---

225. அப்போது அருந்தமிழ் முனிவரது செயல்களை முற்றும் அறிந்த நாரதர் வானவர்க்கினிய வேந்தனாகிய இந்திரனிடம் போந்தனர்.

226. (அவனை நோக்கி அகத்தியர் வரலாற்றைக் கூறலுற்றார்) தனக்கு உவமையில்லாத் தலைவனாகிய ஈசன் அகத்திய முனிவரைப் பொதியமலையிற் போய் இருக்கும்படி அனுப்பியவாறும், அம்முனிவர் விந்தமாமலையைப் பாதலத்தில் அழுத்தியவாறும், மறநெறியை மேற்கொண்ட சூரனது மருகரை முடித்தவாறும்,

227. அவரைக் கொன்ற பாவம் தீருமாறு விரைவில் கொங்கு நாட்டை யடைந்து, சங்கரனை மெய்யன்போடு

மெய்ப்பரி வாகி அங்கண்
மேவிய திறனும் முற்றச்
செப்பினன் பின்னும் ஆங்கோர்
செய்கையை உணர்த்த லுற்றான். 227

அருந்தவ முனிவன் கொங்கின்
அமலனை அருச்சித்து அங்கண்
இருந்திடு கின்றான் நாடி
ஏகினன் அவன்பா லாகப்
பொருந்துகுண் டிகையின் மன்னும்
பொன்னியா றதனை இங்கே
வரும்பரி சியற்றின் உன்தன்
மனக்குறை தீரும் என்றான். 228

குரவன்ஈ துரைத்த லோடும்
குறுமுனி கொணர்ந்து வைத்த
வரநதி தனைஇக் காவில்
வரஇயற் றிடுமாறு என்கொல்
பெருமநீ உரைத்தி என்னப்
பேரமு தருத்தி ஏத்திக்
கரிமுகத் தேவை வேண்டின்
கவிழ்த்திடும் அதனை என்றான். 229

போற்றி வழிபட்டு அங்கு இருந்தவாறும் முறையாகக்கூறி முடித்துப் பின்னும் ஒரு செய்தியைப் பேசலுற்றார்.

228. "அமரர் கோமானே! அவ் அருந்தவ முனிவர் இன்னும் கொங்கு நாட்டில் ஈசனார்க்குப் பூசனை புரிந்து கொண்டிருக்கின்றார்; அதனை நான் கண்டு வந்தேன். அவர் பக்கத்திலுள்ள கமண்டலத்தில் காவிரியாறு அடங்கியுள்ளது. அந்நதி இங்கு வருவதற்குரிய வழியை நாடினால் உன் மனக்கவலை ஒழியும்" என்றார்.

229. இவ்வாறு நாரதர் கூறுதலும் "எம்பெருமானே! குறுமுனிவர் கொண்டு வந்துள்ள திருநதியை இச்சோலைக்கு வருவித்தல் எங்ஙனம்? சொல்லியருள வேண்டும்' என்று வினவினான் இந்திரன். "வேழமுகம் உடைய விநாயகப் பெருமானைப் பேரமுது படைத்துப்

பூண்திகழ் அலங்கல் மார்பின்
 பொன்னகர்க்கு இறைவன் முக்கண்
ஆண்தகைச் சிறுவன் தாள்மேல்
 அன்பொடு பணிந்து போற்ற
நீண்டதோர் அருளால் நோக்கி
 நின்பெரும் பூசை கொண்டாம்
வேண்டிய பரிசென் என்றான்
 வேழமா முகனை வென்றான். 230

இந்திரன் அதுகேட்டு ஐய
 எம்பிராற் காக ஈண்டோர்
நந்தன வனத்தை வைத்தேன்
 அன்னது நாரம் இன்றிச்
செந்தழல் உற்றால் என்னத்
 தினகரன் சுடரால் மாய்ந்து
வெந்துக ளானது அண்ணல்
 மேலடு புரமே என்ன. 231

சகத்துயர் வடபொன் மேருச்
 சாரலின் நின்றும் போந்து
மிகத்துயர் எவர்க்கும் செய்யும்
 வெய்யவள் சிறுவர்ச் செற்று

போற்றினால், அவர் அக்கமண்டலத்தைக் கவிழ்த்திடுவார்" என்று கற்பித்தார் நாரதர்.

230. அதுகேட்ட இந்திரன் சிவகுமாரனாகிய பிள்ளையாரை அன்பொடு தொழுது போற்றினார். அப்பெருமான் (அவன் முன்னே தோன்றிக்) கருணையால் நோக்கி "அன்பனே! நீ ஆற்றிய பெரும் பூசையை ஏற்றுக் கொண்டோம்; உனக்கு வேண்டிய வரம் யாது?" என வினவினார்.

231. அப்பொழுது இந்திரன், "ஐயனே! திருமலர் எடுத்துத் தேவதேவனை வழிபடக் கருதி நந்தவனம் ஒன்று வைத்தேன். அது நீரின்றிக் கரிந்து, தீப்பட்டாற்போல் பகலவன் கதிர்களால் மடிந்து, சிவபெருமான் எரித்த திரிபுரம்போல் பொடியாகி உதிர்ந்தது.

மகத்துயர் விதியின் சேய்க்கு
வருவித்த நிமலன் பொற்றாள்
அகத்தியன் கொங்கின் பால்வந்து
அருச்சனை புரிந்து மேவும். 232

அன்னவன் தனது மாட்டோர்
அணிகமண் டலத்தின் ஊடே
பொன்னிஎன் றுரைக்கும் தீர்த்தம்
பொருந்தியே இருந்தது எந்தாய்
நன்னதி யதனை நீபோய்
ஞாலமேல் கவிழ்த்து விட்டால்
இன்னதோர் வனத்தின் நண்ணும்
என்குறை தீரும் என்றான். 233

பாகசா தனன் இம் மாற்றம்
பகர்தலும் பிறைசேர் சென்னி
மாகயா னனத்து வள்ளல்
மற்றிது செய்தும் என்று
ஓகையால் அவனை அங்கண்
நிறுவிப்போய் ஒல்லை தன்னில்
காகமாய் முனிபால் ஆன
கமண்டல மிசைக்கண் உற்றான். 234

---

232. உலகத்தில் உயர்ந்து விளங்கும் மகாமேரு மலையின் அடிவாரத்திலிருந்து அகத்திய முனிவர் புறப்பட்டு, துன்பம் செய்யும் அசமுகியின் மைந்தர் இருவரையும் கொன்று, கொங்கு நாட்டிற்போந்து ஈசனுக்குகந்த பூசனை புரிகின்றார்.

233. அம்முனிவரது அழகிய கமண்டலத்தில் காவிரி யென்னும் தீர்த்தம் அடங்கியுள்ளது. என் ஐயனே : அந் நன்னதியை இந்நிலத்திற் கவிழ்த்துவிட்டால் என் நந்தவனம் பிழைக்கும் ; என் மனக்குறையும் தீரும்' என்றான்

234. இந்திரன் இவ்வாறு கூறுதலும் பிறை யணிந்த பிள்ளையாராகிய வள்ளல் மனமகிழ்ந்து "அவ் வாறே செய்வோம்" என்று அருளி அவனை அவ்விடத்தில்

கண்டனன் பிள்ளை செல்லக்
கரதலம் எடாநின்று ஒச்ச
அண்டருக்கு அலக்கண் செய்த
கயமுகத் தவுணற் செற்றோன்
குண்டிகை யதனைத் தள்ளிக்
குளிர்புனற் கன்னி அன்னான்
பண்டையில் இசைவு செய்தான்
பாரில்நீ படர்தி என்றான். 235

என்னலும் காஞ்சி தன்னில்
எம்பிரான் உலகம் ஈன்ற
அன்னைதன் அன்பு காட்ட
அழைத்திட வந்த கம்பை
நன்னதி போல விண்ணும்
ஞாலமும் நடுங்க ஆர்த்துப்
பொன்னியாறு உலகம் தன்னில்
பொள்ளெனப் பெயர்ந்த தன்றே. 236

பெயர்தலும் உமைதன் பிள்ளை
பிள்ளையின் உருவம் நீத்துப்
பயில்தரு மறைநூல் வல்ல
பார்ப்பன மகன்போற் செல்லச்

விட்டு, காக வடிவாக விரைந்துபோந்து அகத்திய முனிவரது கமண்டலத்தில் அமர்ந்தார்.

235. காகத்தை ஒட்டக் கையை ஓச்சினார் முனிவர். அப்போது பிள்ளையார் கமண்டலத்தைக் கவிழ்த்துத் தள்ளிக் காவிரிப் பாவையை நோக்கி, 'நீ இனி நிலவுலகில் நடக்கக்கடவாய்: முனிவன் முன்னமே அதற்கு இசைந்திட்டான்' என்றார்.

236. அம்மொழி கேட்ட காவிரி, உமாதேவியாரது அன்பினை வெளிப்படுத்தும் வண்ணம் ஈசனார் அழைத்த பொழுது காஞ்சிமா நகரில் எழுந்துவந்த கம்பா நதி போன்று, விண்ணும் மண்ணும் அதிர விரைந்து பாய்ந்தது.

237. காவிரியோடிய பின்பு பிள்ளையார் காகத்தின் வடிவை விட்டு, வேதம் பயிலும் வேதியச் சிறுவன்போல

சயமிகு தவத்தின் மேலோன்
தன்மையங் கதனை நோக்கி
உயிர்முழு தடவே தோன்றும்
ஒருவன்போல் உருத்து நின்றான். 237

தேவனோ அவுணன் தானோ
அரக்கனோ திறலின் மேலோன்
யாவனோ அறிதல் தேற்றேன்
ஈண்டுறும் நதியைச் சிந்திப்
போவனோ சிறிதும் எண்ணு
அகந்தையன் போலும் அம்மா
யாவனோ வன்மை தன்னை
அறிகுவன் விரைவில் என்றான். 238

குட்டுவான் துணிந்து செல்லும்
குறுமுனிக்கு அணியன் ஆகிக்
கிட்டுவான் விசும்பின் ஊடு
கிளருவான் திசைகள் தோறும்
முட்டுவான் பின்பு பாரில்
முடுகுவான் அனையன் கைக்கும்
எட்டுவான் சேயன் ஆகி
ஏகுவான் எவர்க்கும் மேலோன். 239

நடந்து சென்றார்: அதுகண்ட அகத்திய முனிவர் சர்வ சங்கார காலத்தில் தோன்றும் மூர்த்திபோல் சீற்றங் கொண்டு நின்றார்.

238. "இவன் தேவனோ? அசுரனோ? அரக்கனோ? ஆற்றல் வாய்ந்த இவன் யாவனோ அறியேன்! ஆற்றைக் கவிழ்த்துவிட்டு அமைதியாகப் போகின்றான்! கருத்தின்றிக் காரியம் செய்யும் செருக்கன் போலும்! யாவனாயினும் இவன் வன்மையை விரைவில் அறிவேன்" என்று,

239. எழுந்து இரு மணிக்கரங்களையும் மடித்தார்; அவன் தலையில் குட்டுதற்காகச் சென்றார். அவ் வேதியச் சிறுவர் முனிவரின் அருகே வருவார்; கிளர்ந்து மேலே எழுவார்; எட்டுத் திசைகளையும் எட்டுவார்; நெருங்கி வருவார்; நெடுந்தூரம் செல்வார்.

ஓட்டமோடு உலவும் முன்னோன்
ஒல்லையில் தனது மேனி
காட்டினன் முனிவன் காணுக்
கதுமெனக் கலங்கி அந்தோ
கோட்டிப முகனோ ஈண்டுக்
குறுகினன் அவனை யானோ
ஈட்டொடு துரந்தேன் கொல்லென்று
ஏங்கினன் இரங்கு கின்றான். 240

இரங்கிய முனிவன் முன்னம்
ஏந்தலைப் புடைப்பான் கொண்ட
கரங்களை எடுத்து வானில்
காருரும் ஏறு வெற்பின்
உரங்கிழி தரவே நீங்காது
உரப்பினில் வீழ்வ தேபோல்
வரங்கெழு தனது நெற்றி
வருந்துறத் தாக்கல் உற்றான். 241

அந்தண குமரன் என்றே
ஐயநின் சிரமேல் தாக்கச்
சிந்தனை புரிந்தேன் யாதும்
தெளிவிலேன் அதற்குத் தீர்வு

---

240. இவ்வாறு விரைந்துலாவிய விநாயகப் பெருமான் தொடர்ந்துவந்த முனிவர்க்குத் தம் உண்மைத் திருவுருவைக் காட்டினார். கண்டார் முனிவர்; கலங்கினார்; "அந்தோ! விநாயக மூர்த்தியோ இங்கு எழுந்தருளியவர்! அவரையா யான் வன்மையோடு துரத்தினேன்!" என்று ஏக்கமுற்று வருந்தினார்.

241. அவரைக் குட்டும்படி மடக்கிய கரங்களை எடுத்து, மலையின்மேல் இடி விழுந்தாற்போல் தம் நெற்றியிலே குட்டிக்கொண்டார்.

242. "ஐயனே! ஒன்றும் உணராத அடியேன் உம்மை அந்தணச் சிறுவன் என்று எண்ணினேன்! உமது தலையில் குட்டத் துணிந்தேன்; அப்பெருங் குற்றத்திற்குப்

முந்தினன் இயற்று கின்றேன்
என்றலும் முறுவல் செய்து
தந்தியின் முகத்து வள்ளல்
அலமரல் தவிர்தி என்றான். 242

ஈண்டுநீ புரிந்த தெல்லாம்
எமக்கிதோர் ஆடல் என்றே
காண்டுமால் அன்றி நின்பால்
காய்சினம் கொண்டேம் அல்லேம்
நீண்டசெஞ் சடையெம் ஐயன்
நேயன்நீ எமக்கும் அற்றே
வேண்டிய வரங்கள் ஈதும்
கேண்மதி விரைவின் என்றான். 243

இன்னே தமியேன் எனவே இனிநின்
முன்னே நுதலில் முறையால் இருகை
கொன்னே கொடுதாக் குநர்தம் குறைதீர்த்து
அன்னே யெனவந்து அருள்செய் எனவே. 244

பரிகாரமாக என்னை நானே குட்டிக்கொள்கின்றேன்" என்றார் முனிவர். அம்மொழி கேட்ட பெருமான் புன்னகை புரிந்தார்; 'மனம் வருந்தாதே' என்றார்.

243. "இங்கு நீ செய்ததையெல்லாம் சிறந்த விளையாட்டாகக் கண்டோமேயன்றிக் கோபம் கொண்டோமில்லை. நெடுஞ் சடையுடைய எம் தந்தையார்க்கு நீ நேசன்; ஆதலால் எமக்கும் அப்படியே. நீ வேண்டிய வரந் தருகின்றோம்; விரைந்து கேள்" என்றார்.

244. அப்பொழுது முனிவர் "ஐயனே! என்னைப் போல் உம் முன்னே நின்று, இரு கைகளாலும் முறையாக நெற்றியில் குட்டிக்கொள்வோரது குறைகளைத் தாய்போல் கருணைகூர்ந்து தீர்த்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்.

இந்திரன் மகிழ்வுற இனைய பான்மையால்
நந்தன வனமெலாம் நன்று பூத்தலும்
அந்தநன் மலர்கொடே ஆதிக்கு அன்பினுல்
முந்துறு பூசனை முயல முன்னினுன். 248

அப்பெரு நாள்முதல் ஆதி அண்ணலை
இப்படி அருச்சனை இயற்றி வைகலும்
ஒப்புற நோற்றரோ உம்பர் கோமகன்
வைப்புறு சண்பக வனத்தின் வைகினுன். 249

அந்நாள் அதனில் அவுணர்க்கு இறைஏவல்
தன்னுல் மிகவும் தளர்ந்து சிலதேவர்
எந்நாள் இப்புன்மை எமைநீங்கும் என்றிரங்கிப்
பொன்னுடு விட்டுப் புவிதன்னில் போந்தனரே. 250

தீந்தமிழின் வைப்பான தெக்கிண தேயம்நண்ணி
மாந்தர்புகழ் காழிவனம் போந்து வானவர்தம்
வேந்துதனைக் கண்டு விரைநாள் மலரடிக்கீழ்ப்
போந்து பணிந்து புகழ்ந்து புகல்கின்ருர். 251

---

248. இந்திரன் மனத்தை மகிழ்வித்தது. நன்ருக மலர்ந்தது. அந் நறுமலர் கொண்டு முன்போலவே ஈசனுக்குப் பூசனைப் புரியக் கருதினுன் இந்திரன்.

249. அன்று முதல் ஆதிமுதல்வனுகிய பெருமானை முறைப்படி நாள்தோறும் அருச்சனை செய்து சண்பகச் சோலையில் இந்திரன் தவம் புரிந்திருந்தான்.

250. அப்போது சூரனுக்கு ஊழியம் செய்து உலைவுற்ற தேவர் சிலர் "இச்சிறுமை எம்மைவிட்டு என்று நீங்குமோ" என்று ஏங்கி விண்ணுலகை விட்டு மண்ணுலகம் போந்தனர்.

251. தெள்ளிய தமிழ் மொழியின் இருப்பிடமாகிய தென்னுட்டை யடைந்து, புகழமைந்த சீர்காழிப் பூங்கா வனத்தை நண்ணி இந்திரனைக் கண்டனர்; அன்று மலர்ந்த செந்தாமரை போன்ற அவன் அடிகளில் விழுந்து எழுந்து போற்றிப் பின் பேசலுற்ருர்.

மையார் களத்தார் வரம்பெற்ற சூரனுக்குச்
செய்யாத ஏவலெலாம் செய்தோம் நெறிநீதி
எய்யாத மானம் இவையெல்லாம் தானிழந்தோம்
ஐயா மிகவும் அலுத்தோம் அலுத்தோமே. 252

என்றுப் பலவும் இயம்பி இரங்குதலும்
மன்று கியபகவான் மாற்றம் அவைகேளா
அன்னார் மனங்கொண்ட ஆகுலத்தைக் கண்டுநெடிது
உன்று அயரா உயிரா உரைக்கின்றான். 253

அல்லல் புரியும் அவுணர்பணி யால்வருந்தித்
தொல்லையுள மேன்மையெலாம் தோற்றனமேமற்றினிநாம்
எல்லாரும் வெள்ளி மலைக்கேகி இறைவனுக்குச்
சொல்லி நமது துயரகற்றிக் கொள்வோமே. 254

ஆவது ஒருகாலை அமரர்கோன் தான்எழுந்து
தேவர் தமை நோக்கிச் சிறிதிங்கு இருத்திர்என
ஏவரையும் அங்கண் இருத்தி ஒருதான்ஏகிப்
பாவை அயிராணி பாங்கர் அணுகினனே. 255

---

252. "ஐயனே! நீலகண்டனிடம் வரம்பெற்ற சூரனுக்குச் செய்யத்தகாத வேலையெல்லாம் செய்தோம்; நெறியிழந்தோம்; நீதியிழந்தோம்; மானமும் இழந்தோம். அல்லற்பட்டு அலுத்தோம், அலுத்தோம்."

253. என்று பலவாறாக முறையிட்டு வருந்தினார்கள். அதுகேட்ட இந்திரன் அன்னார் மனத்திலமைந்த அருந்துயரைக் கண்டான்; நெடுஞ் சிந்தனையில் ஆழ்ந்தான்; அயர்ந்தான்; பெருமூச்செறிந்து,

254. "அல்லல் விளைக்கும் அசுரர் பணியால் எல்லோரும் பெருமையிழந்து சிறுமையுற்றோம். இனி வெள்ளிமாமலையை அடைந்து இறைவனிடம் முறையிட்டு நம் துயரத்தைத் தொலைப்போம்."

255. (என்று கூறி) இந்திரன் எழுந்து வானவரை நோக்கிச் "சிறிதுநேரம் இங்கே இருங்கள்" எனப் பணித்துச் சித்திரப் பாவை போன்ற இந்திராணி இருந்த இடம் போந்தான்.

ஆகின்ற துன்பத் தழலால் பதைபதைத்து
வேகின்ற சிந்தை வியன்அமரர் தம்முடன்யான்
பாகொன்று தீஞ்சொல் உமைபாகன் பனிவரைக்குப்
போகின்றேன் ஈது புகலுதற்கு வந்தனனே. 256

என்னும் பொழுதில் இடருற்று இகல்வாளி
தன்அங்கம் மூழ்கத் தளர்ந்துவீழ் மஞ்ஞையென
அன்னம் பொருவும் நடையாள் அயிராணி
மன்னன் திருமுன் மயங்குற்று வீழ்ந்தனளே. 257

அயிராணி வருந்துதல்

பொன்னாடு விட்டுப் புவியின் வனத்திருந்தும்
உன்னார் அருள்கொண்டு உவப்புற்று மேவினனால்
என்னார் உயிரே எனைநீ பிரிவாயேல்
பின்னார் துணையான் பிழைக்கும் நெறியுண்டோ. 258

---

256. "மார்தே! வானவரெல்லாம் மனம் வெந்து துன்பத்தால் துடிக்கின்றார்கள்; அன்னவரை அழைத்துக் கொண்டு நம் குறைகளை முறையிடுவதற்காக, மதுரமொழி பேசும் மங்கை பங்கனாகிய இறைவன் வீற்றிருக்கும் இமய மலைக்குப் போகின்றேன். இச்செய்தியைச் சொல்ல வந்தேன்" என்றான்.

257. அம்மொழி கேட்ட அயிராணி அம்பு பாய்ந்த மயில்போல் அவன்முன்னே மயங்கி விழுந்தாள்.

258. 'அந்தோ! இன்னுயிர்த் தலைவா!' பொன்னாட்டை விட்டும், இப்புவியில் வனத்திருந்தும், உன் அருளே தஞ்சமாக இன்றளவும் வாழ்ந்திருந்தேன். என்னை நீ பிரிந்தால் பின்னையாரே துணை யாவர்? பேதையேன் பிழைக்குமாறுண்டோ?

உன்அன் புடைய ஒருமகனும் இங்கில்லை
துன்னும் சுரருமில்லை தொல்களிற்றின் வேந்துமில்லை
பின்இங்கு ஒருமா தரும்இல்லை பெண்ஒருத்தி
தன்னம் தனியிருக்க அஞ்சேனே தக்கோனே. 259

மன்னே இதுவோர் துணிவுரைப்பன் மன்னுயிர்கொண்டு
இன்னே தமியேன் இரேன் உலகில் யாவரையும்
முன்னே படைத்தளிக்கும் முக்கணர்தம் வெற்பினுக்குஉன்
பின்னே வருவேன் பெயர்வாய் எனஉரையா. 260

தேவியை இந்திரன் தேற்றுதல்

வாராய் சசியே வருந்தேல் அமரருடன்
காரார் களத்தோன் கயிலைக்கு யான்போனல்
ஆராய்ந்து நின்னை அளிப்பவர் அற்ருல்அன்றே
பேரார்வ மோடுஎனது பின்நீ வருவதுவே. 261

ஆற்றல் பெரிதுடைய ஐயனே நின்தன்னைப்
போற்றி யருள்செய்யும் பொருந்துதியால் ஈண்டென்று
தேற்றுதலும் அன்னான் சிறப்பெவன்கொல் செப்புகெனக்
கோற்றொடி கேள் என்ன அமரேசன் கூறுகின்ருன். 262

---

259. உன் அன்புடைய ஒரு மகனும் இங்கில்லை. வானவரும் இல்லை; வெள்ளை யானையும் இல்லை; மாதரும் யாரும் இல்லை; தன்னந்தனியாக இங்கிருக்க அஞ்சுகின்றேன். ஐயனே!

260. மன்ன! நின்னைப் பிரிந்து என்னுயிர் நில்லாது; ஆதலால் ஒன்று கூறுகின்றேன். முன்னவன் இருந்தருளும் வெள்ளிமாமலைக்கு உன் பின்னே நானும் வருகின்றேன்; எழுக'' என்ருள்.

261. அப்போது இந்திரன் தேவியை நோக்கி "மாதே! நீ மனம் வருந்தாதே! வானவரோடு நான் கயிலைக்குச் சென்று வருமளவும் உன்னைக் காப்பவர் இல்லையென்ருல் அன்றோ நீ என் பின்னே வரவேண்டும்?

262. ஆற்றல் மிகப்பெற்ற ஐயனார் என்னும் அரிகர புத்திரனே நின்னைக் காத்தருள்வார்; ஆதலால் கவலையற்றிரு'' என்று தலைவன் கூறுதலும், "அவ்வையனார் யாவர்! அவர் பெருமை என்ன'' என்று அயிராணி வினவினாள்

அயிராணியை ஐயனாரிடம் ஒப்புவித்தல்

இந்திரன் மங்கை இசைந்தது காணா
நந்தமர் கையனும் நம்பனும் நல்கும்
மைந்தனை உன்னி வழுத்துத லோடும்
அந்தமி லாஎம தையன் அறிந்தான். 263

ஆத்தன் அமர்ந்த அகன்கிரி நண்ணி
வாய்த்திடும் இவ்விடை வந்திடு காறும்
பூத்திடு காமலர் புலோமசை தன்னைக்
காத்தருள் என்றிது கட்டுரை செய்ய. 264

மேதகு செண்டுள வீரன் இசைப்பான்
ஏதமு றாதநின் ஏந்திழை தன்னைத்
தீதடை யாது சிறப்பொடு காப்பன்
நீதனி என்று நினைந்திடல் கண்டாய். 265

வாளமர் நீந்தி வயந்தனில் மிக்க
காளன் எனப்படு கட்டுரை யோனை
ஆளுடை அண்ணல் அருள்கொடு நோக்கிக்
கேள்இவை என்று கிளத்திடு கின்றான். 266

(அப்போது அவர் பிறப்பையும் சிறப்பையும் இந்திரன் எடுத்துரைத்தான்.)

263. ஐயனார் காவலில் இருக்க இசைந்தாள் அயிராணி. அதுகண்ட இந்திரன் அரிகர புத்திரனை நினைத்துத் துதித்தான்; அழிவற்ற ஐயனார் அதையறிந்து (எழுந்தருளிக் காட்சியளித்தார்.)

264. "ஐயனே! யான் இறைவன் அமர்ந்தருளும் கயிலையங்கிரிக்குச் செல்கின்றேன்; மீண்டு வருமளவும் இவ் இந்திராணியைக் காத்தருள்வீராக" என்று வேண்டினான் இந்திரன். அப்போது,

265. கையில் செண்டேந்திய ஐயனார் "வாசவனே! இம்மங்கை இங்கு தனியே இருக்கின்றாள் என்று மனக் கவலை கொள்ள வேண்டாம். யாதும் தீது வந்தடையாமல் யான் காப்பேன்" என்றார்.

266. உடனே வாட்போரில் வல்ல வீரனாகிய மாகாளனை அழைத்து அருளொடு நோக்கி,

மூவரின் முந்திய மூர்த்தி வரைக்குப்
போவது முன்னினன் பொன்னகர் மன்னன்
தேவிஇ ருந்தனள் தீங்குவ ராமே
காவல்கொள் நீஎனக் கற்பனை செய்தான். 267

இந்திரன் கயிலைக்குச் செல்லுதல்

மாதினை அவ்விடை மன்னுற வைத்தே
பேதுறு வானவர் பேரவை நண்ணிப்
போதும் எனக்கொடு போந்து விரைந்தே
நாதன் அகன்கிரி நண்ணினன் அன்றே. 268

நிற்றலும் வந்ததென் நீபுகல் என்னச்
சொற்றனன் அங்கது தொன்மையின் நாடி
இற்றில கொல்உன் இருந்துயர் என்னு
நற்றவர் காணுறும் நந்தி உரைப்பான். 267

நால்வர் உணர்ந்திட நாயகன் ஞான
மூலவி யோக முதற்பொருள் காட்டி
ஏல இருந்தனன் யாவரும் ஏகக்
காலம் இதன்றென வேகமு றுற்றான். 270

---

267. "காளா! கேள்; பொன்னகர் மன்னனாகிய இந்திரன் மூவர்க்கும் முதல்வனாகிய இறைவனைக் காணக் கயிலைமலைக்குச் செல்கின்றான்; அவன் வருமளவும் இதோ இருக்கின்ற இந்திராணிக்கு எவ்வகைத் தீங்கும் நேராமல் காத்திடுதி" என்று கட்டளையிட்டான்.

268. அந்நிலையில் இந்திரன் மாகாளன் காவலில் மங்கையை வைத்து, வானவரிடம் போந்து அவரை அழைத்துக்கொண்டு வெள்ளிமாமலையை நோக்கி விரைந்து சென்றான்.

269. திருக்கயிலாசத்தின் தலைவாசலில் நின்ற இந்திரனைக் கண்டார் நந்திதேவர். 'நீ வந்த காரியம் யாது' என்று வினவினார். விளைந்த தீமையெல்லாம் எடுத்துரைத்தான் வானவர் கோமான். அடிமுதல் நிகழ்ந்ததை அறிந்து " இன்னும் நின் துயரம் தீர்ந்திலதோ?

270. ஈசனார் ஜனகாதி முனிவர் நால்வர்க்கும் ஞான யோகத்தின் தன்மையை உணர்த்தியருள்கின்றார். ஆத

அயிராணியும் அசமுகியும்

நீங்காதுறை தனிநாயகன்
நெடுமால்அயன் உணரா
ஓங்காரமுதற் பண்ணவன்
உறையும்கிரி செல்லப்
பாங்காய்அணங் கினர்போற்றிடப்
பயில்காழி வனத்தில்
பூங்காவனம் தனிலேசசி
இருந்தேதவம் புரிந்தாள். 271

மாலுற்றிட வாழ்சூரபன்
மாவின்கிளை முழுதும்
மூலத்தொடும் முடிவித்திடும்
முறைஊழ்வினை என்னச்
சூலத்தினை ஏந்தித்தனி
தொடர்துன்முகி உடனே
ஆலத்தின துருவாம்என
ஆங்குற்றனள் அன்றே. 272

லால் மற்று எவரும் அவரிடம் செல்வதற்கு இது ஏற்ற காலமன்று" என்று எடுத்துரைத்தார் நந்தி.

271. பிரமதேவனும் திருமாலும் அறியவொண்ணுப் பிரணவப் பொருளாகிய இறைவன் அமர்ந்தருளும் திருக் கயிலாய மலையை நோக்கி இந்திரன் சென்ற பின்னர், சீர் காழிப் பூங்காவனத்தில் தேவமாதர் போற்ற இந்திராணி தவம் புரிந்திருந்தாள்.

272. அப்பொழுது வெற்றி வெறியுற்று மயங்கி வாழ்ந்த சூரன் குலத்தை வேரோடு அழிக்கவந்த ஊழ் வினை போல, (அவன் தங்கையாகிய அசமுகியென்பாள்) துன்முகியென்னும் தோழியோடு, சூலம் ஏந்திய கையும், ஆலகாலம் போன்ற மேனியும் உடையளாய் அங்கு வந்தாள்.

தண்தேனமர் குளிர்பூங்குழல்
சகியென்பவள் தனை நான்
கண்டேன் இனி இவள்மையலில்
கவலாதொழி கென்றே
வண்டோலிடு தொடைமன்னவன்
மகிழ்வெய்தமுன் உய்ப்பக்
கொண்டேகுவன் யானே இவள்
தனையென்று குறித்தாள். 273

ஆர்ஒப்புனக் குலகம்தனில்
அருள்ஆழியம் பகவன்
மார்பத்துறை திருமங்கையும்
மற்றிங்குனக் கொவ்வாள்
பாரிற்கரந் திருந்தேதவம்
பயில்வாய்இதென் உன்னைச்
சேரத்தவம் புரிகின்றனன்
திறல்சூரபன் மாவே. 274

அழிவில்லவன் அவன் இங்கிவன்
அழியும்பரி சுடையான்
பழியில்லவன் அவன் இங்கிவன்
பழிவேலையில் திளைப்பான்

---

273. (தனித்திருந்த தேவியைக் கண்டு வியப்புற்று) "விரையுறு நறுமலர் சூடிய அயிராணியைக் கண்டேன் நான்; இவளிடம் கொண்ட ஆசையால் அலமந்த அசுர வேந்தன், இனிக் கவலையொழிந்து களிப்புறுமாறு இவளை அவன் முன்னே எடுத்துச் செல்வேன்'' என்று எண்ணினாள்.

274. அவள் முன்னே போந்து 'மாதவம் புரியும் மாதே! உன்னையொப்பவர் இவ்வுலகில் உண்டோ? மாயவன் மார்பில் உறையும் திருமகளும் உனக்கு நிகராகாள். வல்லாளனாகிய சூரன் நின்னையடையத் தவம் புரிகின்றான். நீ எதற்காக இங்கே கரந்திருந்து கடுந்தவம் செய்கின்றாய்?

275. அவன் அழிவற்றவன்; உன் கணவனாகிய இவன் (இந்திரன்) அழிவுள்ளவன். அவன் பழியற்றவன்;

கழியும் படர் உழந்தான் இவன்
களிப்புற்றுளன் அவனே
தொழுவன்பல ரையும்இங்கிவன்
தொழுமோ அவன் சிலரை. 275

பொன்னேடிகல் பங்கேருகப்
பூங்கோமளை தனையும்
அன்னேன்வெறுத் திடுவன்பிறர்
அனைவோரையும் அஃதே
உன்னேடுள வறுகாதலின்
உறும்இங்கிது சரதம்
என்னேடினி வருவாய்கடி
தென்ருள்அறம் கொன்ருள். 276

அயிராணியின் துயரம்

தக்க ஏழகத் தலையள் கூறிய
அக்கொடும்சொலை அணங்கு கேட்டலும்
தொக்க தன்செவித் துளையில் அங்கிவேல்
புக்க தேஎனப் பொருமி விம்மினுள். 277

அவன் இன்ப வாழ்வு வாழ்பவன்; இவன் துன்பத்தில் உழல்பவன். அவன் பிறரை வணங்காப் பெற்றி வாய்ந்தவன்; இவன் பலரையும் தொழுது நிற்பவன்.

276. திருமகளினும் சிறந்த அழகுடைய பதுமகோமளையையும் இனி அவன் வெறுத்திடுவான். மற்றைய காதலிமாரையும் அப்படியே. எல்லையற்ற காதலோடு உன்னுடன் இருந்து வாழ்வான். இது உண்மை. ஆதலால் என்னேடு புறப்படு" என்ருள் அறத்தினைக் கொன்றவளாகிய அசமுகி.

277. அன்னுள் கூறிய கடுஞ்சொற்களைக் கேட்ட அயிராணி, பழுக்கக் காய்ச்சிய வேலாயுதத்தைக் காதிற் பாய்ச்சினுற்போலத் துயருற்றுத் துடித்தாள்.

பழியும் பார்த்திலை படியி கழ்ந்திடு
மொழியும் பார்த்திலை முறையும் பார்த்திலை
வழியும் பார்த்திலை வருவ பார்த்திலை
இழியும் தீயசொல் இயம்பற் பாலையோ. 278

அசமுகியின் சீற்றம்

என்ற காலையில் எயிறு தீயுகக்
கன்று சேயிதழ் கறித்து வெய்துயிர்த்து
ஒன்றோ டொன்றுகை உருமில் தாக்கியே
நன்று நன்றெனு நகைத்துச் சீறினாள். 279

முடிவில் ஆற்றலார் மூவர் யாவரும்
தடைசெய் கிற்பினும் சமரின் ஏற்பினும்
விடுவன் அல்லன்யான் விரைவின் நிற்கொடே
படர்வன் அன்னது பார்த்தி மேலெனு. 280

பாவி தீண்டலும் புலம்பிப் பைந்தொடி
ஆவி போங்கொன அவசம் ஆகியே
ஓவி லாததொல் உணர்வு மாய்ந்தனள்
காவி ஒண்கணீர் கலுழத் தேம்பினாள். 281

---

278. அசமுகியை நோக்கி "அந்தோ! நீ பழியும் பார்த்திலை; வையகம் கூறும் வசையும் பார்த்திலை; முறையும் பார்த்திலை; நெறியும் பார்த்திலை; வரும் பாவம் பார்த்திலை. இவ்விழிந்த கொடுஞ்சொல்லை நீ இயம்பலாகுமோ? என்றாள்.

279. அப்போது அசமுகி தீப்பொறி பறக்கப் பற்களைக் கடித்தாள்; கறுத்த உதடுகளை மடித்தாள்; பெருமூச்சு விடுத்தாள்; இடி இடித்தாற்போலக் கைகளை அடித்தாள்; நன்று நன்று என்று நகைத்தாள்; சீறினாள்.

280. "முற்றிய ஆற்றல் வாய்ந்த மூவர் தடுப்பினும், மற்று யாவர் தடுப்பினும், போர் தொடுப்பினும், உன்னை யான் விடுவதில்லை. விரைந்து எடுத்துச்சென்றே தீர்வேன். அதனை இன்னே பார்" என்று,

281. அயிராணியைப் பிடித்தாள். அங்கிலையில் அவள் அரற்றினாள்; ஆவி யிழந்தாற்போல் அவச

நார் இலாதவள் நலிந்து கொண்டனள்
பேரும் எல்லையில் பேதுற் றேஉளம்
சோரு கின்றவள் சுற்றும் நோக்கியே
ஆரும் காண்கிலள் அரற்றல் மேயினாள். 282

அசமுகியும் தோழியும் கையறுபடுதல்

போகலும் அதனை ஐயன்
பொருநரின் தலைவன் பாரா
ஏகுதி போலும் நில்லென்று
எய்தியே உடைவாள் வாங்கிச்
சேகுறும் மனத்தாள் கூந்தல்
செங்கையால் பற்றி ஈர்த்துத்
தோகையைத் தொட்ட கையைத்
துணித்தனன் விண்ணோர் துள்ள. 283

அயமுகி வீழ்த லோடும்
அழுங்கியே அயலின் ஈன்ற
வயமிகு துன்மு கத்து
மங்கைதன் கரத்தில் ஒன்றைச்

முற்றாள்; உணர்வு தீர்ந்தாள்; நீல மலர்போன்ற கண்களால் நெடுங்கண்ணீர் வடித்தாள்.

282. இப்படி வாடி வருந்திய தேவியை இரக்கமற்ற அசமுகி பற்றியிழுத்துச் சென்றாள். மனங் கலங்கிய மாது சோர்ந்து சுற்றுமுற்றும்பார்த்தாள்; காப்பவர் யாரையும் காணாளாய் வாய்விட்டுக் கதறினாள்.

283. அதுகண்ட ஐயனாரின் படைத் தலைவனாகிய மாகாளன் வெளிப்பட்டான்; நில் என்று சொல்லி உடைவாளை உருவினான். ஒரு கரத்தால் அசமுகியின் தலையைப் பற்றி இழுத்து, அயிராணியைத் தொட்ட கையை அறுத்திட்டான். வானவர் துள்ளி மகிழ்ந்தனர்.

284. அசமுகி விழுந்தவுடன் அருகே வந்து நின்ற துன்முகியை நோக்கி, "நீயும் தேவியின் மேனியைத்

செயிர்அறு சசியை நீயும்
தீண்டினை போலும் என்னாத்
துயல்வரு தொடையல் வீரன்
துணித்தனன் சோரி பொங்க. 284

அசமுகி வஞ்சினம் கூறல்

துப்பு றுத்திய அண்டங்கள்
யாவினும் சூரன்
வைப்பு றுத்திய திகிரியும்
ஆணையும் வழங்கும்
இப்பு றத்தினில் ஒளிப்பினும்
இதுவன்றி அண்டத்து
அப்பு றத்தினில் ஒளிப்பினும்
பிழைப்புமக் கரிதே. 285

உங்கள் தம்மையான்
சிறைப்படுத் தேன்எனில் உலகம்
எங்கும் ஆள்கின்ற சூரபன்மா
வெனும் இறைவன்
தங்கை யன்றுயான் எனதுரம்
தனில்எழுந் தனவும்
கொங்கை யன்றுயான் பேடியே
குறிக்கொள்என்று அகன்றாள். 286

தீண்டினையன்றோ" என்று கூறி அவள் கரத்திலும் ஒன்றைத் துணித்திட்டான். குருதி பொங்கிப் பெருகிற்று.

285. அப்போது, கையற்ற அசமுகி 'வலிமைசான்ற உலகமெல்லாம் சூரனே ஆள்கின்றான். அவன் ஆழியும் ஆணையும் எங்கும் செல்லும். ஆதலால் இங்கே இருப்பினும், மற்று எங்கே சென்று ஒளிப்பினும் இனி நீர் பிழைத்தல் அரிது.

286. உம்மை யான் சிறைப்படுத்தாவிடில் நான் எங்கும் ஆள்கின்ற சூரன் தங்கையல்லேன்; என் மார்பில் இருப்பது கொங்கையும் அன்று. பேடி என்று என்னை இகழ்க" என்று கூறிச் சென்றாள்.

இந்திரன் தேவியுடன் மேருமலைக்கு ஏகுதல்

அகல நின்றதோர் வீரமா
  காளனும் அடலோன்
உகவை யோடுறு சசியினை
  நோக்கினின் உளத்தில்
தகுவர் தங்களுக்கு அஞ்சலை
  அன்னை உன் தலைவன்
புகுதும் எல்லையும் அளிப்பன்
  ஈண்டுறை கென்றுபோனான். 287

சுடர்ப் பெருங்குலி சத்திறை
  சூழ்ந்தனன் துணியா
அடுத்த மங்கையை உடன்கொடே
  விரைந்தவண் அகன்று
புடைக்கண் வந்திடும் கடவுளர்
  தம்மொடும் புராரி
எடுத்த வார்சிலைப் பொற்றையில்
  கரந்தனன் இருந்தான். 288

---

287. சிறிது விலகி நின்ற வீர மாகாளன் என்னும் வீரன் அயிராணியை நோக்கி, "அன்னையே! அசுரரைக் குறித்து நீர் அஞ்சவேண்டாம். உமது கணவன் வருமளவும் நான் காப்பேன். இச்சோலையிலே இருப்பீராக" என்று சொல்லிச் சென்றான்.

288. (நாரதர் வாயிலாகப் பூஞ்சோலையில் நிகழ்ந்ததெல்லாம் அறிந்த) இந்திரன் தன் தேவியிருந்த இடம் போந்து செய்யத்தக்கதைக் கருதினன். அவளையும் அழைத்துக்கொண்டு வானவரோடும் சிவபெருமான் வில்லாக எடுத்த மாமேரு மலையிற் சென்று மறைந்திருந்தான்.

289. பரந்த உலகங்களிலுள்ள சூரியர்களை யெல்லாம் ஒருங்கே திரட்டி ஊழித் தீயில் இட்டு உருக்கி ஒன்றாக்கி ஆசனமாகச் செய்து, விண்மீன்களை அதில் நன்மணிகளாகப் பதித்து, சிறந்த கலைகளோடு விளங்கும்

சூரன் கொலு விருத்தல்

பரக்குறும் அண்டம் தொறுந்தொறும் உளவாம்
பகலினைப் பரிமுகத் தெரியின்
உருக்கிஒன் றாக்கித் தவிசென இயற்றி
ஒளிரு தாரகை அவண்குயிற்றித்
தருக்குறு கின்ற மதிகளை மடங்கல்
தகவுசெய்து இருத்திய தென்னத்
திருக்கிளர் அவையத்து அவுணர்கோன் இருப்பச்
சிறந்ததோர் அரியணை திகழும். 289

ஆனதோர் மன்றத்து அரியணை மிசையே
ஆயிர கோடி அண்டத்தின்
மேனிமிர் வடவை அங்கியும் விடமும்
மிசைந்து அழியாநெறி மேவித்
தானவர் பரவக் கூற்றெலாம் ஒன்றாய்த்
தணப்பில் பேரணிகலம் தயங்க
வானிமிர்ந்து உற்றால் என்ன வெஞ்சூர
மன்னவர் மன்னன்வீற் றிருந்தான். 290

தேனமர் ஐம்பால் உருப்பசி அரம்பை
திலோத்தமை மேனகை முதலாம்
வானவர் மகளிர் இயக்கர்தம் மகளிர்
வலிகெழும் அரக்கர்தம் மகளிர்

சந்திரர்களைச் சிங்கமாக அமைத்தாற்போன்று, வீரமகேந்திர நகரத்து அரண்மனையில் அசுரர் கோமானது அரியாசனம் விளங்கிற்று.

290. அத்தகைய அரியாசனத்தில் கொடிய நெருப்பாலும் நஞ்சாலும் அழியாத் தன்மை வாய்ந்த சூரன், கூற்றுவரெல்லாம் ஓர் உருவாகி, அணிகலம் பூண்டு, விண்ணுற நிமிர்ந்து விளங்கினாற்போன்று அசுரர்கள் போற்ற அரசு வீற்றிருந்தான்.

291. அழகிய கூந்தலை யுடைய ஊர்வசி, அரம்பை, திலோத்தமை, மேனகை முதலாய தேவ மாதரும், இயக்க மாதரும், வலிமை வாய்ந்த அரக்க மாதரும், அசுர மாதரும், விஞ்சையர், சாரணர், சித்தர் என்னும் முக்குல மாத

தானவர் மகளிர் விஞ்சையர் மகளிர்
சாரணர் சித்தர்தம் மகளிர்
ஏனையர் மகளிர் யாவரும் வெவ்வேறு
இயற்படு களிநடம் இயற்ற. 291

மாகநல் வேள்வி ஆற்றிய திறனும்
மதிமுடிப் பரனருள் அடைந்தே
ஏகிய திறனும் தனதனை முதலா
யாரையும் நிலையழித் தனவும்
சேகுறும் அண்டம் யாவையும் கண்டு
திருவுடன் அரசியற் றியதும்
பூகத நிலையத்து அவுணர்கள் பல்லோர்
புடைதனில் முறைமுறை புகழ. 292

அசமுகி சூரனிடம் செல்லுதல்.

இன்ன பலபல எய்தச் சூரனும்
மன்னவன் இருத்தலும் மற்றவ் எல்லையில்
தொன்னகர் அணித்துறத் துன்மு கத்தினாள்
தன்னொடும் அசமுகி தான்வந்து எய்தினாள். 293

ரும், மற்றைய மாதரும் வெவ்வேறாக முறைப்படி நடனம் செய்யவும்,

292. சூரன் செய்த சிறந்த வேள்வித் திறத்தையும், திருவருளைப் பெற்ற திறத்தையும், எட்டுத் திக்கும் சென்று குபேரன் முதலாகிய யாவரையும் வென்ற வலிமையையும், பெரிய அண்டங்களை யெல்லாம் கண்டு சிறப்புற அரசு புரிந்த தன்மையையும், அருகே நின்ற அசுரர் பலர் முறை முறையாகப் புகழ்ந்து ஏத்தவும்,

293. இன்னும் பலப்பல சிறப்புக்கள் பொருந்தவும் சூரமன்னன் வீற்றிருந்தான். அப்போது அவன் தங்கையாகிய அசமுகி துன்முகத் தோழியோடு மகேந்திர நகரின் மருங்கே வந்தாள்.

புரந்தரன் என்னும் விண்ணோன்
புணர்த்திடு செயலோ என்பார்
கரந்தனன் திரிவான் செய்ய
வல்லனோ கருத்தன் றென்பார்
இருந்திடு கடவு ளோர்கள்
இழைத்திட விதியோ என்பார்
நிரந்த நம் பணியின் நிற்போர்
நினைப்பரோ இதனை என்பார். 294

அந்நகர் மகளிர் யாரும்
ஆடவர் யாரும் சூழ்ந்து
துன்னினர் இனைய ஆற்றல்
துயர்உழந்து இரங்கிச் சோரப்
பின்னவர் தொகுதி நீங்கிப்
பிறங்கு கோநகரம் போந்து
மன்னவர் மன்னன் வைகும்
மன்றினுக்கு அணியள் ஆனாள். 295

---

294. நகர வீதியிலே அவள் வரும்பொழுது "இந்திரன் செய்த வேலையோ இது என்பார்" சிலர்; ஒளித்துத் திரிகின்ற அவன் இது செய்ய வல்லனோ என்று மறுத்துரைப்பார் சிலர். மற்றைத் தேவர்கள் செய்திருப்பார்களோ என்று ஐயுற்றார் சிலர்; நம் ஆணைக்கு அடங்கிப் பணியாற்றும் அவர் இத்தகைய செய்கையை நினைக்கவும் துணிவரோ என மாற்றம் உரைப்பார் சிலர்.

295. வீர மகேந்திரத்து மாதரும் ஆடவரும் இவ்வாறு நெருங்கிச் சூழ்ந்து வருந்தித் தளர்ந்து நிற்க, அவர்களைக் கடந்து அசமுகி துன்முகியுடனே அரசமா நகரம் போந்து, மன்னர் மன்னனாகிய சூரன் வீற்றிருந்த மன்றத்தை நண்ணினாள்.

296. மாயையில் வல்ல தாயையும், மற்றுமுள்ள சுற்றத்தாரையும், மருகரையும், உடன் பிறந்தாரையும் மனத்தில் நினைத்துக் கதறிக்கொண்டு அவள் மன்றின்

அசமுகி புலம்பல்

மறிமுகம் உடைய தீயாள்
　　மன்றினுக் கணியள் ஆகிக்
கிறிசெயும் அன்னை தன்னைக்
　　கேளிரை மருகா ரைத்
திறலுடை முன்னை யோரைச்
　　சிந்தையில் உன்னி ஆண்டைப்
பொறிமகள் இரியல் போகக்
　　கதறியே புலம்பல் உற்றாள். 296

புரங்குறைத்தும் வலிகுறைத்தும் பொங்கியதொல்
　　நிலைகுறைத்தும் புரை உறாத
வரங்குறைத்தும் புகழ்குறைத்தும் மறையொழுக்கம்
　　தனைக்குறைத்தும் மலிசீர் தொல்லை
உரங்குறைத்தும் வானவரை ஏவல்கொண்டோம்
　　என்றிருப்பீர் ஒருவன் போந்துஎன்
கரங்குறைத்த தறியீர்நும் நாசிகுறைத்
　　தனன்போலும் காண்மின் காண்மின். 297

அருகே செல்லும் பொழுது சிதேவி அவ்விடம் விட்டுப் பெயர்ந்தான்.

(வீரப் புகழ் பெற்று வாழ்ந்த உற்றாரை யெல்லாம் தனித் தனியே அழைத்து அசமுகி ஓலமிட்டாள்)

297. "ஐயோ! அசுரகுல வீரரே! வானுலகத்தின் வளங் குறைந்தோம்; வலி குறைத்தோம்; விழுமிய நிலை குறைத்தோம்; பழுதிலாத வரம் குறைத்தோம்; புகழ் குறைத்தோம்; மறை யொழுக்கம் குறைத்தோம்; மாற்றாரது மனத்திட்பம் குறைத்தோம். வானவரை ஏவல் கொண்டோம் என்று மனப்பால் குடித்திருப்பீர்; அவர்களில் ஒருவன் வந்து என் கரம் அறுத்து, உமது மூக்கறுத்து விட்டானே! அதை அறியீர்போலும்.

பிறைசெய்த சீர்உருவக் குழவி உருக்
கொண்டுஒருநாள் பெயர்ந்து வானின்
முறைசெய்த செங்கதிரோன் ஆதபம்மெய்
தீண்டுதலும் முனிந்து பற்றிச்
சிறைசெய்த மருகாவோ மருகாவோ
ஒருவன்எனைச் செங்கை தீண்டிக்
குறைசெய்து போவதுவோ வினவுகிலாய்
ஈதென்ன கொடுமை தானே. 298

நீண்டாழி சூழ்உலகை ஓரடியால்
அளவை செய்தோன் நேமிதன்னைப்
பூண்டாய் பொன்னாரம் என
இந்நாளும் ஓர்பழியே பூணநின்றாய்
ஈண்டாரும் குறும்பகைஞர் என்கரம்போம்
திறமியற்ற இனிது வையம்
ஆண்டாய்நம் தாரகனே குறைமதிநேரோ
நின்பேர் ஆற்றல் அம்மா. 299

---

298. பசுங் குழந்தைப் பருவத்தில் செங்கதிரோனைச் சினந்து பற்றிச் சிறை செய்த மருகனே! பானுகோபனே! என் கையை ஒருவன் குறைசெய்து சென்றானே! நீ ஏன் என்று கேளாது இருந்தாயே! இது என்ன கொடுமை!

299. ஓரடியால் உலகளந்த திருமாலின் நேமிப் படையை அந்நாளில் பொன்னாரமெனப் பூண்ட தாரகனே! இந்நாளில் ஒப்பற்ற பழி பூண்டாயே! மாற்றார் வந்து என் கரத்தை அறுப்பார்! தமையனாகிய நீ மதிப்புடன் அரசு புரிவாய்! முன் நிறைந்து பின் குறையும் நீர்மை வாய்ந்ததோ நின் ஆற்றல்!

300. சிங்கமுக வீரா! வெள்ளையானையோடு இந்திரனை ஒரு கையால் வானத்தில் வீசி யெறிந்தாய் என்றும், அவன் கீழே வந்து வீழ்ந்தபோது காலால் உதைத்தாய்

வையொன்று வச்சிரக்கைப் புரந்தரனைத்
தந்தியொடும் வான்மீச் செல்ல
ஓய்யென்று கரத்தொன்றால் எறிந்தனைவீழ்ந்
தனன்கிடப்ப உதைத்தாய் என்பர்
மெய்யென்று வியந்திருந்தேன் பட்டிமையோ
அவன்தூதன் வெகுண்டு வந்தென்
கையொன்று தடிந்தனனே சிங்கமுக
வீரஇது காண்கிலாயோ. 300

ஒன்னார்தம் சூழ்ச்சியினால் ஒருமுனிவன்
என்சிறுவர் உயிர்கொண் டுற்றான்
இந்நாளில் அஃதன்றி ஒருவனைக் கொண்டு
எனதுகையும் இழப்பித் தாரே
பின்னாள்இவ் வருத்தமுற நன்றரசு
புரிந்தனையால் பிழையீ தன்றோ
மன்னாவோ மன்னாவோ யான்பட்ட
இழிவரவை மதிக்கிலாயோ. 301

காவல்புரிந்து உலகாளும் அண்ணாவோ
அண்ணாவோ கரமற்றேன் காண்
எவர்எனக்கு உறவாவர் ஊனமுற்றோர்
இருப்பதுவும் இழுக்கே அன்றோ

என்றும் சொல்லக் கேட்டு மெய்யென்று நம்பி வியந்திருந் தேனே! அது புனைந்துரைதானோ? அவன் தூதன் சீறி யெழுந்து என் கரத்தைத் துணித்தானே! அரிமுக வீரா! நீ அறியாயோ?

301. வானவரது சூழ்ச்சியால் ஒரு முனிவன் என் மைந்தரது உயிரைக் கவர்ந்தான்; அம் மட்டோ? இன்றும் ஒருவனைக் கொண்டு என் கரத்தைக் கொய்வித்தார். இங் ஙனம் தங்கை துயரமுற நீ தனியரசு புரிதல் தவறன்றோ? மன்னா! மன்னா! நான் அடைந்த மானத்தை நீ மனங் கொள்ளாயோ?

302. அரசாளும் அண்ணா! அண்ணா! கரமிழந் தேன்! ஆதலால் உறவிழந்தேன்! ஊனமுற்றோர் உயிர் வைத்திருத்தல் ஈனமன்றோ? அந்தோ! இவ்வுயிரை

ஆவிதனை விடுவேன்நான் அதற்குமுனம்
என்மானம் அடுவது ஐயோ
பாவியொரு பெண்பிறந்த பயன்இதுவோ
விதிக்குஎன்பால் பகைமற் றுண்டோ. 302

என்று பற்பல உரைத்தனள்
ஆவலித்து இரங்கிப்
பின்தொ டர்ந்திடு துன்முகி
தன்னொடும் பெயரா
மன்றின் மேவரு சூரபன்
மாவெனும் வலியோன்
பொன் தடங்கழல் முன்னரே
வீழ்ந்து போய்ப் புரண்டாள். 303

சூரன் சீற்ற முறுதல்

என்னை யோஇவண் புலம்புதி
அசமுகத்து இனையோய்
உன்னை ஓர்கிலாது என்னையும்
நினைகிலாது உன்கை
தன்னை யும்இவள் கரத்தையும்
வாளினால் தடிந்து
முன்னை யோர்என இருந்துளார்
யார்என மொழிந்தான். 304

விடு முன்னே மானம் அடுகின்றதே! பாவிநான் பெண்ணாகப் பிறந்து பெற்ற பயன் இதுதானோ! விதிக்கு என் மீது பகை யுண்டோ?

303. என்று பலவாறாக அரற்றி அழுதுகொண்டு, துன்முகியோடு சென்று அசமுகி அரச மன்றத்தில் அமர்ந்திருந்த சூரன் அடிகளில் விழுந்து புரண்டாள்.

304. அது கண்ட சூரன் "தங்கயே! அசமுகி, ஏன் இங்ஙனம் வருந்துகின்றாய்? உன்னை உணராமலும் என்னைக் கருதாமலும், உன் கரத்தையும், தோழியின் கரத்தையும் துணித்தவர் யார்? அவர் இன்னும் உயிருடன் இருக்கின்றார்களா" என்று வினவினான்.

புரந்த ரன்புணர் புலோமசை
புவியில்ஓர் புறத்தில்
இருந்து நோற்றலும் உன்தனக்
கென்று சென்று எடுத்தேம்
விரைந்து வந்தொரு விண்ணவன்
எங்களை வெகுண்டு
கரம்துணித்து மற்றவளை மீட்டு
ஏகினன் கண்டாய். 305

என்னும் முன்னரே சொரிந்தன
விழிகனல் எரிவாய்
துன்னு தீம்புகைப் படலிகை
உமிழ்ந்தது துண்டம்
வன்னி காலுறு காலென
உயிர்த்தது மதிபோல்
மின்னல் வாளெயிறு இதழினை
மறைத்தது விரைவில். 306
பார்நடுங்கின விண்ணெலாம்
நடுங்கின பரவை
நீர்நடுங்கின அயன்பதம்
நடுங்கின நெடியோன்

---

305. "ஐயனே! இந்திரன் மனைவியாகிய அயிராணி நிலஉலகின் ஒரு புறத்தில் இருந்து நோன்பு செய்கின்றார்கள். அவளை உன்னிடம் சேர்க்கக் கருதி அங்கு நாங்கள் சென்று எடுத்தோம். அவ்வேளையில் வானவன் ஒருவன் விரைந்து வந்து எம் கைகளை அறுத்திட்டான்; அயிராணியையும் அழைத்துச் சென்றான்."

306. என்று கையற்றவள் சொல்லி முடிக்குமுன்னமே சூரன் கண்களிலிருந்து தீப்பொறி பறந்தது; வாயினின்று தீப் புகை பிறந்தது; நாசியினின்று சுடுமூச்சு எழுந்தது; வெள்ளிய பற்கள் மடிந்த உதடுகளை மறைத்தன.

307. மண்ணுலகம் நடுங்கிற்று; விண்ணுலகமெல்லாம் நடுங்கிற்று; பெருங் கடல் நடுங்கிற்று; பிரமபதம்

ஊர்நடுங்கின அவுணரும்
நடுங்கினர் உலகத்து
ஆர்நடுங்கிலர் அவன் சினம்
சிறியதோ அன்றே. 307

நீர் இருந்தனிர் புதல்வரும்
இருந்தனர் நிகரில்
தேர் இருந்தது நேமியும்
இருந்தது சிறிதுஎன்
பேர் இருந்தது யானும்இங்கு
இருந்தனன் பின்னை
யார் இருந்தும்என் இருந்தும்
ஆகின்றதென் அந்தோ. 308

மல்லல் அந்தடம் தேர்கடக்
கைம்மலை வயமா
எல்லை இல்லவும் அவுணரும்
எங்கணும் இருப்பச்
சில்லை மென்குழல் அசமுகி
படுவதுஇத் திறமோ
நல்ல நல்லஎன் அரசியல்
முறையென நக்கான். 309

நடுங்கிற்று; மாயவன் நகரம் நடுங்கிற்று. அசுரரும் நடுங்கினர் என்றால் இவ் வுலகத்தில் நடுங்காதார் யாவர்? சூரனது கோபம் சாலப் பெரிதன்றோ?

308. அந்நிலையில் சுற்றி நின்றவரை நோக்கிச் சூரன் பேசலுற்றான். "அசுர வீரர்களாகிய நீர் இருந்தும், மைந்தர் இருந்தும், நிகரற்ற தேர் இருந்தும், நேமி யிருந்தும், சிறிது என்பேர் இருந்தும், என் உயிர் இருந்தும், வேறு யார் இருந்தும், எது இருந்தும் என்ன பயன் அந்தோ!

309. நெடிய தேருண்டு; வலிய கரியுண்டு; பரி யுண்டு; அளவிறந்த அசுரப் படையுண்டு. எல்லாம் இருந்தும், அசமுகி படும் பாடு இதுவோ? என் அரசியல் நன்று நன்று" என்று நகைத்தான்.

பானுகோபன் பழிக்குப்பழி வாங்க முற்படுதல்

நக்க காலையில் காலுறும்
வார்கழல் நரல
மக்கள் தங்களில் பானுகோபப்
பெயர் வலியோன்
செக்கர் அங்கியிற் கிளர்ந்துதன்
தந்தைமுன் செவ்வே
புக்கு வந்தனை செய்து நின்று
இனையன புகல்வான். 310

ஐய கேள்மதி நமதுகுற்
றேவலால் அழுங்கித்
தொய்யல் உள்ளமோடு இந்திரன்
கரந்தனன் சுரரும்
நொய்யர் இத்தொழில் நினைப்பதும்
செய்யலர் நுங்கை
கையிழந்ததென் மாயமோ
உணர்கிலேன் கவல்வேன். 311

விசைய வாளினால் இங்கிவர்
கரந்தனை வீட்டும்
அசைவில் ஆடவன் தன்னைநின்
உளத்தின்மால் அளித்த

---

310. அப்பொழுது சூரன் மைந்தருள் வலியனாகிய பானுகோபன் சீற்றமுற்று எழுந்து, வீரக்கழல் முழங்க நடந்து சென்று வேந்தன் அடிபணிந்து,

311. "ஐயனே! நமக்குக் குற்றேவல் செய்து உடைந்த மனத்தினனாய் ஒளித்துள்ளான் இந்திரன். ஏனை வானவர் வலிமையற்றவர்; இப்படிச் செய்ய மனத்திலும் நினையார். நிலைமை இவ்வாறிருக்க உமது தங்கை கை இழந்தது என்ன மாயமோ! அறியேன்; அதனை அறியா மாட்டாது வருந்துகின்றேன்.

312. (ஆயினும் இன்றே சென்று) அச்சமின்றி இவர் கைகளை யறுத்த ஆடவனையும், நின் மனத்தில்

சசியை இந்திரக் கள்வனைத்
தம்முயிர் தமக்குப்
பசையி லாததோர் அமரரைப்
பற்றினன் படர்வேன். 312

ஈதி யால்விடை தமியனுக்கு
என்றுநின்று இரப்பத்
தாதை யாகிய அவுணர்கோன்
முனிவினைத் தணிந்து
போதி மைந்தநின் படையொடும்
ஆங்கெனப் புகல
ஆத வன்பகை அழகிதென்று
உவகையை அடைந்தான். 313

பானுகோபன் படையெடுத்துச் செல்லுதல்

முறையிது நிகழ மைந்தன்
முதியமா நகரம் நீங்கி
அறைகடல் அகழி தாவி
அவனியின் எல்லை ஏகிச்
சிறைவரு துன்மு கத்துத்
தெரிவையை நோக்கி நுங்கை
எறிசுடர் வாளால் இற்றது
எவ்விடை இயம்பு கென்றான். 314

ஆசை விளைத்த அயிராணியையும், மறைந்து திரியும் இந்திரனையும், தம் உயிரில் ஆசையற்ற தேவரையும் பற்றி வருவேன்.

313. அடியேனுக்கு விடைதருக' என்று வேண்டி நின்றான். அப்போது சீற்றம் தணிந்த சூரன் "மைந்தா! நின் சேனையொடு செல்.' எனப் பணித்தான். அதனை மகிழ்ந்து ஏற்றான் பானுகோபன்.

314. இளவரசப்பதவிக்கு ஏற்ற முறையில் மகேந்திர நகரத்தை விட்டுப் புறப்பட்டுக் கடலாகிய அகழியைக் கடந்து, நில வுலகத்தின் எல்லையிற் சென்றவுடன் அருகே வந்த துன்முகியை நோக்கி 'உமது கை அறுபட்ட இடம் எது? கூறுக" என்றான்.

என்னலும் குமர கேண்மோ
எங்கரம் துணித்துஓர் வீரன்
மன்னினன் சசியும் உற்ருள்
மதுமலர்ப் பொதும்பர் ஒன்றின்
அன்னதும் இஃதே என்ருேர்
அணிவிரல் சுட்டிக் காட்டப்
பன்னிரு பெயர்ச்சீர் காழிப்
பழுமரக் காவிற் சேர்ந்தான். 315

தேசுறும் இரவி தன்னைச்
செயிர்த்திடு சிறுவன் தானைத்
தூசிமுன் சென்று காவைத்
தொலைத்துவெள் ளிடைய தாக்க
வாசவன் மனையைக் கூர்வாள்
வயவனை நாடிக் காணுன்
காசினி யாண்டும் தேர்ந்து
காமர்பொன் உலகிற போனுன். 316

செந்தோடு அவிழும் தாரான்இச்
செய்கை நிகழச் சேண்புகலும்
அந்தோ என்று பதைபதையா
அலமந்து ஏங்கி அறிவழிந்து

---

315. "இளங்கோவே; எமது கரம் துணித்த வீரன் ஒரு பூஞ்சோலையில் உள்ளான். அயிராணியும் அங்கே இருக்கிருள். அச் சோலை இதுதான்" என்று சுட்டிக் காட்டினுள். அங்நிலையில் பன்னிரு பெயர் பெற்ற சீர் காழிப் பதியில் அமைந்த பழுமரச் சோலையிற் பானு கோபன் புகுந்தான்.

316. அவரது சேனையின் முன்னணிப் படை விரைந்து சென்று சோலையை அழித்து வெட்டை வெளி யாக்கிற்று; அவ்விடம் முற்றும் தேடிப் பார்த்தான் பானு கோபன்; அயிராணியும் காணவில்லை; கையறுத்த வீரனை யும் காணவில்லை. அன்னுர் இருவரையும் உலக முழுமை யும் தேடிக் காணுமையால் வானுலகத்திற்குச் சென்ருன்.

317. செம்மலர் மாலையணிந்த பானுகோபன் படை யெடுத்து வந்தான் என்று பதறிய வானவர் விதிர்விதிர்த்

வந்தோன் பானுப் பகைவன்என்று
மகவான் செம்மலொடுவானோர்
நொந்தோ டினர்போய் உரைத்திடலும்
அனையோன் இனைய நுவல்கின்றான். 317

சயந்தன் பானுகோபனை எதிர்த்தல்

எந்தை யாகும் குரவன் இலை
இமையோர் குழுவிற் பலர் இல்லை
தந்தை எம்மோய் இங்கில்லை
தமியேன் நும்மோடு இருந்தேனல்
அந்த அசுரன் சென்றமையும்
அல்லல் புரியும் திறம்போலும்
முந்தை விதியை அறிவேனோ
என்னோ இன்று முடிந்திடுமே. 318

அஞ்சேன் மன்னோ அவர்க்கினியான்
ஆவி பொருளாக் கொள்ளாதார்
நஞ்சே பொருவும் தீங்குறினும்
நடுக்கம் செய்யார் இடர்ப்படியார்
தஞ்சே அகத்தின் நெறிபிழையார்
அஃதே போலத் தானவர்கோன்
வெஞ்சேனைகள்ஏற்று எதிர்செல்வேன்
வெல்வேன் பலரைக் கொல்வேனே. 319

துப் பொறி கலங்கி இந்திரன் மைந்தனாகிய சயந்தனிடம் ஓடிச் சென்று அச் செய்தியை உரைத்தார்கள். அது கேட்ட சயந்தன் கூறுவான் :

318. "எமது குருவாகிய வியாழனும் இங்கில்லை; வானவர் இனத்திற் பலரில்லை; தந்தையும் தாயும் இல்லை; நான் உம்மோடு தனித்திருக்கின்றேன். அந்த அசுரன் அல்லல் புரியவே வந்தான் போலும்; பண்டை வினையின் பயன் என்னாகுமோ அறியேன்;

319. ஆயினும் யான் இனி அவர்க்கு அஞ்சப் போவதில்லை; உயிரைப் பொருளாகக் கருதாதவர் நஞ்சுபோன்ற தீங்குற்றாலும் நடுக்க மடையார்; துயரத்தில் மூழ்க மாட்டார்; கடமையில் வழுவமாட்டார். அவ்வாறே

என்று சயந்தன் மொழிந்திடலும்
இமையோர் கேளா இடர்உழவா
உன்தன் உள்ளம் ஈதாயின்
எமக்கு வேறோர் உணர்வுண்டோ
வென்றி அவுணர் பணிபுரிந்து
வீடா விழுமம் துய்ப்பதினும்
பொன்றி வீடுதல் இனிதம்மா
எழுதி கடிதே போர்க்கென்றார். 320

சயந்தனும் வானவரும் சிறைப்படுதல்

நீடிரு திறத்தரும்
நெடும்படைகள் ஏந்தி
ஆடல்புரி காலைஅழிந்து
ஆற்றல் இலராகி
ஓடினர்கள் வானவர்கள்
ஒல்லைதொடர்ந் தேபின்
கூடினர்கள் வெவ்அவுணர்
குற்றினர்கள் பற்றி. 321

மன்னர் மன்னவன் திருமகன்
அவ்வழி மற்றோர்
பொன்நெடும் பெருந் தேர்மிசைப்
பொள்ளென ஏகிப்

யானும் பானுகோபனது கொடிய சேனையைச் சென்று எதிர்ப்பேன். வெல்வேன்; பலரைக் கொல்வேன்."

320. என்று சயந்தன் கூறினன். அப்பொழுது வானவர் வருத்த மெய்தி "ஐயனே! உன் கருத்து இதுவாயின் நாங்கள் சொல்வ தொன்று உண்டோ? வெற்றி பெற்ற அசுரருக்குக் குற்றேவல் செய்து அழியாத் துன்பத்தில் உழல்வதினும் இறந்தொழிதல் இனிதே யாகும். ஆதலால் விரைவில் போருக்கு எழுக" என்றார்,

321. அமரர் சேனையும் அசுரர் சேனையும் நெடும் படை கொண்டு கடும் போர் புரிந்தன. அமரர் வலிமையற்றுப் போர் முனையை விட்டு ஓடினர். கொடிய அசுரர் அவரைப் பின் தொடர்ந்து பற்றிக் குற்றினார்கள்.

பன்னருஞ்புகழ் படைத்திடு
சயந்தனைப் பற்றித்
துன்னி நின்றிடும் அவுணருக்கு
ஒருமொழி சொல்வான். 322

வரிவில் வாங்கியே யான்விடும்
சரப்பட மயங்கிப்
பெரிதும் மெய்தளர் வுற்றனன்
பேசவும் கில்லான்
கருத லான்என இவன்தனை
வருத்தலிர் கடிதே
சுரர்கு ழாத்தொடு புரிமினோ
சிறையெனச் சொற்றான். 323

என்றலும் இறைஞ்சி அன்னோர்
எழிலுடைத் துறக்கம் யாண்டும்
சென்றனர் நாடி வனைத்
தேவரை மகளிர் தம்மை
ஒன்றொரு வரையும் வீடாது
உடனுறப் பற்றி நாஞூல்
பொன்திரள் தடந்தோள் யாத்துப்
புரவலன் முன்னர் உய்த்தார். 324

---

322. அப்போர்க் களத்தில் பானுகோபன் ஒரு தேரின்மேல் விரைந்து ஏறிப் பெரும் புகழ் வாய்ந்த சயந்தனைப் பற்றிச் சூழ்ந்திருந்த அசுரரை நோக்கிச் சொல்லுவான் :

323. "யான் விட்ட அம்புகள் பட்டதனால் இவன் மயங்கி உடல் தளர்ந்தான்; பேசவும் இயலாதவன் ஆயினான்; பகைவன் என்று இவனை வருத்தாதீர்! வானவர் குழாத்தொடு இவனைச் சிறைசெய்திடுக" எனப் பணித்தான்.

324. அப்பணி தலைமேற் கொண்ட அசுரர் அழகிய வானுடு எங்கும் சுற்றி நாடினர். ஒருவரையும் விடாமல் வானவரையும் அவர் தம் மனைவியரையும் ஒருங்கே கட்டிக் கொணர்ந்து பானுகோபன் முன்னே இட்டனர்.

உய்த்தபின் பதுமச் செல்வி
உறைதரும் உறையுள் போலச்
சித்திரம் கெழுவு பொன்னம்
திருநகர் எல்லை எங்கும்
புத்தழல் கொளுவ லோடும்
பொள்ளெனப்பொடிபட் டன்றே
முத்திற வரைப்பும் எங்கோன்
முறுவலால் முடிந்த வாபோல். 325

ஊழியின் அன்றி என்றும்
ஒழிவுறுத் துறக்க மூதூர்
பூழிய தான தன்றே
புரந்தரன் வறியன் போனான்
வீழுறு சிறையின் உற்றார்
மிக்கவர் என்றால் யாரும்
வாழிய செல்வம் தன்னை
நிலையென மதிக்கல் ஆமோ. 326

மாநிலம் மதிக்கும் வீர
மகேந்திர புரத்துப் புக்குக்
கோனகர் முன்னம் ஏகிக்
கொடிஞ்சிமான் தேரின் நீங்கிச்

---

325 பின்பு திருமகளின் இருப்பிடம் போல அழகுற்று இலங்கிய பொன்னகரமெங்கும் தீயிட்டுக் கொளுத்தினர். அப்போது ஈசனது புன்னகையால் எரிந்து அழிந்த திரிபுரம் போன்று பொன்னகரம் பொரிந்து பொடியாயிற்று.

326. ஊழிக் காலத்திலே யன்றி மற்று எக்காலத்திலும் அழியாத வானுலகம் இவ்வாறு பொடியாயிற்று; வானவர் கோமான் வறியனாய்ப் போயினான்; சிறந்த தேவர் சிறைப்பட்டார்; எனவே செல்வத்தை நிலைத்த தோர் பொருளாக மதித்தல் ஆகுமோ?

327. பானுகோபன் வீர மகேந்திரத்தை அடைந்தான்; அரண்மனையின் முன்னே தன் தேரை நிறுத்திக் கீழே இறங்கினான்; சேனைகளை அவ்விடத்தில் நிறுத்திச்

சேனையை நிறுவி வானச்
சிறையினைக் கொண்டு சென்று
தானவர் மன்னன் முன்போய்த்
தாள்முறை வணக்கம் செய்தான். 327

தண்துளி நறவ மாலைத்
தாதைதாள் வணங்கி எந்தாய்
கண்டிலன் சசியை வானோர்
காவலன் தனையும் காணேன்
அண்டரைச் சயந்தன் தன்னை
யாரையும் கொண்டு சென்றேன்
விண்தொடர் துறக்கம் முற்றும்
வெங்கனல் கொளுவி என்றான். 328

கண்டனன் முனிந்து இன்னோரைக்
காலம்ஒன் றானும் வீடா
எண்தரு நிரயம் போலும்
இருஞ்சிறை இடுதிர் என்றே
திண்திறல் அசுரர் கேட்பச்
செப்பலும் சயந்தன் தன்னை
அண்டரைப் பிடர்தொட்டு உந்தி
ஆங்ஙனம் கொண்டு போனார். 329

சிறைப்பட்ட வானவரை இட்டுக் கொண்டு சூரன் முன்னே சென்று முறையாக வணக்கம் செய்தான்.

328. பின்பு எழுந்து நின்று, "ஐயனே! அயிராணியைக் காணவில்லை; இந்திரனையும் காணவில்லை; வானுலகத்தில் உள்ள தேவரையும் சயந்தனையும் பிறரையும் கொண்டு வந்தேன்: அந் நாட்டைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டேன்" என்று கூறினான்.

329. அப்போது அங்கு நின்ற வானவரைக் கண்டான் சூரன்; சீற்றங் கொண்டான்; மீளா நரகம்போன்ற பெருஞ் சிறையில் இவரை இடுமின்" என்று அசுரரை நோக்கிக் கூறினான். அவர்கள் தேவரையும் சயந்தனையும் பிடர் பிடித்துத் தள்ளிச் சிறைக் கோட்டத்திற் சேர்த்தார்கள்.

3. மகேந்திர காண்டம்

தெய்வ வணக்கம்

விரிஞ்சன்மால் தேவ ராலும்
வெலற்கரும் விறலோன் ஆகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத
ஒழுக்கமும் பிறவும் மாற்றி
அருஞ்சிறை யவர்க்குச் செய்த
அவுணர்கோன் ஆவி கொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த
குமரனைப் பணிதல் செய்வாம். 1

முருகவேள் வீரவாகுவைத் தூதனுப்புதல்

வடித்தசெங் கதிர்வேல் அண்ணல்
மாலயன் மகவான் ஆதி
அடுத்தபண் ணவரை நோக்கி
அவுணர்தம் கிளையை எல்லாம்
முடித்திடப் பெயர்தும் நாளை
முன்னம்ஓர் தூதன் தன்னை
விடுத்தனம் உணர்தல் வேண்டும்
வெய்யசூர் கருத்தை என்றான். 2
கடலுடைக் கடுவை உண்டோன்
காதலன் இனைய செப்ப
மடலுடைப் பதுமப் போதில்
வைகினோன் மாயன் கேளா

---

1. திருமால் பிரமன் முதலிய தேவராலும் வெல்லுதற்கரிய வீரனாகி, வானவரது உயரிய நிலையையும் வைதிக நெறியையும் பிறவற்றையும் மாற்றி, அவரை அருஞ்சிறையில் இட்ட அரசர்கோமானாகியசூரனது உயிரை வாங்கும் வண்ணம் பரஞ்சுடர் உருவாகி வந்த பாலனைப் பணிந்து போற்றுவோம்.

2. வடிவேல் முருகன் தன் அருகேயிருந்த திருமால் பிரமன், இந்திரன் ஆகிய தேவர்களை நோக்கி, 'நாம் அசுரர் குலத்தை அழித்திட நாளைப் போவோம்; அதற்கு

அடலுடைப் பெரும்போர் எந்தை
ஆற்றுமுன் சூரன் முன்னோர்
மிடலுடைத் தூதன் தன்னை
விடுத்தலே அறத்தாறு என்றார். 3

சதுர்முகன் இனைய வாற்றால்
சண்முகன் உளத்துக் கேற்பக்
கதுமென உரைத்த லோடும்
கருணைசெய்து அழகிது என்னு
மதுமலர்த் தொடையல் வீர
வாகுவின் வதனம் நோக்கி
முதிர்தரும் உவகை தன்னால்
இத்திறம் மொழியல் உற்றான். 4

மயேந்திர மூதூர் ஏகி
வல்லைநீ அமலன் நல்கும்
சயேந்திர ஞாலத் தேரோன்
தனையடுத்து ஒருநால் தந்தக்
கயேந்திரன் மதலை வானோர்
காப்பைவிட்டு அறத்தாறு உன்னி
நயேந்திர வளத்தி னோடும்
உறைகென நவில்தி அன்றே. 5

முன்னம் ஓர் தூதனை விடுத்துக் கொடிய சூரனது கருத்தினை அறிதல் வேண்டும்' என்று அருளினார்.

3. சிவகுமாரன் இவ்வாறு செப்பியபோது, "ஐயனே! சூரனுடன் வீரப் பெரும்போர் தொடங்கு முன்னே ஆற்றல் சான்ற தூதன் ஒருவனை அனுப்புதலே அறநெறியாகும்" என்று மலரவனும் மாயவனும் கூறினர்.

4. அதுகேட்ட முருகன் கருணை கூர்ந்து மாலையணிந்து நின்ற வீரவாகுவின் முகத்தை நோக்கினார்; முற்றிய மகிழ்ச்சியால் மொழியலுற்றார்.

5. "வீரனே! நீ மகேந்திர நகர்க்கு விரைந்து சென்று இந்திரஞாலத் தேருடைய சூரனைக் கண்டு, இந்திரன் மைந்தனையும் வானவரையும் அவன் சிறையினின்று விடுவித்தல் வேண்டும் என்றும், அறநெறி தவறாமல் அரசாளுதல் வேண்டும் என்றும் அறிவித்திடுக.

அம்மொழி மறுத்து ளானேல்
அவுணரின் கிளையை எல்லாம்
இம்மென முடித்து நின்னை
எஃகவேற்கு இரையா நல்கத்
தெம்முனை கொண்டு நாளைச்
செல்லுதும் யாமே ஈது
மெய்ம்மையது என்று கூறி
மீள்கென வீரன் சொல்வான். 6

வெந்திறல் அவுணர் ஈண்டும்
வீரமா மகேந்தி ரத்தில்
சுந்தரத் திருவின் வைகும்
சூரபன் மாவின் முன்போய்
எந்தைநீ அருளிற் றெல்லாம்
இசைத்துஅவன் உள்ளம் நாடி
வந்திடு கின்றேன் என்று
வணங்கியே தொழுது போனான். 7

கூர்ந்திடு குலிசத் தண்ணல்
குமரவேள் ஒற்றன் தன்பின்
பேர்ந்தனன் சென்று வீர
பெருந்திறல் சூரன் மூதூர் .

---

6. அவ்வாறு செய்ய அசுரர்கோன் இசையானாயின் அவன் இனத்தை அடியோடு அழிக்க வடிவேல் எடுத்து நாளையே நாம் அமர்க்களம் புகுவோம்; இது உண்மை என்று கூறி வருக" எனப் பணித்தான். அப்போது வீர வாகு,

7, "ஐயனே! அசுரர் நிறைந்த வீரமகேந்திரத்தில் அழகிய செல்வத்தினிடையே அமர்ந்த சூரன் முன்னே சென்று தேவரீர் அருளிய செய்தியெல்லாம் சொல்லி, அவனுள்ளக் கருத்தை உணர்ந்து வருகின்றேன்" என்று வணங்கித் தொழுது சென்றார்.

8. அப்போது குலிசப் படையை யுடைய இந்திரன் முருக தூதனாகிய வீரவாகுவின் பின்னே சென்று 'வீரனே! நீ வலிமை சான்ற சூரனது நகரத்தை யடைந்து அங்கு

சார்ந்தனை சிறையில் வானோர்
சயந்தனோடு இருந்தார் அங்கண்
சேர்ந்தனை தேற்றிப் பின்உன்
செயலினை முடித்தி என்றான். 8

அலங்கலம் திரைகொள் நேமி
அகன்கரை மருங்கில் மேரு
விலங்கலின் உயர்ந்த கந்த
மாதன வெற்புத் தன்னில்
பொலங்குவடு உச்சி மீது
பொள்ளென இவர்தல் உற்றான்
கலன்கலன் கலன்என்று அம்பொன்
கழலமர் கழல்கள் ஆர்ப்ப. 9

வரைமிசை நின்ற அண்ணல்
வனைகழல் அவுணர் கோமான்
பொருவரு நகர்மேற் செல்லப்
புந்திமேற் கொள்ளா எந்தை
திருவுரு அதனை உன்னிச்
செங்கையால் தொழுது மாலும்
பிரமனும் வியந்து நோக்கப்
பேருருக் கொண்டு நின்றான். 10

சிறைப்பட்டுள்ள சயந்தனையும் தேவரையும் கண்டு தேற்றிப் பின்பு எடுத்த பணியை முடித்திடுக' என்று வேண்டினான்.

9. இந்திரன் முதலிய வானவரிடம் விடைபெற்றுச் சென்ற வீரவாகு கடற்கரையினருகே யமைந்த கந்தமாதன மலையின்மீது, கலீர் கலீர் எனக் கால்களில் அணிந்திருந்த வீரக் கழல்கள் ஒலிக்க விரைந்து ஏறினார்.

10. அம்மலையின் உச்சியில் நின்ற வீரன் சூரனது நகரின்மீது செல்லக் கருதி முருகப்பெருமானின் திருவுருவத்தைத் தியானித்து, கைகூப்பித் தொழுது, திருமாலும், பிரமனும் வியந்துநோக்கப் பெரியதோர் உருவங்கொண்டார்.

ஆணமில் சிந்தை வீரன்
அச்சுதன் முதலோர் வைகும்
சேணகர் நோக்கிச் சூழும்
திசைநகர் நோக்கிப் பாரின்
மாணகர் நோக்கி வீர
மகேந்திரம் நோக்கிச் சூரன்
நீணகர் இதற்கு யாவும்
நிகரிலை போலும் என்றான். 11

ஆவதோர் காலை எந்தை
ஆறிரு தடந்தோள் வாழ்க
மூவிரு வதனம் வாழ்க
முழுதருள் விழிகள் வாழ்க
தூவுடை நெடுவேல் வாழ்க
தொல்படை பிறவும் வாழ்க
தேவர்கள் தேவன் சேயோன்
திருவடி வாழ்க என்றான். 12

கிரிமிசை நின்ற அண்ணல்
கிளர்ந்துவான் எழுந்து சென்னிக்
குருமணி மகுடம் அண்ட
கோளகை புடைப்ப வீரன்

---

11. அப்பொழுது ஆணவமற்ற அவ்வீரன் மாயவன் வாழும் திருநகரத்தையும், அதைச் சூழ்ந்த திசை நகரங்களையும், நிலவுலகத்திலுள்ள பெரு நகரங்களையும் நெடுங் கடலின் நடுவே யமைந்த மகேந்திர நகரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, சூரன் நகரத்திற்கு எந்த நகரமும் நிகரில்லை என்று கூறினார்.

12. (அந்நகரத்தின் மேற் பாயத் துணிந்து காலை யூன்றினார்). அப்போது "ஆறிரு தடந்தோள் வாழ்க; ஆறு முகம் வாழ்க; அயில் வேல் வாழ்க; அரும்படை யனைத்தும் வாழ்க; அரனார் திருமகன் வாழ்க" என்று வாழ்த்தினார்.

13. மலைச் சிகரத்தினின்று உள்ளக் கிளர்ச்சியுற்று எழுந்தார். அந்நிலையில் தலையிலணிந்த மணி மகுடம்

உருகெழு சீற்றச் சிம்புள்
உருவுகொண்டு ஏகிற் றென்ன
வரைபுரை மாட வீர
மகேந்திரம் உன்னிப் போந்தான். 13

தூதன் இலங்கையில் அசுரரைக் கொல்லுதல்

பொலங்கழல் வீர வாகு
புணரிமேல் இவ்வாறு ஏகி
அலங்கலம் திண்டோள் வெஞ்சூர்
அணிநகர் வடாது பாலின்
விலங்கலில் வீரன் யாளி
வியன்முகத்து அவுணன் போற்றும்
இலங்கையம் தொல்லை மூதூர்
அணித்தெனும் எல்லை சென்றான். 14

சென்றிடு வீர சிங்கன்
திறல்கெழு புயனைப் பாரா
இன்றளவு எமது காப்புள்
ஏகினர் இல்லை யார்நீ
ஒன்றொரு தமியன் போந்தாய்
உயிர்க்குநண்பு இல்லாய் நின்னைக்
கொன்றிடு முன்நீ வந்த
செயல்முறை கூறு கென்றான். 15

அண்ட கோளத்தின் முகட்டிற்குச்சென்று முட்ட, வீர பத்திரன் சரபவடிவம் கொண்டு சென்றாற்போல மலையை ஒத்த மாடமாளிகை நிறைந்த வீரமகேந்திரத்தை நோக்கிப் பறந்தார்.

14. வீரக்கழல் அணிந்த வீரவாகு தேவர் இவ்வாறு கடலைக் கடந்து, சூரனது நகரத்தின் வடதிசையில் யாளி முக அசுரனால் காக்கப்பட்ட இலங்காபுரத்தை நண்ணினார்.

15. அவனது படைத்தலைவனாகிய வீரசிங்கன் வீர வாகுவைக் கண்டு பெருஞ் சேனையோடு எதிரே சென்று, "இன்றளவும் எம் கடிநகருள் வந்தார் யாரும் இல்லை; தன்னந்தனியாக வந்த நீ யார்? உயிரில் உனக்கு ஆசையில்லைப்போலும்! நின்னைக் கொல்லு முன்னே வந்த காரியத்தைச் சொல்" என்று வினவினான்.

சென்றுதன் மணிவாள் ஓச்சிச்
செங்கைகள் துமித்துத் தீயோன்
ஒன்றொரு முடியும் கொய்தே
உவர்க்கடல் இடையே வீட்டி
நன்றுதன் உறையுட் செல்ல
நாந்தகம் செறித்து முன்னோர்
வென்றிகொண்டு அகன்றான் என்ப
வேலவன் விடுத்த தூதன். 16

நெடுவரை தன்னை வேலால்
நீறுசெய் திட்ட அண்ணல்
விடவரு தமியோன் தொல்லை
இலங்கையின் மீது பாய
அடலதி வீரன் ஏனை
அவுணர்கள் கலங்கி ஏங்கி
இடியுறு புயங்கம் என்ன
யாரும்மெய் பனித்து வீழ்ந்தார். 17

விழுந்திடும் இலங்கைதனில்
மேவும்அதி வீரன்
எழுந்துதன தானையொடு
இருங்கட லுள்அங்கிங்

16. அதுகேட்ட முருகதூதன் அவ்வசுரனது கரங்களையும் தலையையும் வாளால் அறுத்துக் கடலில் எறிந்தார். பின்பு வாளை உறையில் இட்டு வெற்றியோடு சென்றார்.

17. இலங்கையின்மீது பாய்ந்தார்; யாளிமுகனுடைய மைந்தனாகிய அதிவீரனும் மற்றைய அசுரரும் கலங்கி ஏங்கி, இடியோசை கேட்ட நாகம்போல் உடல் நடுங்கி விழுந்தார்கள்.

18. விழுந்த அதிவீரன் உடனே எழுந்தான்; தன் சேனையாகிய பெருங்கடலின் நடுவே ஊழிக்கனல்

கொழுந்து மிசை சென்றனைய
கோலமொடு நின்ற
செழுந்திறல்கொள் மொய்ம்புடைய
செம்மல்நிலை கண்டான். 18

ஏதி இங்கிது நான்முகன்
தந்துளது எவர்க்கும்
பேதகம்செயல் அரியதால்
அன்னது பிடித்தேன்
சாதி திண்ணம்நீ வருகென
மிகைமொழி சாற்றிக்
கோதில் வீரன்முன் அணுகலும்
அனையவன் கூறும். 19

நன்று நன்றுநின் ஆற்றலும்
ஆண்மையும் நம்மை
வென்றியேஎனில் யாவரும்
மேல்உனை வியப்பார்
நின்று நீசில மொழிவதென்
கடிதுநேருதியால்
வென்றி வீரரும் தமைப்புகழ்
கிற்பரோ என்றான். 20

கொழுந்து விட்டு எறிந்தாற்போல நின்ற வீரவாகுவின் நிலையை நோக்கினான்.

19. உடனே தனது வாளை எடுத்து, "இந்த வாள் அயனால் எனக்கு அளிக்கப்பட்டது. இதனை விலக்குதல் எவராலும் இயலாது; இன்று நீ மடிதல் திண்ணம்; என் எதிரே வருவாயாக" என்று வீரமொழி பேசிக்கொண்டு நெருங்கினான். வீரவாகு அவனைப் பார்த்து,

20. "நன்று நன்று! நின் வலிமையும் வீரமும்! நீ வென்றால் யாவரும் உன்னை வியப்பார்; நின்று வீரம் பேசுவதேன்? வந்து பார்! வெற்றி வீரர் தம்மைத் தாமே மெச்சுவாரோ?"

என்ன ஒன்னலன் கிடைத்தனன்
வீரனும் எதிர்ந்தான்
அன்ன பான்மையர் வாள்அமர்
ஆடினர் அகல்வான்
மின்னும் மாமுகில் தோன்றியே
எதிர்எதிர் விரிந்து
பின்னர் உள்புகுந்து உடனுடன்
செறிந்தபெற் றிமைபோல். 21

இடைபு குந்துஅதி வீரனது
அடிகளோர் இரண்டும்
முடியும் ஆகமும் தோள்களும்
ஆங்கொரு முறையே
சுடர் பிறங்கிய வாளினல்
ஆண்டகை துணித்துக்
கடிது வீட்டினன் நடுவன்வந்து
அவனுயிர் கவர்ந்தான். 22

இன்ன தாகிய இலங்கைமா
புரத்தைநீத் தெழுந்து
பின்னும் ஆயிரம் யோசனை
வானிடைப் பெயர்ந்து

---

21. என்று கூறுதலும், அதிவீரன் நெருங்கினுன்; இருவரும் எதிர்த்தனர்; பெரு மேகங்களில் மின்னல் எழுந்து வீசி ஒடுங்குதல் போல வீரர் இருவரும் வாள் வீசிப் போர் புரிந்தார்கள்.

22. அப்போது விரவாகு தேவர் தக்கசமயம் பார்த்து மாற்ருனது அடியையும் முடியையும், மார்பையும் தோளையும் துணித்துத் தள்ளினுர். காலன் அவனுயிரைக் கவர்ந்து சென்ருன்.

23. அதிவீரன் இறந்த பின்னர், வீரவாகு இலங்கையை விட்டு எழுந்தார்; பின்னும் ஆயிரம் யோசனைகள்

பொன் உலாவுறு வாகையம்
புயத்தவன் புலவோர்
ஒன்ன லான்உறை மகேந்திர
வரைப்பின்முன் உற்ருன். 23

வீரமகேந்திரத்தின் வன்மை யறிதல்

சேர லார்அமர் மகேந்திர
நகர்வட திசையில்
வாரி வாய்தலுள் கோபுரத்
தெற்றியின் மாடே
கோர னேஅதி கோரனே
எனப்படும் கொடிய
வீரர் தானையோ டிருந்தனர்
காவல்கொள் வினையால். 24

ஈண்டு செல்லின் இத் தானைசூழ்ந்து
அமர்செயும் யானும்
மூண்டு நேரினும் முடிப்பஒர்
பகல்எலாம் முடியும்
மாண்ட தென்னினும் உலவுமோ
மாநகர் இடத்து
மீண்டும் வந்திடும் கரிபரி
பதாதிதேர் வெள்ளம். 25

பறந்து சென்று, வானவர் பகைவனுகிய சூரன் வாழ்ந்த மகேந்திரபுரியின் முன்னே போந்தார்.

24. மாற்ருரது நகரமாகிய மகேந்திரபுரியின் வடக்கு வாசற் கோபுர மேடையின் அருகே, கோரன் அதிகோரன் என்னும் கொடிய வீரர்கள் படையோடு காவல் செய்திருந்தனர்.

25. "இவ்வழியாகச் சென்ருல் இங்குள்ள சேனை எதிர்த்துப் போர் செய்யும். இதனைப் பொருது அழிப்பதற்குள் பொழுது போய்விடும்; ஆயினும் போர் முடிந்திடாது; பின்னர் வீரமாநகரில் உள்ள நால்வகைச் சேனை வெள்ளமும் எழுந்து வரும்.

ஏவ ரும்வெலற்கு அரியசூர்
பின்னர்வந்து எதிர்க்கும்
ஓவில் வெஞ்சமர் பற்பகல்
ஆற்றியான் உறினும்
வீவது இல்லையால் அங்கவன்
மேலைநாள் தவத்தால்
தேவ தேவன்முன் அருளிய
வரங்களின் சீரால். 26

போத நாயகன் பரம்பொருள்
நாயகன் பொருவில்
வேத நாயகன் சிவன்அருள்
நாயகன் விண்ணோர்க்கு
ஆதி நாயகன் அறுமுக
நாயகன் அமலச்
சோதி நாயகன் அன்றியார்
சூரனைத் தொலைப்பார். 27

ஆத லால்அமர் ஆற்றுதல்
முறையதோ அஃதான்று
ஈது நம்பெரு மான்தனது
அருளுமன்று இனைய

---

26. எவராலும் வெல்ல முடியாத சூரன் பின்னர் வந்து எதிர்ப்பான்; அவனோடு பலநாள் போர் புரிந்தாலும் இறைவன் அளித்துள்ள சிறப்பினால் அவன் இறக்கப் போவதில்லை.

27. ஞான நாயகன்; பரம நாயகன்; வேத நாயகன்; குமார நாயகன்; அமரர்க்கு ஆதி நாயகன்; ஆறுமுக நாயகன்; ஆசற்ற சோதி நாயகன் - அவனன்றிச் சூரனை யாவரே அழிக்க வல்லார்?

28. ஆதலால் போர் புரிதல் ஏற்றதன்று; அன்றியும் எம்பெருமான் இட்ட பணியும் அதுவன்று;

தூதர் செய்கடன் ஆம்கொலோ
அமர்பெருத் தொடர்பால்
போத லேகடன் என்றனன்
பொருவில்சீர் அறிஞன். 28

நின்று இப் பாற்படல் நீர்மை அன்றரோ
தென்திக் கின்வழி சென்று நாடுவன்
என்றுட் கொண்டுஅவண் நீங்கி ஏகினுன்
குன்றின் தொன்மிடல் கொண்ட தோளினுன். 29

கயமுகாசுரனைக் கொல்லுதல்

ஏகா நிற்புழி ஏந்தல் கீழ்த்திசை
மாகா வற்கொள் மதங்க மாமுகன்
மீகான் ஒப்ப வியன் கலத்தினுக்கு
ஆகா யத்தின் அமர்ந்து போற்றுவான். 30

வாணுள் அஃகினன் மாயும் எல்லையான்
ஏணுல் அத்திசை ஏகும் வீரனைக்
காணு நின்று கனன்று சாலவும்
சேணுன் இன்னன செப்பி ஏகுவான். 31

தூதர்க்கு அது முறையும் அன்று; போர் இன்றி நகரின் உள்ளே புகுதலே முறை" என்று கருதினுர் வீரவாகு.

29. வடக்கு வாசலின் வழியே செல்லுதல் எளிதன்று எனத்தெளிந்து தென்புறம் சென்று நாடக் கருதிப் புறப்பட்டார்.

30. அவ்வழியில் கப்பலைக் காக்கும் மீகாமனைப் போல் வானில் நின்று வீரமாநகரைக் காத்த வீரனுகிய கயமுகன் என்பவன்,

31. ஆயுள் குறைந்து மாளும் காலம் அடுத்தமையால், ஆகாய வழியே சென்ற வீரவாகுவைக் கண்டு பேசலுற்ருன்.

மிக்கார் காவல் விலங்கி நீஇவண்
புக்காய் மாயை புகன்றுளாய் கொலோ
அக்கால் தானும்எம் ஆணை நீங்கியே
எக்கா லத்தினும் ஏக வல்லதோ. 32

ஆலா லத்தை அயின்ற நம்பனோ
மாலா னோவன சத்தில் அண்ணலோ
பாலார் தந்தி படைத்த கள்வனோ
மேலார் இங்குனை விட்ட தன்மையார். 33

சுற்றா நின்றனை சூழ இந்நகர்
ஒற்றாய் வந்தனை போலும் உன்தனை
மற்றார் உய்த்தனர் வந்தது என்கொலோ
விற்றாய் நின்னுயிர் எங்கண் உய்திநீ. 34

வானோர் அஞ்ச வரும் கயாசூரன்
தானோர் குன்று தனைப்பறித்திடா
ஊனோடு உன்னுயிர் உண்ணும் ஈதெனா
வானோன் மைந்தன்முன் ஆர்த்து வீசினான். 35

---

32. "அடே! நீ வலிய காவலைக் கடந்து வந்தாய்; மாயம்புரிந்து புகுந்தாயோ? காற்றும் எமது ஆணைகடந்து வரும் ஆற்றல் உடையதன்றே!

33. உன்னை அனுப்பியவர் யார்? ஆலகாலத்தை அருந்திய அரனோ? மாலோ? அயனோ? வெள்ளை யானையுடைய கள்வனோ?

34. இந்நகரத்தைச் சுற்றினாய் நீ! ஒற்றனாக வந்தாய் போலும்! உன்னை விடுத்தவர் யார்? வந்த காரியம் யாதோ! பேதாய்! உன் உயிரை விற்றாய்! நீ இனிப் பிழைக்கு மாறுண்டோ?"

35. இவ்வாறு முழங்கிக்கொண்டு கயமுகன் வானவர் அஞ்சும் வகையில் ஒரு குன்றத்தைப் பறித்தெடுத்து 'இது உன் உடலையும் உயிரையும் ஒழித்துவிடும்" என்று ஆரவாரித்து வீசினான்.

விறல்கெழு புயத்தினுன் மேல்
விடுத்திடு கிரிகள் யாவும்
வறிதுபட் டிடலும் காணு
மால்கரி முகத்தன் நின்றுன்
அறநெறி ஒருவி மொய்ம்பால்
ஆற்றிய வெறுக்கை யாவும்
பிறர்கொள உகுத்து யாதும்
ஊதியம் பெறுகி லார்போல். 36

காயெரி கலுழும் வெங்கண்
கயாசுரன் விடுவான் பின்னும்
சேயுயர் வரைபல் வேறு
தெரிந்தனன் பறிக்கும் எல்லை
நாயகன் தூதன் காணு
நாந்தகம் கொடுபோய் அன்னுன்
ஆயிரம் ஆகி யுள்ள
புழைக்கையும் அறுத்தான் அன்றே. 37

உதைத்திடு கின்ற காலை
ஒல்லென அரற்றி வீழ்ந்து
மதத்தினை உறு கபோல
மால்கரி முகத்து வெய்யோன்

---

36. அவ்வசுரன் வீசி எறிந்த மலைகள் எல்லாம் வெறுமையாக விழுந்தன. அறநெறி தவறிப் பலவந்தமாகச் சேர்த்த பொருளை யெல்லாம் அயலார் கொள்ளப் பறிகொடுத்து ஆக்கம் கெட்ட மாந்தரைப்போல கயமுகன் திகைத்து நின்றுன்.

37. தீப்பொறி பறக்கும் கண்களோடு பின்னும் அவ்வசுரன் வீரவாகுவின் மீது விட்டெறிவதற்கு வேறு மலைகளைப் பெயர்த்தெடுத்தான்: அப்போது முருகதூதன் தன் வாளை எடுத்து அவனருகே போந்து, ஆயிரம் துதிக் கைகளையும் அறுத்தெறிந்தார்.

38. (கரம் இழந்தும் உரம் இழவாது நின்ற கயமுகன் பின்னும் போர் புரிய முனைந்தான்.) அந்நிலையில் அவனை உதைத்துத் தள்ளினுர் வீரவாகு. அரற்றி விழுந்

பதைத்தனன் ஆவி சிந்திப்
பட்டனன் பகிர்ந்த மார்பில்
குதித்திடு சோரி நீத்தம்
குரைகடல் போய தன்றே. 38

வீரவாகு நகரின் உள்ளே செல்லுதல்

ஆரணம் தனக்கும் காணு
ஆதியம் கடவுள் சொற்ற
பேரருள் மறந்தே இன்னே
பீடலார் தம்மொடு ஏற்றுப்
போரினை இழைத்து நிற்றல்
புல்லிது புலமைத் தன்றால்
சூர்உறை மூதூர் தன்னில்
துன்னுவன் கடிதின் என்றான். 39

நொய்யதோர் அணுவின் ஆற்ற
நுணுகியும் மேன்மை தன்னில்
பொய்யில்சீர் பெருமைத் தாயும்
பூரண மாகி வைகும்
செய்யதோர் குமரன் பொற்றாள்
சிந்தைசெய்து அன்பிற் போற்றி
ஓய்யென அருளின் நீரால்
ஓரணு உருவம் கொண்டான். 40

தான் அசுரன்; நெஞ்சம் துடித்தான்; உயிர் விடுத்தான். அறுத்த மார்பினின்று பொங்கிப் பாய்ந்த இரத்தம் அலை கடலை நோக்கிச் சென்றது.

39. "அருமறைகளாலும் அறிய வொண்ணாத முருகப் பெருமானது கருணையை மறந்து, பெருமையற்ற இவ்வசுரருடன் போர் புரிந்து நிற்றல் பேதமையாகும். ஆதலால் சூரன் நகரினுள்ளே இனி விரைந்து செல்வேன்" என்றார் வீரவாகு.

40. நுண்ணிய அணுவிலே சாலச் சிறிதாகியும், பெரிய பொருளிலே மிகப் பெரியதாகியும் எங்கும் நிறைந்து நிற்கும் அறுமுகச் செவ்வேள் திரு அடியை அன்பொடு போற்றி, அப்பெருமான் அருளால் ஓர் அணுவின் உருவம் கொண்டார் முருகதூதன்.

அண்டம் யாவையும் எழுவகை
உயிர்த்தொகை அனைத்தும்
பிண்ட மாம்பொருள் முழுவதும்
நல்கிளம் பெருமான்
பண்டு பாரித்த திறமென
மகேந்திரப் பதியின்
மண்டு தொல்வளம் நோக்கியே
இன்னன மதிப்பான். 41

நகரத்தில் கண்ட காட்சி

குழலின் ஓதையும் எழால்களின்
ஓதையும் குறிக்கும்
வழுவில் கோட்டொடு காகள
ஓதையும் மற்றை
முழவின் ஓதையும் பாடுநர்
ஓதையும் முடிவில்
விழவின் ஓதையும் தெண்திரை
ஓதையின் மிகுமால். 42

வில் இயற்றுவோர் வாட்படை
இயற்றுவோர் வேரும்
எல்லை யில்படை உள்ளவும்
இயற்றுவோர் இகலால்

---

41. சிவபெருமான் எல்லா உலகங்களையும், ஏழுவகையான உயிர்த் தொகைகளையும், மற்றுமுள்ள பிண்டப் பொருள்களையும் படைத்து ஓரிடத்தில் நிறைத்துவைத்த தன்மைபோல் விளங்கிய மகேந்திர நகரின் வளங்களைக் கண்டு வீரவாகு எண்ணலுற்றார்.

42. "இந்நகரில் எழுகின்ற குழலின் ஒலியும், யாழின் ஒலியும், சங்கின் ஒலியும், எக்காள ஒலியும், மத்தள ஒலியும், பாட்டின் ஒலியும், எல்லையற்ற விழாவின் ஒலியும் கடலொலியினும் மிகுந்துள்ளது.

43. வில்லை எடுத்துப் பயில்பவர் ஒருபால்; வாள் எடுத்து ஆள்பவர் ஒருபால்; மற்றைய படைக்கலம் பயிலும் மறவர் ஒருபால்; மற்போர் பயிலும் மதுகையர் ஒரு

மல் இயற்றுவோர் மாயமது
இயற்றுவோர் மனுவின்
சொல் இயற்றுவோர் கண்ணுறு
புலந்தொறும் தொகுமால். 43

காடி மேல்எழுத் தசையிலாது
உலறியே நரையாய்க்
கோடு பற்றிமூத் தசைந்திடு
வோரையும் கூற்றால்
வீடு வோரையும் பிணியுழப்
போரையும் மிடியால்
வாடு வோரையும் கண்டிலம்
இதுதவ வலியே. 44

கழியும் இந்நகர் ஆக்கமோ
கரையில இவற்றுள்
விழிகள் எண்ணில பெற்றுளார்
தாம்கண்ட வெறுக்கை
மொழிவர் என்னினும் நாவதொன்
ருல்முடிந் திடுமோ
அழிவில் ஆயிர கோடிநாப்
பெறுவரேல் அறைவார். 45

பால்; மாயப்போர் பயில்பவர் ஒருபால்; மந்திரம் முயல்ப வர் ஒருபால்; ஆகப் பார்க்குமிடமெங்கும் வீரர்களே பரந்து தோன்றுகின்றார்கள்.

44. நரம்பெழுந்த மேனியரும், ஊன் ஒடுங்கி உலர்ந் தவரும், நரைத்துப் பழுத்த தலையினரும், தண்டூன்றித் தள்ளாடித் திரிபவரும், கூற்றுவனால் கொள்ளப் படுவோ ரும், நோய்களால் வருந்துவோரும், வறுமையால் வாடு வோரும் இந்நகரில் எங்குமில்லை; இது தவத்தின் வலி மையேயாகும்.

45. சிறந்த இந்நகரத்தின் செல்வத்திற்கு ஓர் அள வில்லை; இவ்வளத்தையெல்லாம் காண்பதற்கு எண்ணி றந்த கண்கள் வேண்டும்; அன்றும் தாம் கண்ட காட் சியை ஒரு நாவால் உரை செய்ய ஒண்ணாது. அழிவற்ற ஆயிரங்கோடி நாவினைப்பெற்றால் எடுத்துரைக்கக்கூடும்."

என்று முன்னியே அறுமுகன்
தூதுவன் இமயக்
குன்றம் அன்னகீழ்த் திசைமுதல்
கோபுரக் குடுமி
நின்று மாநகர் வளம்சில
நோக்கியே நெடுஞ்சீர்
துன்று சூர்உறை திருநகர்
அடைவது துணிந்தான். 46

வான மாநெறி நீங்கியே
மறைகளின் துணிபாம்
ஞான நாயக அறுமுகன்
அருள்கொடு நடந்து
தூநி லாவுமிழ் எயிறுடைச்
சூர்முதற் சுதனும்
பானு கோபனது உறையுளை
எய்தினன் பார்த்தான். 47

உரிய மந்திரத் துணைவரில்
தலைமை பெற்று உறையும்
தரும கோபன்தன் கடிமனைச்
சிகரமேல் தங்கிச்

46, இவ்வாறு எண்ணி முருகதூதன் இமயமலை போன்ற கீழ்த்திசைக் கோபுரத்தின்மேல் நின்று அந் நகரின் சில வளங்களைக் கண்டு சூரன் இருந்த திருநகரி னுள்ளே செல்லத் துணிந்தார்.

47. பின்னும் ஆகாய வழியாகச் சென்று, முருகப் பெருமானது திருவருளைத் துணைக்கொண்டு நடந்து, சூர னுடைய முதற் புதல்வனாகிய பானுகோபனது மாளிகை யைப் பார்த்தார்.

48. சூரனுக்கு உரிய மந்திரிகளில் தலைமை பெற்று விளங்கிய தருமகோபனது மாளிகையின்மீது தங்கினார்.

சுரரும் வாசவன் மதலையும்
அவுணர்கள் சுற்றப்
பரிவு கொண்டமர் சிறைக்களம்
நாடியே பார்த்தான். 48

சிறையிருந்த சயந்தன்

தேவியல் மரகதம் தெளித்துத் தீட்டிய
ஓவிய உருவம் மாசுண்ட தன்மையான்
ஆவியம் புனல்அரு து அமரும் காவியம்
பூவியல் மென்தொடை புலர்ந்ததே அனான். 49

ஐந்தரு நீழலை நினைக்கும் ஆய்மலர்
தந்தமென் பள்ளியை உன்னும் தான்எனப்
புந்திகொள் மங்கையர் புணர்ப்பை உட்கொளும்
இந்திரப் பெருவளம் எண்ணிச் சோருமே. 50

அங்கிருந்து வானவரும் சயந்தனும் அசுரர் காவலிற் சிறையிருந்த இடத்தைக் கண்ணுற்றார்.

49. தெய்வத் தன்மை வாய்ந்த தெள்ளிய மரகத மணியாற் செய்த அழகிய வடிவம் மாசடைந்தாற் போலவும், குளிர்ந்த நீர்நிலையில் மலர்ந்த நீலமலர்களால் தொடுத்த மெல்லிய மாலை வாடியுலர்ந்தாற் போலவும் தோன்றினான் சயந்தன்.

50. அவன், ஐந்து வகையான தேவதருக்களின் நிழலில் அமைந்து வாழ்ந்த சுகத்தை நினைப்பான்; மெல்லிய நறுமலர் விரித்த பூம்பள்ளியை நினைப்பான்; தான் விரும்பியவாறே தன்னை விரும்பிய நங்கையர் நலத்தினை நினைப்பான்; விண்ணாட்டுச் செல்வத்தையெல்லாம் எண்ணி மயங்குவான்.

பொன்நகர் கரிந்ததும் புதல்வன் ஆகும்என்
தன்னை இம் முதுநகர்த் தந்து தானவர்
துன்னரும் சிறையிடு துயரும் கேட்டபின்
என்நினைந்து இரங்குமோ ஈன்ற தாய்எனும். 51

துறந்ததோ பேரறம் தொலையும் தீம்பவம்
சிறந்ததோ மாதவப் பயனும் தேய்ந்ததோ
குறைந்ததோ நன்னெறி கூடிற் றோகலி
இறந்ததோ மறைசிவன் இல்லை யோஎனும். 52

கைந்நாகத் துக்கும் கயவாய்க்கும் நாரைக்கும்
பைந்நாகத் துக்கும் படரும் சிலந்திக்கும்
பின்னாகிய உயிர்க்கும் பேரருள்முன் செய்தனையால்
என்நா யகனே எமக்கே அருளாயே. 53

---

51. "பொன்னகரம் பொறிந்து கரிந்ததையும், என்னை இந்நகரில் அசுரர் கொண்டு வந்து அருஞ்சிறையில் அடைத்ததையும் கேட்கும்பொழுது என்னைப்பெற்ற தாய் என்னென்ன நினைந்து ஏங்குவாளோ" என்றெண்ணி, ஏங்குவான்.

52. "அறம் என்னைத் துறந்ததோ? மறத்தின் கொடுமை நிறைந்ததோ? மாதவத்தின் பயன் தேய்ந்ததோ? நன்மை குறுகிற்றோ? தின்மை பெருகிற்றோ? மறை இறந்ததோ? இறைவனும் இல்லையோ" என்று மறுகுவான்.

53. "எம்பெருமானே! விலங்காகிய யானைக்கு விரைந்து அருள் செய்தாய்! கரிக்குருவிக்கும் நாரைக்கும் கருணை புரிந்தாய்! ஊர்ந்து செல்லும் பாம்புக்கும் சிலந்திக்கும் பிறவுயிர்களுக்கும் பரிவு கூர்ந்தாய்! நின் திருவடி மறவாத தேவரையும் என்னையும் காத்தருளாயோ?

கங்கை முடித்தாய் கறைமிடற்ருய் கண்ணுதலாய்
திங்கள் புனைந்தாய் சிவனே சிவனேயென்று
இங்கு நினதுஅடியேம் எல்லேங் களும்அரற்ற
நங்கள் உயிர்க்குயிராம் நாயகநீ கேட்டிலேயோ.

நாராயணனும் அந்த நான்முகனும் நாடரிய
பேராதி யான பெருமான் உயிர்க்கெல்லாம்
ஆராயின் நீயன்றி ஆரே துணையாவார்
வாராய் தமியேன் உயிர்அளிக்க வாராயே. 55

என்று பற்பல இரங்கியே
விடம்செறிந் தென்னச்
சென்று சென்றிடர் மூடுரு
உணர்வெலாம் சிதைப்ப
ஒன்றும் ஓர்கிலன் மயங்கினன்
உயிர்கரந்து உலையப்
பொன்றி ஞர்களின் மறிந்தனன்
இந்திரன் புதல்வன். 56

---

54. கங்கை சூடிய எங்கள் நாயகனே! நஞ்சுண்டு கண்டம் கறுத்த நாதனே! நெற்றிக் கண்ணுடைய நிமலனே! பிறைமதி யணிந்த பெருமானே! செம்மையேயாய சிவனே! சிவனே! என்று நின் அடியார் எல்லாரும் ஓலமிடுகின்ருேமே! உயிர்க்குயிராய தலைவா! அவ்வுரையும் கேட்டிலேயோ?

55. திருமாலும் பிரமனும் தேடிக் காணுத தேவ தேவா! மன்னுயிர்க்கெல்லாம் நீயன்றி மற்று யாரே உற்ற துணையாவார்? இவ் ஏழையைக் காக்க எழுந்தருளி வாராயோ?''

56. இவ்வண்ணம் பலவகையாகப் புலம்பி நஞ்சு தலைக்கேறிஞற்போன்று நடுங்கு துயரால் உணர்விழந்து ஒன்றும் அறியாதவனுய் மயங்கினுன். அவன் மூச்சு ஒடுங்கிற்று; இறந்தாரைப்போல் சாய்ந்தான், இந்திரன் மைந்தன்.

கந்தவேள் சயந்தனுக்குக் காட்சியளித்தல்

இனிய சீரடிக் குமரனில்
செந்திவந்து இமையோர்
வினைகொள் கம்பலை அகற்றுவான்
இருந்திடும் விமலன்
தனது உணர்ச்சியின் றுகியே
அவசமாம் சயந்தன்
கனவின் முன்னுற வந்தனன்
அருள்புரி கருத்தால். 57

வீறு கேதனம் வச்சிரம்
அங்குசம் விசிகம்
மாறி லாதவேல் அபயமே
வலம்இடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழு
தண்டுவில் இசைந்த
ஆறி ரண்டுகை அறுமுகம்
கொண்டுவேள் அடைந்தான். 58

தந்தை இல்லதோர் பரமனைத்
தாதையா உடைய
கந்தன் ஏகியே அனையதன்
உருவினைக் காட்ட

57, செவ்விய சிறிய அடிகளையுடைய பாலனுய்ச் செந்தூரில் வந்து, வானவரது வினைப் பயனுகிய துன்பத்தை விலக்கக் கருதி நின்ற விமலன், சிறைக் கோட்டத்தில் மயங்கிக் கிடந்த சயந்தனுக்குத் திருவருள் புரிய விரும்பி அவன் கனவிலே தோன்றினர்.

58. வீரக் கொடியும் வச்சிரப் படையும், அங்குசமும் அம்பும், அயில் வேலும் அபயமும் வலப்புறமுள்ள ஆறு கரங்களில் கொண்டு, இடப்புறமுள்ள திருக்கரங்களில் வரதமும் கமலமும், மணியும் மழுவும், கதையும் வில்லும் தாங்கி ஆறுமுகச் செவ்வேள் விளங்கினர்.

இந்தி ரன்மகன் உளப்படும்
யாக்கையுள் இருந்த
முந்து கண்களாற் கண்டனன்
தொழுதனன் மொழிவான். 59

தொண்ட னேன்படும் இடுக்கணை
நாடியே தொலைப்பான்
கொண்ட பேரருள் நீர்மையிற்
போர்ந்தனை குறிக்கின்
விண்டும் அல்லைஅப் பிரமனும்
அல்லைமேல் ஆகும்
அண்டர் நாதனும் அல்லைநீ
ஏவர்மற்று அருளே. 60

என்ற காலையில் அறுமுகப்
பண்ணவன் யாம்அக்
கொன்றை வேணியின் மிலைச்சிய
பரஞ்சுடர் குமரன்
உன்தன் அல்லலும் இரக்கமும்
மையலும் உணர்ந்து
சென்ற னம்எனக் கூறியே
பின்னரும் செப்பும். 61

---

59. தந்தையற்ற பெருமானைத் தந்தையாகவுடைய கந்தவேள் அளித்த காட்சியைச் சயந்தன் நுண்ணுடலில் அமைந்த மனக் கண்ணாற்கண்டு வணங்கிக் கூறலுற்றான்.

60. "ஐயனே! அடியேன் படும் அல்லலை அறிந்தாய்! அதனை அகற்றத் திருவுளங்கொண்டு அருள்கூர்ந்து எழுந்து வந்தாய்! நின் திருவுருவைப் பார்த்தால் நீ திருமாலும் அல்லை; பிரமதேவனும் அல்லை; அவர்க்கு மேலாய சிவபெருமானும் அல்லை. என்னை ஆட்கொள்ள வந்த நீயார் என்று அறிவித்தருளல் வேண்டும்."

61. என்று விண்ணப்பம் செய்தான். அப்போது ஆறுமுகப் பெருமான் "யாம் சிவகுமரன்; உனது துயரத்தையும் உருக்கத்தையும் மயக்கத்தையும் உணர்ந்து இங்கு வந்தோம்."

நுந்தை தன்குறை நும்குறை
யாவையும் நுவன்று
வந்து நந்தமை வேண்டலும்
வரம்பில்சேனையொடும்
இந்த ஞாலத்தின் எய்தியே
கிரவுஞ்சம் என்னும்
அந்த வெற்பையும் தாரகன்
தன்னையும் அட்டாம். 62

அனைய வன்தனை அட்டபின்
செந்திவந்து அமர்ந்தாம்
வனசம் மீமிசை இருந்திடு
பிரமனும் மாலும்
உனது தாதையும் அமரரும்
நம்வயின் உறைந்தார்
இனையல் வாழிகேள் உங்கையும்
மேருவின் இருந்தாள். 63

செல்லும் இப்பகல் கழிந்தபின்
நாளையே செந்தி
மல்லல் அம்பதி நீங்கிஇந்
நகர்க்குஅயல் வைகிச்

---

62. உன் தந்தையாகிய இந்திரன் தனது குறையையும் உமது குறையையும் எம்மிடம் வந்து முறையிட்டான். அந்நிலையில் யாம் அளவிறந்த சேனையோடு இந்நிலவுலகிற் போந்து கிரவுஞ்சம் என்னும் மலையையும் தாரகாசுரனையும் அழித்தோம்.

63. அதற்குப்பின்பு திருச்செந்தூரில் வந்து அமர்ந்தோம். பிரமதேவனும், திருமாலும், உன் தந்தையும் தேவரும் நம்மிடத்தில் உள்ளார். உன் தங்கை மகாமேரு மலையிலே உள்ளாள். நீ வருந்தாதே.

64. இன்றைப்பொழுது கழிந்ததும் நாளையே செந்தியம்பதியை விட்டுப் புறப்பட்டு இங்கு வருவோம். இந்

சொல்லும் ஐந்திரு வைகலின்
அவுணர்தம் தொகையும்
அல்லல் ஆற்றிய சூரனும்
முடித்திட அடுதும். 64

அட்ட பின்னரே நின்னைவான்
அவருடன் அவுணன்
இட்ட வெஞ்சிறை நீக்கிநும்
திருவெலாம் ஈதும்
விட்டிடு இங்குனது ஆகுலம்
என்றனன் வினைதீர்ந்து
உட்டெ ளிந்தவர் போதத்தின்
உணர்வுமாய் உறைவோன். 65

ஐயன் ஈங்கிவை உரைத்தவை
கேட்டலும் அகத்துள்
மையல் மாசிருள் அகன்றன
புகுந்தன மகிழ்ச்சி
மெய்யு ரோமங்கள் சிலிர்த்தன
உகுத்தன விழிநீர்
சைய மேஎன நிமிர்ந்தன
சயந்தன தடந்தோள். 66

நகரின் அருகே தங்கி நின்று பத்து நாட்களில் அசுரரது பரந்த சேனையையும் அல்லல் விளைத்த சூரனையும் அழித்திடுவோம்.

65. பின்னர், உன்னையும் தேவரையும் கொடிய சிறையினின்றும் விடுவித்து உமது செல்வங்களையெல்லாம் தருவோம். ஆதலால் துயரம் தீர்க" என்றார் மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற முருகவேள்.

66. ஆறுமுகப்பெருமான் அருளிய மொழிகளைக் கேட்டான் சயந்தன்; மயக்கமும் தியக்கமும் தவிர்ந்தான்; மகிழ்ச்சியடைந்தான்; மெய்ம்மயிர் சிலிர்த்தான்; கண்ணீர் வடித்தான்; மலையெனத் தோள் நிமிர்ந்தான்.

தந்தி நஞ்சம் தலைக்கொளச் சாய்ந்தவர்
மந்தி ரத்தவர் வாய்மைவந்து உற்றுழிச்
சிந்தை மையலைத் தீர்ந்தெழும் ஆறுபோல்
இந்தி ரன்தன் மதலை எழுந்தனன். 67

அறுமுகம் உடையதோர் ஆதி நாயகன்
நிறைதரும் உலகெலாம் நீங்கல் இன்றியே
உறைவதும் கருணைசெய் திறனும் உன்னியே
மறைமுறை அவனடி வழுத்தி வைகினான். 68

முருகதூதன் சயந்தனைக் காணுதல்

இத்திறம் அமரரோடு இந்தி ரன்மகன்
அத்தலை இருத்தலும் அனையர் யாவரும்
மொய்த்திடு சிறையகம் முன்கண் டான்அரோ
வித்தக அறிஞனும் வீர வாகுவே. 69

கண்ணோடல் இன்றித் துயர்வேலையிற்
காவல் கொண்ட
எண்ணோர் எனைக்கண் டிலராய்உணர்
வின்றி மாழ்க

---

67. நாகத்தின் நஞ்சு தலைக்கேறிச் சாய்ந்தவர் மந்திர வாதத்தால் மயக்கம் தீர்ந்து எழுந்திருத்தல் போன்று சயந்தன் எழுந்தான்.

68. ஆதிநாயகனாகிய ஆறுமுகப் பெருமான் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நீர்மையும், அருள்புரியும் தன்மையும் நினைந்து அவர் திருவடிகளை மறை மொழிகளால் போற்றித் தொழுதுகொண்டு அங்கிருந்தான்.

69. இவ்வண்ணம் வானவரோடு சயந்தன் சிறையிருத்தலையும், அசுரர்கள் செறிந்து சிறைக் கோட்டத்தைக் காவல் செய்திருத்தலையும் வித்தகராகிய வீரவாகு கண்டார்.

70. கருணை யின்றிக் கடுஞ்சிறையைக் காத்து நின்ற அசுரர் என்னைக் காணாது மயக்கமுற்றுக் கிடக்கவும்

விண்ணோர்கள் காணத் தமியேன்
செலவேண்டும் என்றான்
மண்ஓர் அடியால் அளக்கும்
தனிமாயன் ஒப்பான். 70

ஓங்கார மூலப் பொருளாய்
உயிர்தோறும் என்றும்
நீங்காது அமருங்குமரேசனை
நெஞ்சின் உன்னி
ஆங்காகுவதோர்அவன் மந்திரம்
அன்பின் ஓதித்
தீங்காம் அவுணர் செறிகாப்பகம்
சென்று புக்கான். 71

தாமம்தரும் மொய்ம்புடை வீரன்
சயந்தன் விண்ணோர்
ஏமம்தரும் வன்சிறைச் சூழலுள்
ஏக லோடும்
தூமம்திகழ் மெய்யுடைக் காவலர்
துப்பு நீங்கி
மாமந்திர மாம்வலைப் பட்டு
மயங்கல் உற்றார். 72

வானவர் என்னைக் காணவும் ஒருவகை செய்து செல்ல வேண்டும் என்று கருதினார்.

71. மூல மந்திரத்தின் பொருளாய், உயிர்க்குயிராய் நின்று நிலவும் குமரேசனை நினைத்தார்; அவர்க்குரிய மந்திரமாகிய ஆறெழுத்தை அன்புடன் ஓதினார்; தீமையே உருவாகி நின்ற அசுரரது சிறைச்சாலையினுள்ளே புகுந்தார்.

72. அப்பொழுது புகை நிறம் பொருந்திய அசுரர் வலிமையற்று, மந்திர வலையிற் பட்டு மயக்க முற்றார்.

அன்னார் அமரும் களம்சென்று
அயிலேந்தும் நம்பி
நன்னா யகமாம் திருநாமம்
நவின்று போற்றிப்
பொன்னாடு இறைகூர் திருநீங்கிய
புங்க வன்தன்
முன்னா அணுகி இருந்தான்அடல்
மெய்ம்பின் மேலோன். 73

முறையுணர் கேள்வி வீரன்
மொழிகுவான் முதல்வன் தந்த
அறுமுக ஐயன் தன்பின்
அடுத்துளேன் அவன்தூது ஆனேன்
விறல்கெழு நந்தி பாலேன்
வீரவாகு என்பேர் நுங்கள்
சிறைவிடும் பொருட்டுச் சூர்முன்
செப்புவான் வந்தேன் என்றான். 74

முருகன் பெருமையை எடுத்துரைத்தல்

தேவர்கள் தேவன் வேண்டச்
சிறைவிடுத்து அயனைக் காத்த
மூவிரு முகத்து வள்ளல்
முழுதருள் செய்தான் நும்பால்

---

73. அந்த வேளையில் வீரவாகு சிறைக்களத்தில் வேலேந்திய முருகப்பெருமானது திருநாமத்தைச் சொல்லித் துதித்தார். பொன்னுலகத்தை யாளும் சிறப்பிழந்த சயந்தன் முன்னே சென்று அமர்ந்தார்.

74. (வியப்புற்று நின்ற சயந்தனை நோக்கி) "ஐயனே! கேள்: முதல்வன் பெற்ற முருகவேளின் பின்னவன் யான். அவன் தன் தூதனாய் வந்தடைந்தேன். வீரம் வாய்ந்த நந்தி கணங்களுள் ஒருவன் நான். வீரவாகு என்னும் பெயருடையேன்; உங்களைச் சிறையினின்று விடுவிக்கும்படி சூரனிடம் சொல்ல வந்தேன்.

75. சிவபெருமான் வேண்டிக் கொண்டமையால் பிரம தேவனைச் சிறையினின்றும் விடுவித்த அறுமுக

பாவமும் பழியும் தீங்கும்
பையுளும் பிறவும் எல்லாம்
போவது பொருளோ தோற்றப்
புணரியும் பிழைத்தீர் அன்றே. 75

தன்நிகர் இன்றி மேலாய்த்
தற்பர ஒளியாய் யாரும்
உன்னரும் பரமாய் நின்ற
ஒருவனே முகங்கள் ஆறும்
பன்னிரு புயமும் கொண்டு
பாலகன் போன்று கந்தன்
என்னும்ஓர் பெயரும் எய்தி
யாவரும் காண வந்தான். 76

வாரிதி ஏழும் எண்ணில்
வரைகளும் பிறவும் கொண்ட
பாருடன் உலகேர் ஏழும்
படைத்தபல் அண்டம் யாவும்
ஓரிறை முன்னம் அட்டே
உண்டிடும் ஒருவன் செவ்வேல்
சூரனை அவுண ரோடும்
தொலைப்பதோர் விளையாட் டம்மா. 77

வள்ளல் உங்களிடம் நிறைந்த கருணை பாலித்தார். அவரருள் முன்னிற்கும் பொழுது உம்முடைய பாவமும் பழியும் தீமையும் துன்பமும் பிறகுறைகளும் அழிந்தொழிதல் அரிதாகுமோ? பிறவியாகிய பெருங்கடலையும் கடந்தீரன்றோ?

76. ஒப்புயர்வற்றதாய், அரிய பேர் ஒளியாய், நினைப்பிற்கு எட்டாததாய் நின்ற பரம்பொருளே ஆறு முகமும் பன்னிரு தோளும் கொண்டு, பாலகன் போலத் தோன்றி, கந்தன் என்னும் ஓர் பேரும் பெற்று எல்லோரும் காணக் காட்சி தருகின்றார்.

77. எழு கடலும், எண்ணிறந்த மலையும், ஏனைய பொருளும் கொண்ட நிலவுலகத்தையும், மேலும் கீழுமாய் நின்ற பதினன்கு உலகங்களையும், மற்றுமுள்ள அண்டங்கள் அனைத்தையும் நொடிப்பொழுதில் உண்டு ஒழிக்க வல்லது முருகனது வேல்; சூரனையும் அசுர குலத்தையும் வீட்டுவது அதற்கு ஒரு விளையாட்டே யாகும்.''

என்றிவை பலவும் வீரன்
இமையவர் குழாத்தி னோடும்
குன்றெறி பகைஞன் மைந்தன்
உணர்தரக் கூற லோடும்
நன்றென உவகை பூத்து
நாமவேல் நம்பி ஆற்ற
வென்றி பெற்றிடுக என்று
வீற்றுவீற்று ஆசி சொற்றார். 78

தூதன் சூரனது மாளிகைக்குச் செல்லுதல்

மடந்தையொடு இரிந்திடும் வாசவன் மகன்
அடைந்திடு சிறைக்களம் அகன்று வான்நெறி
நடந்தனன் அவுணர்கோன் நண்ணு கோநகர்
இடந்தரு கிடங்கரை இகந்து போயினான். 79

சூளிகை மீமிசை துன்னுபு சூரன்
மாளிகை யுள்ள வளந்தனை எல்லாம்
மீளரி தாவிழி யோடுஉளம் மேவ
வாளரி நேர்தரும் ஆண்டகை கண்டான். 80

---

78. என்று இன்னோரன்ன செய்திகளை இந்திரன் மைந்தனும் இமையவரும் உணரத்தக்க வகையில் வீரவாகு எடுத்துரைத்தார். அந்நிலையில் அன்னோர் மனமகிழ்ந்து "வேலனுக்கு இளைய வீரா? நீ வெற்றி பெற்றிடுக' என்று தனித்தனியாக ஆசி கூறினர்.

79. சிறைக்களம் விட்டு நீங்கினார் முருக தூதன்; வானின் வழியே விரைந்து சென்றார். சூரன் நகரத்தைச் சூழ்ந்திருந்த அகழிகளைக் கடந்து போயினார்.

80. கோட்டை நகரில் அமைந்த செய்குன்றின்மேல் நின்று சூரனது மாளிகையின் வளத்தை யெல்லாம் கண்ணும் மனமும் பொருந்த நோக்கினார்.

முருக தூதனுக்கு அரியாசனம் வருதல்

நலஞ்செய் சூளிகை நீங்கிவிண்
நெறிக்கொடு நடந்து
கலஞ்செய் திண்திறல் வாகுவாம்
பெயருடைக் கடவுள்
வலஞ்செய் வாட்படை அவுணர்கோன்
மன்னிவீற் றிருக்கும்
பொலஞ்செய் கின்றஅத் தாணிமண்
டபத்திடைப் போனான். 81

ஒற்றை மேருவில் உடையதோர்
பரம்பொருள் உதவும்
கொற்ற வேலுடைப் புங்கவன்
தூதெனக் கூறி
இற்றை இப்பகல் அவுணர்கோன்
கீழியான் எளிவாய்
நிற்றல் எம்பிரான் பெருமையின்
இழிபென நினைந்தான். 82

இனையது உன்னியே அறுமுகப்
பண்ணவன் இருதாள்
நினையும் எல்லையின் ஆங்கவன்
அருளினால் நிசியில்

---

81. பின்னர் அவ்விடம் விட்டு நீங்கிப் பறந்து சென்று, வெற்றி வீரனாகிய சூரன் அரியாசனத்தில் வீற்றிருந்த அத்தாணி மண்டபத்தை அடைந்தார்.

82. "மேரு மலையை வில்லாகக் கொண்ட மேலவன் மைந்தனாகிய வேலவன் தூதன் யான்; அசுரர்கோன் அரியாசனத்தில் இருக்க, யான் எளியனாய் அவனுக்குத் தாழ்ந்த நிலையில் இன்று சென்று நிற்றல் எம்பெருமான் பெருமைக்கு இழிவாகுமே" என்று எண்ணினார்.

83. அறுமுகப் பெருமானது திருவடியை நினைந்தார். அந்நிலையில் அவர் அருளால் ஆயிரம் கோடி சூரியர்

தினகரத் தொகை ஆயிர
 கோடிசேர்ந் தென்னக்
கனக மாமணித் தவிசொன்று
 போந்தது கடிதின். 83

வித்தி லப்படு பந்தரும்
 சிவிகையும் நெறியே
முத்த மிழ்க்கொரு தலைவனும்
 மதலைக்கு முதல்வன்
உய்த்த வாறெனக் குமரவேள்
 வீரனுக்கு உதவ
அத்த லைப்பட வந்தது
 மடங்கல் ஏற்றணையே. 84

அனைய வான்தவிசு அவுணன்நேர்
 இருத்தலும் அதுகண்டு
எனது நாயகன விடுத்தனன்
 போலும்என்று எண்ணி
மனம கிழ்ச்சியால் அறுமுகப்
 பிரான்அடி வழுத்தி
வினையம் நாடுவான் இருந்தனன்
 ஆங்கதன் மிசையே. 85

ஒருங்கு சேர்ந்து எழுந்தாற்போன்று பொன்னும் மணியும் இழைத்த ஒளி வீசிய பீடம் ஒன்று விரைவில் அங்கு வந்துற்றது.

84. முத்தமிழ்த் துறைபோகிய திருஞான சம்பந்தருக்கு முத்துப் பந்தரும் சிவிகையும் ஈசன் அளித்த தன்மைபோல் சிவகுமாரன் தம் தூதனுக்கு வழங்கிய அரியாசனம் அம்மன்றத்தில் வந்து நின்றது.

85. அசுரர்கோன் எதிரே நின்ற அரியாசனத்தைக் கண்ட முருக தூதன் 'எம்பெருமான் இதை அனுப்பினன் போலும்' என்றெண்ணி அகமகிழ்ந்து, அவர் திருவடிகளை மனமாரப் போற்றி, அவ்வாசனத்தின்மீது ஏறி வீற்றிருந்தார்.

சூரன் எரிந்து பேசுதல்

அறிவர் மேலவன் தவிசில்வீற்
றிருத்தலும் அவுணர்க்கு
இறைவன் ஆங்கது நோக்கியே
எயிற்றணி கறித்துக்
கறுவியே நகைத்து உரப்பிமெய்
வியர்ப்பெழக் கண்கள்
பொறி சொரிந்திடப் புகையுமிழ்ந்து
இனையன புகல்வான். 86

சுற்றம் நீங்கியே இலையுண்டு
விலங்கெனச் சுழன்று
வற்றல் மாமரக் காட்டகத்து
இருந்துடல் வருத்தும்
சிற்று ணர்ச்சியோர் வல்லசித்து
இயல்பிது சிறியோய்
கற்று ளாய்கொலாம் காட்டினை
நமதுமுன் காண. 87

சித்தர் ஆயினோர் செங்கண்மால்
முதலிய தேவர்
இத்தி றத்தினர் காட்டுதற்கு
அஞ்சுவர் என்முன்

---

86. அதைக் கண்டான் சூரன்; கடுங் கோபங் கொண்டான்; பற்களைக் கடித்தான்; சிரித்தான்; உறுமினான்; உடம்பெல்லாம் வியர்க்க, கண்கள் தீப்பொறி சொரிய, வாய் புகைந்திடப் பேசலுற்றான்.

87. "அடா! அற்பனே! சுற்றம் துறந்து வற்றிய காட்டில் விலங்கெனத் திரிந்து, இலைகளைத் தின்று உடம்பினை வருத்தும் சிற்றறிவுடையோர் செய்யும் சித்தின் தன்மை இது! நீ கற்ற வித்தையை நம் முன்னே காட்டினாயோ?

88. சித்தர்களும், திருமால் முதலிய தேவர்களும் தத்தம் இடங்களில் இத்தகைய வித்தைகள் புரிவார்களே

தத்தம் எல்லையிற் புரிந்திடல்
அல்லது தமியோய்
பித்தனே கொலாம் நமக்கிது
காட்டுதல் பிடித்தாய். 88

உரைசெய் இந்நகர் மகளிரும்
செய்வர் ஊன்முற்றுக்
கருவின் உள்ளுறு குழவியும்
செய்திடும் கருத்தில்
வரைகளும் செயும் மாக்களும்
செயும் மற்றுஅதனல்
அரியது அன்றரோ பேதைநீ
புரிந்திடும் ஆடல். 89

வாசவன் கரந்து ஓடினன்
பிறர்இது மதியார்
கேசவன் இது நினைகிலன்
மறைகளின் கிழவோன்
ஆசி கூறியே திரிந்திடும்
அவர்க்கெலாம் முதலாம்
ஈசன் என்னிடை வருகிலன்
யாரைநீ என்றான். 90

யன்றி என் முன்னே காட்டிடக் கலங்குவர். நமக்கு இது காட்டக்கருதிய நீ பித்தன் போலும்!

89. அடே! பேதாய்! இது மிக அரிய வித்தையென்று எண்ணினையோ? இந்நகரத்தில் பெண்டிரும் இது செய்வர்; கருவிலுள்ள குழவியும் செய்யும்; அறிவற்ற மலைகளும் செய்யும்; விலங்குகளும் செய்யும்; ஆதலால் இதை வியப்பார் இங்கு யாரும் இல்லை. (அது நிற்க)

90. இங்கு துணிந்து வந்த நீ யாவன்? இந்திரன் ஓடி ஒளிந்தான். ஏனையோர் இவ்வாறு செய்யார். திருமால் இதனை மனத்திலும் நினையான். பிரமன் ஆசி கூறித் திரிகின்றான். எல்லார்க்கும் மேலாய இறைவன் என்னிடம் எளிதாக வரமாட்டான்: ஆதலால் நீ யார்' என்று வினவினான் சூரன்.

வீரவாகு தன்னை அறிவித்தல்

புரந்த ரன்குறை அயன்முதல்
அமரர்தம் புன்மை
வருந்தும் வானவர் சிறையெலாம்
நீக்கிமற் றவர்தம்
திருந்து தொல்இறை உதவுவான்
செந்திமா நகர்வந்து
இருந்த ஆதியம் பண்ணவன்
அடியனேன் யானே. 91

தார கப்பெயர் இளவலைத்
தடவரை தன்னை
ஓர் இறைக்குமுன் படுத்தவேல்
அறுமுகத்து ஒருவன்
சூர் எனப்படும் நின்னிடைத்
தமியனைத் தூதாப்
பேர் அருள்திறத்து உய்த்தனன்
என்றனன் பெரியோன். 92

---

91. அதுகேட்ட வீரவாகு "ஏ அசுரா! இந்திரன் துயரத்தை நீக்கி, பிரமன் முதலிய வானவர் சிறுமையைப் போக்கி, தேவரைச் சிறையினின்றும் விடுவித்து, அன்னார்க்குப் பண்டைச் சிறப்புகளை யெல்லாம் அளிக்குமாறு ஆதி முதல்வனாகிய ஐயன் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ளான். அவ் ஆண்டவனுக்கு அடிமை செய்பவன் நான்.

92. தாரகன் என்னும் பெயர்கொண்ட நின் தம்பியையும், கிரவுஞ்சம் என்னும் பெரிய மலையையும் நொடிப் பொழுதிலே கொன்றொழித்த கொற்றவேல் தாங்கிய குமரவேள், உன்னிடம் பெருங் கருணைகொண்டு என்னைத் தூதனுப்பினான்.

வீரவாகு தூதுரைத்தல்

தாதை ஆகியோன் காசிபன்
ஆங்கவன் தனயன்
ஆதலால் உனக்கு அமரரைச்
சிறைசெய்வது அறனே
வேத மார்க்கமும் பிழைத்தனை
சிறுபொருள் விழைந்தாய்
நீதியால் உலகு அளிப்பதே
அரசர்தம் நெறியே. 93

ஆண்டு அளப்பில நோற்றனை
வேள்வி நின்று ஆற்றி
மூண்ட தீயிடை மூழ்கினுய்க்கு
எந்தைமுன் அளித்த
மாண்டி டாதபேர் ஆயுளைத்
திருவொடும் வாளா
ஈண்டோர் புன்னெறி ஆற்றியே
இழுக்குவது இயல்போ. 94

சையம் மேற்படு வளத்தொடு
நீயும் நின் தமரும்
உய்ய வேண்டுமேல் அமரர்தம்
சிறையினை ஒழித்து

---

93. வானவர்க்குத் தந்தை முறையில் உள்ளவர் காசிப முனிவர். அவர் மைந்தனாகிய நீ வானவரைச் சிறை செய்தல் முறையோ? வேதநூல் முறையினின்றும் தவறினாய்! அற்பப் பொருள்களில் ஆசை வைத்தாய்! நீதி முறையில் உலகத்தைக் காப்பதன்றோ அசுரர்க்குரிய நெறி?

94. அளவிறந்த காலம் நீ அருந்தவம் முயன்றாய்! வேள்வித் தீயில் மூழ்கிய உனக்கு எம்பெருமான் அளித்த அழியாத ஆயுளையும், செல்வத்தையும் வீணாகத் தவறான நெறியிலே சென்று கெடுத்துக்கொள்ளுதல் தகுமோ?

95. மலையினும் உயர்ந்த செல்வத்துடன் நீயும் நின் சுற்றத்தாரும் வாழவேண்டுமானால் வானவரைச் சிறையி

வையம் மேலறத்து இயல்புளி
வாழிமற்று இதனைச்
செய்யலாய் எனின் ஈங்குவந்து
அடுவனால் திண்ணம். 95

சூரன் வீரம்பேசி மறுத்தல்

மறம் அகன்றிடா வீரன் இங்கு
இனையன வகுத்தே
அறையும் வாசகம் கேட்டலும்
வெகுளிமூள் அகத்தன்
பொறி உமிழ்ந்திடு கண்ணினன்
புகையுமிழ் உயிர்ப்பன்
எறியும் அங்கையன் இறந்திடும்
முறுவலன் இசைப்பான். 96

மேலை ஆயிரத் தெட்டெனும்
அண்டமும் வென்றே
ஏலு கின்றதோர் தனியிறை
ஆகிய எனக்குக்
கோல வால்எயிறு இன்னமும்
தோன்றிலாக் குதலைப்
பாலனே கொலாம் இனையன
புந்திகள் பகர்வான். 97

னின்றும் விட்டுவிடு! அறநெறியிலே அரசு புரிந்திடு! இவ்வாறு செய்யாதொழிந்தால் குமரவேள் இங்கு எழுந்தருளி உன்னையும் உன்னைச் சார்ந்தாரையும் கொன்றழித்தல் திண்ணம்''.

96. என்று உறுதியாகக் கூறினர் முருகதூதர். அவ்வாசகத்தைக் கேட்டபோது சூரன் மனத்தில் முன்னிலும் அதிகமாகக் கோபம் மூண்டெழுந்தது; பொறிபறக்கும் கண்ணும், புகைவீசும் மூச்சும், உடைய சூரன் கையொடு கையறைந்து, கடுநகை புரிந்து பேசுவானாயினன்.

97. "அண்டங்கள் ஆயிரத்தெட்டும் வென்று இணையற்ற தனியரசு புரிந்திடும் எனக்குப் பல் முளையாத பாலன—மழலை மொழி பேசும் குழவியா—புத்தி சொல்லத் தலைப்பட்டான்.

நறைகொள் தார்முடி அவுணர்தம்
குலத்தினை நலித்து
வறுமை செய்தனர் கடவுளர்
அவர்திரு மாற்றிக்
குறிய ஏவலும் கொண்டனன்
ஒழுக்கமும் கொன்றேன்
சிறையும் வைத்தனன் எம்குடித்
தமர்முறை செய்தேன். 98

தப்பல் செய்திடும் மகபதி
முதலினோர் தமையும்
இப்ப திக்கணே கொணர்ந்தனன்
சிறைசெய இருந்தேன்
கைப்பு குச்சிறை விடுவனோ
விடுகிலன் கண்டாய்
ஒப்பரும் திறல் சூரன்என்று
ஒருபெயர் உடையேன். 99

மின்னும் வச்சிரப் படிவமும்
வேறுபல் வரமும்
முன்னோர் ஞான்றுதன் தாதைஎற்கு
அளித்திடும் முறையைப்

---

98. அசுரர் குலத்தை வானவர் வருத்தினர்கள்; அவர்களை வறியவராக்கினார்கள். ஆதலால் நான் தேவரது செல்வத்தை ஒழித்தேன்; அவரைக் குற்றேவல் கொண்டேன். அவர் தம் பழக்கவழக்கங்களைக் கெடுத்தேன். சிறைக்கோட்டத்தில் அடைத்தேன். எம் குலமுறைப்படி இவற்றையெல்லாம் செய்தேன்.

99. தப்பித் தலையறைந்துத்திரியும் இந்திரன் முதலியோரையும் பற்றிக் கொணர்ந்து இங்கு சிறைவைக்கக் கருதியுள்ளேன். அப்படியிருக்க என் கையில் அகப்பட்ட வானவரை விடுவேனோ? விடவேமாட்டேன்! ஒப்பற்றவீர சூரன் என்னும் பெயருடையேன் நான்.

100. அழியாத வச்சிர தேகமும் மற்றைய வரங்களும் முன்னமே எனக்கு முருகன் தந்தை முறையாக

பின்னர் யாவரே பெயர்ப்பவர்
பெருஞ்சமர் இயற்றி
என்னை ஆற்றலால் வென்றிடும்
நீர்மையோர் எவரே. 100

ஓதி என்பல அமரரை
விடுகிலன் உணர்ச்சி
ஏதும் இல்லதோர் மகவுதன்
புன்மொழி ஏற்றுப்
பேதை யாதலின் ஒற்றனாய்
வந்தனை பிழைத்துப்
போதி நின்னுயிர் தந்தனன்
யானெனப் புகன்றான். 101

வீரவாகு மீண்டும் கட்டுரை கூறுதல்

அகிலம் ஆள்பவன் இங்கிவை
மொழிதலும் ஐயன்
வெகுளி வெங்கனல் சிந்திட
உளம்சுட வெகுண்டு
புகையும் அங்கியும் உயிர்ப்புற
மயிர்புறம் பொடிப்ப
நகையும் வந்திடச் சிவந்திட
விழி இவை நவில்வான். 102

அளித்துள்ளார். அவற்றை யாவரோ மாற்றவல்லார்? போர்புரிந்து என்னை யாவரே வெல்ல வல்லார்?

101. பலபல சொல்வானேன்; நான் வானவரை விடமாட்டேன்; நீ பேதையாதலால் அறியாப்பிள்ளையின் சொல்லைக்கேட்டு இங்கு தூதனாக வந்தாய்! உனக்கு உயிர்ப்பிச்சை தந்தேன்; பிழைத்துப்போ'' என்றான் சூரன்.

102. அவன் சொல்லிய மொழிகளைக் கேட்டபோது முருக தூதனது உள்ளத்தில் சீற்றம் முறுகி எழுந்தது; மூச்சிலே புகையும் தீயும் முற்பட்டன; மெய்ம் மயிர் சிலிர்த்தது; சிரிப்புப் பிறந்தது; கண் சிவந்தது; அந்நிலையில் பேசலுற்றார்.

மண் அளந்திடும் மாயனும்
வனசமேல் அயனும்
எண் ணரும்பகல் தேடியும்
காணகிலா திருந்த
பண் ணவன் நுதல் விழியிடைப்
பரஞ்சுடர் உருவாய்
உண் ணிறைந்த பேரருளினல்
மதலையாய் உதித்தான். 103

முன் னவர்க்கும் முன்னுகுவோர்
தமக்கும் முற்பட்டுத்
தன்னை நேரிலாது ஈசனும்
தனிப்பெயர் தாங்கி
இன்னு யிர்க்குயி ராய் அரு
உருவமாய் எவர்க்கும்
அன்னை தாதையாய் இருந்திடும்
பரமனே அவன்காண். 104

எங்க ணும்பணி வதனங்கள்
எங்கணும் விழிகள்
எங்க ணும்திருக் கேள்விகள்
எங்கணும் கரங்கள்

---

103. "நெடுமாலும், நான் முகனும் நெடுங்காலம் தேடியும் காண ஒண்ணுத இறைவனது நெற்றிக் கண்களில் பரஞ்சுடர் உருவாய், கருணை நிறைந்த எம்பெருமான் தோன்றினர்.

104. முன்னவர்க்கும் முதல்வர்க்கும் முற்பட்ட ஆதி முதல்வராய், தன்னேரில்லாத் தலைவராய், ஈசன் என்னும் இணையற்ற பெயருடையவராய், மன்னுயிர்க்கு உயிராய், அருவமாய் உருவமாய், யாவர்க்கும் அம்மையப்பராய் அமர்ந்த பரம்பொருளே அறுமுகப் பெருமான்.

105. எங்கும் நிறைந்து அருள் செய்யும் எம்பெருமானுக்கு எங்கும் அடியார் கண்டு வணங்கும் திருமுகம்: எங்கும் திருவிழிகள்; எங்கும் திருச்செவிகள்; எங்கும்

எங்க ணும்திருக் கழலடி
எங்கணும் வடிவம்
எங்க ணும்செறிந் தருள்செயும்
அறுமுகத்து இறைக்கே. 105

அளப்ப ரும்குணத்து ஆதியாம்
எம்பிரான் அமரர்
தளைப்ப டும்சிறை மாற்றவும்
சதுர்முகன் முதலோர்
கொளப்ப டும்துயர் அகற்றவும்
கொடியரை அறுத்து
வளப்ப டும்பரிசு உலகெலாம்
போற்றவும் வந்தான். 106

நொய்ய சொற்களால் எந்தையை
இகழ்ந்தனை நொடிப்பில்
வெய்ய நாத்துமித்து இன்னுயிர்
வாங்குவம் விடுத்த
ஐயன் ஆணையன்று ஆதலின்
அளித்தனம் அதனால்
உய்தி இப்பகல் வேற்படைக்கு
உண்டியாய் உறைவோய். 107

திருக்கரங்கள்; எங்கும் வீரக்கழல் அணிந்த திருவடிகள்; எங்கும் அவர் திருவுருவமே!

106. அளவிறந்த அருங்குணம் உடைய எம் ஆதி முதல்வன் வானவர்வருந்திக்கிடக்கும்சிறையை அழிக்கவும், பிரமதேவன் முதலியோர் படும் துயரத்தை ஒழிக்கவும், கொடியவரை வேரறுத்துச் செழுமையான அறப்பயிரைக் காக்கவும் இங்கே எழுந்தருளியுள்ளார்.

107. இத்தகைய எம் ஐயனை இழிந்த சொற்களால் இகழ்ந்தாய்! நொடிப்பொழுதில் உன் தீய நாக்கை அறுத்திருப்பேன். உன்னுயிரையும் பறித்திருப்பேன். ஆண்டவன் என்னை அதற்காக அனுப்பவில்லையாதலால் உன்னை உயிரோடு விடுகின்றேன். வேற்படைக்கு இரையாக இருப்பவனே! இன்னும் ஒரு பகல் வாழ்ந்திரு.

உறுதி இன்னம் ஒன்று உரைக்குவம்
நீயும்உன் கிளையும்
இறுதி யின்றியே எஞ்சுதல்
வேண்டுமேல் இமையோர்
சிறை விடுக்குதி இகலினைத்
தவிருதி செவ்வேள்
அறை கழற்றுணை அரணம்என்று
உன்னியே அமர்தி. 108

சூரன் சீற்றமுற்றுச் சிறையிடப் பணித்தல்

என்றிவை பலப்பல
இகப்பில்பெரு மாயைக்
குன்றெறி படைக்குரிசில்
கொள்கையது இயம்பப்
புன்தொழில் படைத்துடைய
பூரியன் உணர்ந்தே
கன்றினன் உயிர்த்துஇனைய
கட்டுரைசெய் கின்றான். 109

கொஞ்சுமொழி கொண்டகுழ
விச்சிறுவன் மேலாய்
எஞ்சல்இல தோர்முதல்வ
னேயெனினும் ஆக

---

108. இன்னும் ஒருமுறை உனக்கு உறுதி கூறுகின்றேன். நீயும் நின் சுற்றமும் அழியாமல் பிழைக்கவேண்டுமானால் வானவரைச் சிறையினின்றும் விட்டுவிடு; மாறுபட்ட மனப்பான்மையைவிட்டு, முருகவேள் திருவடியே சரணம் என்று கருதி இரு'' என்று கட்டுரை கூறினார்.

109. இவ்வாறு குன்றம் எறிந்த குமரவேளின் பெருமையை வீரவாகு எடுத்துரைத்தபோது, சிறுதொழில் புரியும் அசுரன் சீற்றமுற்றான். பெருமூச்செறிந்து பேசத் தலைப்பட்டான்.

110. "மழலைமொழி பேசும் சிறுவன் யாவர்க்கும் மேலான முதல்வனேயாயினும் ஆகுக: அண்டங்கள்

அஞ்சிடுவ னோசிறிதும்
    அண்டநிலை தோறும்
விஞ்சியமர் பண்ணவர்கள்
    யாவரையும் வென்றேன். 110

கொற்றம்மிகு சூரன் இவை
    கூறிஅயல் நின்ற
அற்றம்அறு மானவருள்
    ஆயிரரை நோக்கி
ஒற்றுமைசெய் தோன் உயிர்
    ஒறுத்தல்பழி வல்லே
பற்றி இவனைச்சிறைப்
    படுத்திடுதிர் என்றான். 111

பிடிக்க வந்தவரைத் தூதன் மடித்தல்

மிடல்தகுவர் சூழ்வரலும்
    வீரன்எழுந்து அன்னோர்
முடிச்சிகை ஓராயிரமும்
    மொய்ம்பின் ஒரு கையால்
பிடித்தவுணர் மன்னன்அமர்
    பேரவை நிலத்தில்
அடித்தனன் நொடிப்பில்அவர்
    ஆவிமுழு துண்டான். 112

தோறும் சென்று அமர் புரிந்து வெற்றிபெற்ற யான் அஞ்சுவது யாதொன்றும் இல்லை''.

111. என்று கூறி, அருகே நின்ற அசுரர்களில் ஆயிரம்பேரை நோக்கி "தூதுவனாக வந்த இவனைக் கொல்லுதல் பழியாகும்; விரைவில் இவனைப் பிடித்துச் சிறையில் இடுக' எனப் பணித்தான்.

112. உடனே வல்லவர் ஆயிரவர் வீரவாகுவை வளைந்தார்; அந்நிலையில் அவர் ஆசனத்தைவிட்டு எழுந்தார். அசுரது தலைகளின் சிகையை ஒரு கரத்தாற் பிடித்து அம்மண்டபத்தரையில் அடித்தார். நொடிப்பொழுதில் அவர் உயிரைக் குடித்தார்.

எந்தைநெடு வேல்உனை
இனித்தடிதல் திண்ணம்
அந்தமுறும் முன்னம்உனது
ஐம்புலனும் வெஃக
வந்தபல துப்புரவும்
வல்லைபெரி தார்ந்தே
புந்திதெளி வாய்அமர்தி
போந்திடுவன் என்றான். 113

சீயவிறல் அண்ணல்இவை
செப்பியகல் காலை
ஆயவன் இருந்திடும்
அரித்தவிசு தானும்
மீயுற எழுந்து விசும்
பிற்றலையின் ஏகி
மாயையென ஒல்லையின்
மறைந்து படர்ந் தன்றே. 114

ஒண்ணில வெயிற்றினர்
ஓர்ஆயிரரை அட்டே
எண்ணலன் அவைக்களம்
இகந்துபடர் காலக்

---

113. பின்பு சூரனை நோக்கி "என் ஆண்டவனது நெடுவேலால் நீ மாண்டு ஒழிவாய்! அதுவரையும் ஐம்புலன்களாலும் அனுபவிக்கத் தக்க இன்பங்களையெல்லாம் ஆரத்துய்த்து அறிவுதெளிந்து இரு; நான் போய் வருகின்றேன்" என்று புறப்பட்டார்.

114. சிங்கம் போன்ற வீரன் இவ்வாறு சொல்லிச் சென்றபோது, அவர் தங்கியிருந்த அரியாசனமும், மேலே எழுந்து வானத்திற் சென்று மாயைபோல் விரைந்து மறைந்தது.

115. சூரனைச் சிறிதும் மதியாமல் ஆயிரம் அசுரர்களை அடர்த்து அவைக் களத்தைவிட்டு அகன்றார் வீரவாகு. நெருப்பை உமிழ்கின்ற கண்களால் அதைக்

கண்ணின் அழல் காலும்வகை
கண்டுபுடை யாக
நண்ணிசத மாமுகனை
நோக்கிநவில் கின்றான். 115

ஓட்டியநம் வீரரை
ஒறுத்துஅகல்வன் ஏனும்
விட்டதொரு தூதனொடு
வெஞ்சமர் இயற்றி
அட்டல்பழி யாகும்அவன்
ஆற்றலை அடக்கிக்
கட்டிவிரை வால்வரு
கெனக்கழற லோடும். 116

ஏகுசத மாமுகன்
இலக்கமற வீரர்
பாகம்வர எண்ணில்படை
பாணிமிசை பற்றி
வேகமொடு சென்றுதனி
வேலன்விடு வீர
வாகுவினை எய்தியொரு
மாற்றம்அறை கின்றான். 117

கண்டான் சூரன்: அருகே நின்ற நூறு முகம் படைத்த சதமுகன் என்னும் அசுரனை நோக்கிப் பேசலுற்றான்.

116. "(தூதுவனாகிய வந்த இவன்) நமது அணுக்கப் படையை அடித்துச் சென்றான்; செய்யத்தகாத காரியத்தைச் செய்தானாயினும் அவன் இங்கு வந்த தூதன்: ஆதலால் கொடும்போர் புரிந்து அவனைக் கொல்லுதல் பழியாகும். அவன் வீரத்தை யடக்கி விரைவிற் பிடித்துக் கொண்டு வருக" என்றான்.

117. அப்பணி தலைமேற்கொண்ட சதமுகன் நூறாயிரம் கொடிய வீரரோடும், எண்ணிறந்த படைக்கலங்களோடும் வேகமாகப் புறப்பட்டு முருக தூதனை யடைந்து வீரமொழி பேசினான்.

பிடித்த தானவத் தலைவனை அண்ணல் ஓர்
பெரும்புயம் கொடுதாக்கிப்
படித் தலைப்படத் தள்ளலும் வீழ்ந்துளான்
பதை பதைத்து எழுகாலை
அடித் தலத்தினல் உதைத்தனன் அசனியால்
அழுங்குறும் அரவம்போல்
துடிப்ப வேயுரத் தொருகழல் உறுத்தினன்
சோரிவாய் தொறும் சோர. 118

நூறு சென்னியும் இடறி ஆங்கொரு
நொடிவரைப் பின்முன் அவுணனை
ஈறு செய்தனன் அது முடித்தபின்
எல்லை யில்சினம் எய்தியே
ஆறு மாமுக வள்ளல் வாய்மை
இகழ்ந்துளான் அவை யத்தை முன்
நீறு செய்தபின் அடுவன் இந்நக
ரத்தை என்று நினைந்தனன். 119

---

118. நெருங்கிச் சென்று பற்றினன்; பிடித்த அசுரனை ஒரு தோளால் இடித்துத் தள்ளினர் வீரவாகு; மண்ணில் விழுந்தவன் உன்னி எழுந்தான். மீண்டும் முருகதூதர் அவனைக் காலால் உதைத்தார்; இடியோசை கேட்ட நாகம்போல் துடித்து விழுந்த அசுரன் வாய் வழியே குருதி பொங்க மிதித்தார்.

119. நூறு தலைகளையும் நொடிப்பொழுதில் துவைத்து அவன் உயிரை முடித்தார். பின்னர் அளவிறந்த சீற்றம்கொண்டு, "ஆறுமுகப்பெருமான் கருணையாற் சொல்லி யனுப்பிய கட்டுரையை மதியாது இகழ்ந்த சூர னது அத்தாணி மண்டபத்தை நொறுக்கிப் பின் இந்நக ரத்தையும் எரிப்பேன்" என்றெண்ணினர்.

சூரனது அத்தாணி மண்டபத்தை அழித்தல்

சுடரும் வேற்படைத் தொல்குமரேசனது
அடிகள் முன்னி அருளுடன் ஆண்டகை
படிய ளந்திடு பண்ணவன் ஆமென
நெடிய பேருருக் கொண்டுநின் றுன்அரோ. 120

எம்மை ஆளுடை எந்தைதன் தூதுவன்
செம்மை நீடு திருவுரு நோக்கியே
கைம் மறிக்கொடு கண்டனர் யாவரும்
அம்ம வோஎன அச்சமுற் றோடினர். 121

குமரி மாமதிற் கோயிலுள் போற்றியே
அமரி யோர்கள் ஒரைம்பது வெள்ளத்தர்
திமிர மேனியர் தீயுகு கண்ணினர்
சமர் இயற்றத் தலைத்தலை மண்டினர். 122

பெருத்தனன் சிறுத்தனன்
பெயர்ந்தும்வேறு பல்லுருத்
தரித்தனன் நடந்தனன்
தனித்தனி தொடர்ந்தனன்

---

120. வேற்படை தாங்கிய குமரேசனது திருவடிகளைக் குழைந்து நினைந்தார். அப்பெருமான் அருளால் உலகளந்த திருமால்போல் நெடியதோர் உருவம்கொண்டு நின்றார்.

121. எம்பெருமான் தூதுவனாகிய வீரவாகுவின் செம்மையான பெருந்திரு வடிவினை நோக்கிக் கலக்கமுற்ற அசுரர் அனைவரும் கை விரித்து 'அடே அம்மா' என்று அச்சமுற்று ஓடினர்.

122 அழிவற்ற மதில்களையுடைய அரண்மனையினுள்ளே காத்துநின்றார் ஐம்பது வெள்ளம் அசுரர்கள்! இருள்போன்ற மேனியர்; கனல் சொரியும் கண்ணினர்; அன்னார் முருக தூதனொடு போர்புரியப் புகைந்தெழுந்தார்.

123 அவர்களோடு போர்புரிய முற்பட்ட முருக தூதர் பெருத்தார்; சிறுத்தார்; பல வடிவம் தரித்தார்:

மருத்தெனக் கறங்கினன்
வளைந்தனன் கிளர்ந்தனன்
ஒருத்தன் வெள்ளம் ஐம்பதும்
உலக்குறக் கலக்கினான். 123

ஆசுறும் அவுண வெள்ளம்
ஐம்பதும் முடித்தோன் ஐஞ்ஞூறு
யோசனை அளவை ஆன்றே
ஓராயிரம் உம்பர் ஏகித்
தேசுறும் மேரு என்னச்
சிகரம் ஓர் இலக்கம் சூடி
வீசுபொன் சுடர நின்ற
வேரம்ஒன்று அங்கண் கண்டான். 124

புறத்திருள் இரிய வைகும்
பொலஞ்சுடர்ப் பொன்செய் வேரம்
திறத்தியல் கோயில் முன்னம்
சேர்ந்தது தன்னை வீரன்
பறித்தொரு கரத்தின் ஏந்திப்
பதகனும் சூர பன்மன்
அறத்தியல் இழுக்கி வைகும்
அவைக்களம் வீசி ஆர்த்தான். 125

ஒவ்வொருவரையும் தொடர்ந்து நடந்தார். காற்றுப் போல் சுழன்றார்; வளைந்தார்; எழுந்தார்; ஐம்பது வெள்ளத்தையும் கலக்கி அழித்தார்!

124. பின்னர், ஐந்நூறு யோசனை அகலமும், ஆயிரம் யோசனை உயரமும் உள்ளதாய், பொன்னொளி வீசும் மேருமலைபோல் பன்னெடும் சிகரங்களையுடையதாய் நின்ற வேரம் ஒன்று அங்கு விளங்கக் கண்டார்.

125 அரண்மனையின் எதிரே அழகிய பொன்னொளி வீசி நின்ற அவ்வேரத்தைப் பறித்து ஒரு கரத்தில் எடுத்தார் வீரவாகு: அறம் திறம்பிய அசுர மன்னன் வீற்றிருக்கும் அத்தாணி மண்டபத்தின்மீது அதனை வீசி எறிந்தார்.

நெக்கது பொதியில் ஆக
நிகழ்ந்தது செம்பொற் பூழி
திக்கொடு புவியும் வானும்
செறிந்தனர் அவுணர் ஆகித்
தொக்கனர் உடைந்து மாய்ந்து
தொகைபிரிந் தழிந்தார் தொல்லைத்
தக்கனின் உணர்வு தீர்ந்த
தகுவர்கோன் இவற்றைக் கண்டான். 126

தூதுவனைப் பிடித்துவரப் பணித்தல்

ஆயிர நாமத்து அண்ணல்
அனையவன் வன்மை காணு
ஆயிரம் வடவை யேபோல்
அழன்றுதன் அயலின் நின்ற
ஆயிரம் நெடுந்தோள் ஐஞ்ஞூறு
ஆனனம் கொண்ட தீயோர்
ஆயிரர் தம்மை நோக்கி
அடலுரும் ஏற்றிற் சொல்வான். 127

கோறலே கொற்றம் அன்றால்
ஒற்றனைக் குறுகி நீவிர்
மாறுபோர் இயற்றி யேனும்
மற்றவன் வழாத வாற்றால்

---

126 அம்மண்டபம் இடிந்து விழுந்தது; அங்கெழுந்த தூசி விண்ணும் மண்ணும் நிறைந்தது; எட்டுத் திக்கிலும் செறிந்தது. அசுரக்கூட்டம் உடைந்து கலைந்து ஒழிந்தது. தக்கனைப்போல் அறிவிழந்த சூரன் இவற்றைக் கண்ணுற்றான்.

127 ஆயிரம் திருநாமமுடைய இறைவனுக்கு நிகரான ஆற்றல் படைத்த முருக தூதனைக்கண்டு ஊழித் தீப்போல் உள்ளம் கொதித்தான். பலபல தோள்களும் முகமும்படைத்த ஆயிரம் அசுரரை நோக்கி இடிபோல் வெடிபட முழங்கினான்.

128 "தூதனைக் கொல்லுதல் கொற்றமன்று. அவனை எதிர்த்துப் போர்புரிந்தேனும் பற்றுக. தப்பிப்

ஈறுசெய் திடாது பற்றி
எம்முனர்த் தருதிர் மெய்யின்
ஊறுசெய்து அவனை வானோர்
உடன்சிறை உய்ப்பன் என்றான். 128

அசுரர் வீரவாகுவொடு போர் செய்தல்

ஓலம் உடைக்கடல் உமிழ்கின்ற
நீல விடத்தினை நிகர்மெய்யார்
மாலை யுடைப்பல வட வைத்தீக்
கோலம் எனச்சிகை கொண்டுற்றார். 129

தொடுத்தனர்கள் வார்கணைகள் தொட்டனர்கள் வைவேல்
எடுத்தபல தோமரம் எறிந்தனர்கள் ஆலம்
விடுத்தனர்கள் முத்தலை வியன்கழுமுள் உய்த்தார்
அடற்குலிசம் வீசினர்கள் ஆழிகள் துரந்தார். 130

இனைய பற்பல நிகழ்ந்திட
இணையிலா ஒருவன்
தினையின் வேலையில் ஆயிரம்
புயமுடைத் திறலோர்

போகாமல் இங்கு கொண்டு வந்திடுக. அவன் மேனியை வடுப்படுத்தி வானவரோடு சிறையில் வைப்பேன்." என்றான்.

129 அலைகடலில் எழுந்த ஆலகாலம் போன்ற மேனியும், ஊழித் தீயின் கொழுந்துபோன்ற சிகையும் உடைய அசுரர்கள்,

130 பெரிய வீரவாகுவின் மீது, அம்பு தொடுத்தார்கள்; கூரிய வேல்களை விடுத்தார்கள்; இருப்புத் தடிகளை எறிந்தார்கள்; நச்சுப் படைகளை வீசினார்கள்; சூலப் படைகளைச் செலுத்தினார்கள்; வச்சிரப் படையும் நேமிப் படையும் விட்டார்கள்.

131 இவ்வண்ணம் கடும்போர் நிகழும்பொழுது இணையற்ற முருக தூதர் சிறிது நேரத்தில், ஆயிரம் தோளுடைய வீரர் (சகத்திர வாகுகள்) அனைவரையும்

அனைவர் தம்மையும் பல்துணி
 படுந்திறன் அட்டுத்
தனிமை தன்னொடும் நின்றனன்
 அமர்க்களம் தன்னில். 131

உமை அளித்திடு சிறுமகன்
 தூதுவன் ஒருவன்
எமது முன்னம் வந்து அவமதி
 செய்தனன் ஏகி
அமரில் யாரையும் அட்டு நின்று
 இன்னமும் அகலான்
எமது கொற்றமும் நன்றுநன்றால்
 என நகைத்தான். 132

மூச்சகம் புகழ் அவுணர்கோன்
 முனிவினை முன்னி
அச்செனக் கிளர்ந்து எழுந்து சென்று
 அவனடி வணங்கி
மெய்ச் சிரங்கள் ஓர் ஐயிரு
 திறலுடை விறல்சேர்
வச்சிரத் திரு மொய்ம்புடைக்
 காதலன் வகுப்பான். 133

(ஒரு மரா மரத்தால்) சிதைத்து நொறுக்கித் தனியராய் அமர்க்களத்தில் நின்றார்.

132. அதையறிந்த சூரன் "சரி, சரி; உமையவள் பெற்ற பாலன் விடுத்த தூதன் ஒருவன், எம்முன் வந்து ஏளனம் செய்தான்; புறத்தே போந்து போரில் எதிர்த்தவரை யெல்லாம் அழித்தான்; இன்னும் போகாமல் நிற்கின்றான்; நமது வீரம் அழகு அழகு" என்று நகைத்தான்.

133 மூன்றுலகும் புகழ்பெற்ற சூரன் சீற்றத்தைக் கண்டு தரியாத வச்சிரவாகு என்னும் மைந்தன் கிளர்ந்து எழுந்தான்: பத்துத் தலையும் வச்சிரமேனியும் வாய்ந்த அவ்வீரன் மன்னன் அடிபணிந்து,

நொய்ய தூதுவன் பொருட்டினுல்
இத்திறம் நுவறல்
ஐய கேட்க நிற்கு இயலுமே
இறை இவண் அமர்தி
மொய்யில் யான் சென்று மற்றவன்
பெருமுரண் முருக்கிக்
கைய கப்படுத்து உய்ப்பனுல்
அன்னது காண்டி. 134

என்ன லோடும் இறப்பெதிர் உற்றிடா
மன்னன் மைந்தனை நோக்கி மகிழ்வுறு
அன்ன தன்மையை ஆற்றுதி நீயெனப்
பன்னி ஏகும் படிபணித் தான்அரோ. 135

வண்டு உலாம் தொடை வச்சிர வாகுதன்
தண்ட மோடு சமர்க்களம் சேர்தலும்
அண்டர் நாயகன் தூதுவன் அன்னவை
கண்டு நின்று கழறுதல் மேயினன். 136

இந்திர ஞால வையத்து
இறைவனே அல்லன் மற்றை
மைந்தரில் ஒருவன் ஆகும்
வருபவன் வருவான் தன்னை

---

134 "ஐயனே! அற்பத் தூதுவன் பொருட்டு இப்படி வருந்தலாமோ? நொடிப் பொழுதில் நான் சென்று அன்னான் வலிமையை அழித்து அவனைப் பிடித்து வந்து உம் முன்னே விடுவேன்"

135 என்றான். அப்போது சூரன் மைந்தனை நோக்கி மகிழ்ந்தான்; "அப்படியே செய்க" எனப் பணித்தான்.

136 மாலையணிந்த வச்சிரவாகு தன் சேனையோடு போர்க்களம் புகுந்தான்; அவனைப் பார்த்தபோது முருக தூதர்,

137 "இவன் இந்திரஞாலத் தேருடைய சூரன் அல்லன்; அவன் மைந்தருள் ஒருவனே யாகும். இவனைச்

முந்திய தானையோடு
முரணற முருக்கி வீட்டி
அந்திவான் புகுமுன் எந்தை
அடிதொழப் போவன் என்றான். 137

ஆங்கதோர் பொழுதினில் அவுணருக் கிறைமகன்
பாங்கராய் வந்திடும் பல்பெருங் குமரரும்
ஓங்குநாற் படையொடும் ஒருவனைச் சுற்றியே
தாங்குபல் படையினால் சமர்முயன் றாற்றினர். 138

என்னும் முன்னரே வச்சிர
வாகுஎன்று இசைக்கும்
மன்னன் மாமகன் தனதுகைக்
கார்முகம் வாங்கிப்
பொன்னின் நாணொலி கொண்டோர்
ஆயிரங்கணை பூட்டி
மின்னு லாம்தனி வேலவன்
தூதன்மேல் விடுத்தான். 139

ஏந்து கார்முகம் தனைமுறித்
திடுதலும் எரியின்
காந்து கண்ணுடை வச்சிர
மொய்ம்பன்ஓர் கரத்தின்

சேனையோடு சிதைத்து அழித்து, அந்திமாலை வந்தெய்து முன்னமே, எம்பெருமான் திருவடியை வணங்கச் செல்வேன்'' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

138 அவ்வேளையில் வச்சிரவாகுவின் உடன் வந்த பெருங்குல மைந்தரும், பரந்த நாற்படையும் முருகதூதனை வளைந்து படைக்கலம் தொடுத்துப் போர் விளைத்தார்கள்.

139 அதற்குள்ளே, வச்சிரவாகு தன் வில்லை வளைத்து, நாணொலி எழுப்பி, ஆயிரம் அம்புகளைப் பூட்டி முருகதூதன்மேல் விடுத்தான்.

140 அவன் எடுத்த வில்லைப் பிடித்து முறித்தார் வீரவாகு; அதுகண்ட சூரன் மைந்தன், வாளெடுத்துப்

வாய்ந்த வாள்கொடே எதிர்தலும்
தன்னுடை மருங்கின்
நாந்த கந்தனை உறைகழித்து
அறிவன்மேல் நடந்தான். 140

எந்தைதன் தூதுவன் எறிந்த வாளினால்
ஐந்திரு சென்னியும் அற்று வீழ்தலும்
மைந்தியல் வச்சிர வாகு வாகிய
வெந்திறல் அவுணர்கோன் வீடினனரோ. 141

ஏலவெம் போர்செய எவரும் வந்திலர்
ஞாலம தவிர்ஒளி நடாத்தும் ஞாயிறும்
மேல்கடல் நீந்தினன் விரையப் போயினன்
மாலையும் அவ்விடை வந்து நேர்ந்ததே. 142

புடை அகல் மகேந்திர
புரத்தை நீத்தபின்
விடைபொரு வலியினன்
விண்ணின் பால்எழீஇ
முடுகினன் வழிக்கொடு
முருகன் போற்றியே
வடதிசை இலங்கையின்
வரைப்பு நண்ணினன். 143

போர் செய்யத் தொடங்கினன். அப்போது வீரவாகுவும் தமது வாளெடுத்து எதிரே சென்றார்.

141. அவர் வீசிய வாள் அசுரனது பத்துத் தலையையும் அறுத்துத் தள்ளிற்று; அங்நிலையில் அவன் இறந்துபட்டான்.

142. பின்பு போர் செய்ய வருவார் எவருமில்லை. பகலவன் மேற்றிசையில் மூழ்கினன். அந்தி மாலையும் வந்து சேர்ந்தது.

143 மகேந்திர நகரை விட்டு நீங்கினர் முருகதூதர்; ஆகாய வழியே விரைந்து எழுந்து, முருகன் கருணையைப் போற்றி, வடதிசையிலுள்ள இலங்கையினருகே வந்தடைந்தார்.

இலங்கையில் யாளிமுகனை வதைத்தல்

மீளில் சினத்ததி வேகக்
கோளரி யைத்தரு கொடியோன்
யாளி முகத்தவன் என்போன்
வாள்வயம் உற்றிடு வலியோன். 144

காண்டிஎன் கடிமுறை கடந்து மைந்தனை
ஈண்டுயிர் வவ்விய இறைவன் ஊர்புகா
மீண்டிடு கள்வன்இவ் வீரம் தன்னோடே
மாண்டிட அடுகுவன் வன்மையால்என்றான். 145

அறுகு மாமுகத் தண்ணல் ஆற்றவும்
கறுவு பெற்றிடும் கருத்தின் வீரனைக்
குறுகி ஆயிரம் கொண்ட கைகளால்
இறுதி ஊழிநாள் இடியின் எற்றினான். 146

அடித்த கைகளை அங்கை ஒன்றினால்
பிடித்து மேலவன் பெருங்கை வாளினால்
உடைத்த சோரிநீர் உகுத்து வீழ்ந்திறை
துடித்தி டுப்படி துண்டம் ஆக்கினான். 147

---

144 அவர் வருவதைக் கண்டான் யாளிமுகன்; அவன் வாட்போரில் வீரன்; முன்னே முருகதூதன் கையால் இறந்த அதிவீரனைப் பெற்ற தந்தை. அவன் வீரவாகுவை நோக்கிக் கொதிப்புற்றான்.

145 "இவன் முன்னொரு முறை என் காவலில் அமைந்த இந்நகரத்தைக் கடந்தான்; என் மகனுயிரைக் கவர்ந்தான்: மகேந்திரம் சென்று மீண்டு வருகின்றான். இக்கள்வனைக் கொன்று ஒழிப்பேன்" என்றான்.

146 இவ்வாறு உள்ளத்திலே கறுவிக்கொண்டு யாளிமுகன் முருகதூதன் அருகே சென்றான். தன் ஆயிரம் கைகளாலும் அவரை அறைந்தான்.

147 அடுத்த கைகளை அவர் ஒரு கையாற் பிடித்தார். அவற்றை வாளால் அறுத்தெறிந்தார்.

இமைக்கும் எல்லையில் எய்தும் கூற்றினை
அழைக்கு மாறென ஆர்த்துத் தானவன்
தழைக்கும் மொய்ம்பினன் தன்னைப் பற்றுவான்
புழைக்கை முற்றவும் பொள்ளென் றுய்த்தனன். 148

உய்த்த காலையின் ஒருதன் வாளினால்
எய்த்த வன்மைசேர் யாளி மாமுகன்
பத்து நூறெனப் பட்ட சென்னியும்
கொத்தொ டேவிழக் குறைத்திட் டானரோ. 149

முருகப்பெருமானிடம் போந்து நிகழ்ந்த துரைத்தல்

இந்தி ரத்திரு இலங்கை நீங்கியே
அந்தி ரைக்கடல் அழுவம் வாவியே
கந்த மாதனம் கவின்ற வேலைசேர்
செந்தி மாநகர் சென்று புக்கனன். 150

உள்ளம் என்புடன் உருகத் தூயநீர்
வெள்ளம் கண்ணுற விதிர்ப்பு மேவரப்
பொள்ளெனப் புரம் பொடிப்பச் சூரடும்
வள்ளல் சேவடி வணங்கி னனரோ. 151

---

148. அப்போது அசுரன் கூற்றுவனை அழைப்பான் போலப் பெருங் கூச்சல் இட்டான். வீரவாகுவைப் பிடிப்பதற்குத் தன் துதிக்கைகளை யெல்லாம் விரைவாக நீட்டினான்.

149. அவன் பெற்ற ஆயிரந் தலைகளும் அற்று வீழுமாறு தன் ஒப்பற்ற வாளை வீசி உயிரைப் போக்கினார் முருகதூதர்.

150. இந்திர செல்வத்தையுடைய இலங்கையை விட்டு நீங்கி, பெருங்கடல் கடந்து, கந்தமாதன மலை சேர்ந்த கரையிலுள்ள திருச்செந்தூரை அடைந்தார்.

151. அன்பினால் என்பும் மனமும் உருக, கண்களில் ஆனந்த வெள்ளம் பெருக, மெய்யரும்பி விதிர்விதிர்க்க, முருக வள்ளலின் சேவடியை வணங்கி,

வீரன் கூறுவான் விமல நின்மொழி
சூரன் முன்புபோய்ச் சொல்ல விண்ணுளோர்
ஆரி ரும்சிறை அதனை வீடலே
காரி யம்மெனக் கருத்திற் கொண்டிலன். 152

கெடல ரும்சுரர் கிளையை வெஞ்சிறை
விடுகி லேன்என வெகுண்டு கூறினன்
அடிகள் அன்னதால் ஆண்டு நீங்கியே
கடிது வந்தனன் கருமமீ தென்றான். 153

என்ற காலையின் யாண்டும் ஆகியே
நின்று முன்னொருங் குணர்ந்த நீர்மையான்
உன்தன் செய்கையுள் ஒன்றும் சொற்றிலை
நன்று மற்றது நவில்தியால் என்றான். 154

தொடக்க முற்றுவாழ் சூரன் மாநகர்
அடுத்த காலையின் அகன்ற வேலையில்
தடுத்து ளோரைநின் சரண வன்மையால்
படுத்து வந்தனன் பான்மைஈ தென்றான். 155

---

152. "ஐயனே! நீர் பணித்தருளிய மொழியைச் சூரன் முன்னே சென்று சொன்னேன். அவன் வானவரைச் சிறையினின்று விடுவித்தல் முறையான செயல் என்று கருதினானில்லை.

153. வானவர் குலத்தை விடமாட்டேன் என வெகுண்டு கூறினான். அடியேன் அவ்விடம் விட்டு நீங்கி இங்கு விரைந்து வந்தடைந்தேன். இதுவே நடந்த செயல்" என்றார்.

154. அப்போது எங்கும் நிறைந்து எல்லாம் அறியும் தன்மை வாய்ந்த முருகன், 'அன்பனே! நீ செய்த தொன்றும் சொல்லவில்லையே! அதைச் சொல்" என்று அருளினார்.

155. "எம்பெருமானே! சூரன் நகரத்திற்குத் தூது செல்லும்போதும், திரும்பி வரும்போதும் என்னைத் தடுத்தோரை யெல்லாம் உமது திருவடித் திறத்தால் முடித்து விட்டேன். நடந்தது இதுவே" என்று கூறினார்.

வீதலே அவன் விதிய தாதலின்
தீதில் விண்ணவர் சிறைவி டோம்என
ஓதி ஞன் அவன் உயர்வு நீக்குவான்
போதும் நாளையாம் எனப் புகன்றனன். 156

ஆறு மாமுகத் தையன் இவ்வகை
கூறக் கேட்டுளோர் கொடிய சூர்மிசைச்
சேறும் என்றசொல் தெளிவில் நம்துயர்
மாறிற் றென்றனர் மகிழ்ச்சி எய்தினர். 157

புதுக்கி அமைத்த நகரில் சூரன் அமர்தல்

கொற்றவன் இனைய மாற்றம் கூறலும்
உழையர் கேளா
இற்றிது செய்து மென்னு இசைவுகொண்
டொல்லை யேகி
மற்றையண் டத்திற் சென்று வானவர்
முதுவன் தன்னைப்
பற்றிலர் கொணர்ந்தார் தங்கோன்
பணித்திடு பரிசு கூறி. 158

---

156. "சாதலே அவன் விதி; ஆதலால் வானவரைச் சிறைவிடேன் என்ருன். அவன் செருக்கை யழிக்க நாளையே செல்வோம்"

157. என்று அறுமுகப் பெருமான் கூறக் கேட்ட பொழுது அங்கிருந்தோர் எல்லாம் 'நம் துயர் ஒழிந்தது' என்று மகிழ்வுற்ருர்.

158. (முருகதூதனுல் அழிந்த நகரத்தைச் செப்பனிடும் பொருட்டுச்) சூரனது சேவகர்கள் மற்ருேர் அண்டத்தில் இருந்த பிரமதேவனைக் கொணர்ந்து மன்னன் முன்னே நிறுத்திஞர்கள். (சூரன் அவனை முறையாகப் பார்த்து, 'சீர் அழிந்த இத் திருநகரை முன்போல் ஆக்கித் தரல் வேண்டும்' எனப் பணித்தான்.)

பொன்மதில் மாட வீதி
பொலன்மணிச் சிகரம் வேரம்
மன்மதன் விழையும் சோலை
மண்டபம் வாவி பொய்கை
சென்மலி அரங்கம் மன்றம்
தெற்றியே முதலை எல்லாம்
தொன்மைபோல் ஆகத் தன்கைத்
தொழில்முறை படைத்தான் மன்னோ. 159

கொன்பெரு நகரும் அந்தண்
கோயிலும் படைத்த லோடும்
மன்பெருந் தகைய சூரன்
மற்றவன் செய்கை நோக்கி
அன்புசெய்து உவகை யாகி
அவுணர்கள் யாரும் போற்ற
முன்புபோல் அரிமான் ஏற்று
முழுமணித் தவிசின் உற்ருன். 160

அந்நகல் அமையம் தன்னில்
அவுணர்கோன் ஏவல் போற்றி
முந்துசெல் ஒற்றர் ஆனோர்
மூரிநீர்க் கடலை வாவிச்

---

159. பொன் மதிலும் மாடவீதிகளும், கூடகோபுரங்களும், வேரமும், இன்பப் பூஞ்சோலைகளும், மண்டபங்களும், தடாகங்களும், வானளாவிய மேடைகளும் மன்றங்களும் பிறவும் முன்னிருந்த வண்ணமே படைத்தான் பிரமன்.

160. புதிதாக அமைந்த நகரத்தையும் மாளிகையையும் நோக்கினான் சூரன். படைத்தவன் கைவண்ணம் கண்டு மகிழ்ந்து பாராட்டினுன்; முன்போலவே அசுரர் போற்ற அரியாசனத்தில் அமர்ந்தான்.

161. அவன் ஆணையேற்று மூந்நீர்க் கடல் கடந்து செந்திற்பதியில் கந்தன் படையும் பிறவும் உணர்ந்துவந்த

செந்தியிற் சென்று கந்தன்
சேனையும் பிறவும் தேர்ந்து
வந்தனர் விரைவின் அங்கண்
மன்னனை வணங்கிச் சொல்வார். 161

சரதம்ஈது அவுணர் கோவே
தாரக வீரன் தன்னைக்
கரையறு மாயை போற்றும்
காமரு பிறங்கல் தன்னை
இருபிள வாக வேலால்
எறிந்தனன் ஈறு செய்து
திரைபொரும் அளக்கர் வேலைச்
செந்திமா நகரின் உற்றான். 162

செங்கதிர் அயில்வேல் மைந்தன்
தெண்திரைப் புணரி வாவிப்
பொங்குவெங் கணங்க ளோடும்
போர்ப்படை வீர ரோடும்
இங்குவந்து ஆடல் செய்வான்
எண்ணினன் இருந்தான் ஈது
சங்கையென்று உன்னல் வாய்மை
தகுவன உணர்தி என்றார். 163

ஒற்றர்கள் அந்த வேளையில் அவன் முன்னே போந்து வணங்கி,

162. "அரசே! தாரக வீரனைக் கொன்று, மாயா கிரியாகிய கிரவுஞ்ச மலையை வேற்படையால் இருகூறாகப் பிளந்து ஒழித்து, முருகன் கடற்கரையில் உள்ள செந்தியம்பதியில் வந்துள்ளான். இது உண்மை.

163. வேலேந்திய அப்பாலன் பொங்கியெழுகின்ற பூதகணங்களோடும், வெம்படை தாங்கிய வீரர்களோடும் கடல் கடந்து இங்கு வந்து போர்புரியக் கருதியுள்ளான். இதில் ஐயம் கொள்ளவேண்டாம். ஆவன அறிந்து செய்க" என்று கூறினர்,

ஒற்றர்சொல் வினவி மன்னன்
ஒருதனி இளவல் தன்னை
அற்றமில் கேள்வி சான்ற
அமைச்சரை மைந்தர் தம்மை
சுற்றமொடு அமைந்த தானைத்
தொல்பெருந் தலைமை யோரை
மற்றொரு கணத்தின் முன்னர்
மரபொடு கொணரு வித்தான். 164

சூரன் சபையிற் பேசுதல்

ஆங்கவர் யாவரும் அவுணர் மன்னவன்
பூங்கழல் கைத்தொழூஉப் புடையின் வைகலும்
தீங்கனல் சுடுவதோர் சீற்றம் உள்ளெழ
வீங்கிய உயிர்ப்பினன் விளம்பல் மேயினான். 165

அழிந்ததித் திருநகர் அளப்பில் தானைகள்
கழிந்தன செறிந்தது களேப ரத்தொகை
கிழிந்தது பாரகம் கெழீஇய சோரியாறு
ஒழிந்ததென் ஆணையும் உயர்வும் தீர்ந்ததால். 166

---

164. அம்மொழி கேட்ட மன்னன், ஒப்பற்ற தம்பியாகிய சிங்கமுகனையும், அறிவு நலம் வாய்ந்த அமைச்சரையும், பானுகோபன் முதலிய மைந்தரையும், உற்ற துணையாய சுற்றத்தாரையும், சேனைப் பெருந்தலைவரையும், ஒரு கணப்பொழுதில் வரவழைத்தான்.

165. அவர்கள் மன்னன் அடி பணிந்து அருகே இருந்தனர்; சூரன் உள்ளத்தில் நெருப்புப் போன்ற சீற்றம் நிறைந்து எழுந்தது. பெருமூச்செறிந்து பேசுவானாயினன்.

166. "இத் திருநகர் அழிந்தது; அளவிறந்த சேனை இறந்தது; எலும்பு எங்கும் குவிந்தது; மாநிலம் கிழிந்தது; குருதியாறு பெருகிற்று; என் ஆணை ஒழிந்தது; மேன்மையும் தீர்ந்தது.

ஒற்றென வந்தஅவ் ஒருவன் தன்னையும்
பற்றிவெஞ் சிறையிடைப் படுத்தினேன்அலேன்
செற்றிலன் ஊறதே எனினும் செய்திலேன்
எற்றினி வசையுரைக் கீறு கூறுகேன். 167

கார்பொரு மிடற்றவன் காதல் மாமகன்
வாரிதி கடந்திவண் வந்து நம்மொடும்
போர்பொர நினைகுவான் போலும் இவ்வெலாம்
சாரணர் மொழிந்தனர் சரதம் ஆகுமால். 168

ஆதலின் வினவினன் யானும் ஆற்றுதல்
ஈதென உரைத்திரால் என்று மன்னவன்
ஓதினன் அன்னதை உணர்ந்து கைதொழூஉ
மேதியம் பெயரினான் இவை விளம்பினான். 169

மந்திரி மேதியன் பேசுதல்

மேலுயர் மாயைகள் விளைக்கும் வெற்பினை
மாலினை வென்றநின் வலிய தம்பியை
ஏலவொர் கணத்தின்முன் எறிந்த வீரனைப்
பாலன்என் றுரைப்பதும் உணர்வின் பாலதோ. 170

---

167. தூதனாக வந்த ஒருவனைப் பற்றிச் சிறையில் அடைத்தேன் அல்லேன்! முடித்தேன் அல்லேன்; வடுப் படுத்தினேன் அல்லேன். எல்லையற்ற வசைக்கு ஆளாயினேன்.

168. இன்னும் நீலகண்டர் தந்த பாலகன் கடல் கடந்து இங்கு வந்து நம்மோடு போர் நிகழ்த்தக் கருதினான். இவற்றை இவ்வொற்றர் வாயிலாக அறிந்தேன். இது உண்மையே.

169. ஆதலால் நாம் செய்யத் தக்கதென்ன என்று உங்களைக் கேட்கின்றேன். உரைப்பீராக" என்று மன்னன் கூறினான். அதுகேட்டு அமைச்சருள் ஒருவனான மேதியன், அரசனை வணங்கி,

170. "ஐயனே! மாயம் புரியவல்ல மலையையும் திருமாலை வென்ற உமது வீரத் தம்பியையும் நொடிப் பொழுதில் அழித்த வீரனைப் பாலன் என்று பேசுதல் பேதைமையன்றோ?

உனதனி இளவலும் ஒருநின் ஓங்கலும்
பொன்றிய காலையே புராரி மைந்தன்மேல்
சென்றிலை அல்லதுன் சேனை தூண்டியும்
வென்றிலை தாழ்த்திவண் வறிது மேவினாய். 171

ஆயது பிறஇலை அவுணர் தம்மொடும்
மேயின படையொடும் விரைந்து கண்ணுதல்
சேயினை வளைந்தமர் செய்யப் போதியால்
நீயினித் தாழ்க்கலை நெருநல் போலவே. 172

மற்றைய மந்திரிகள் பேசுதல்

என்றிவை மேதியன் இசைப்பக் கேட்டலும்
நன்றிது வாமென நவின்று கையெறிந்து
ஒன்றிய முறுவலும் உதிப்ப நல்லறம்
கொன்றிடு துர்க்குணன் இனைய கூறுவான். 173

இறுதியில் ஆயுளும் இலங்கும் ஆழியும்
மறுவிலா வெறுக்கையும் வலியும் வீரமும்
பிறவுள திறங்களும் தவத்திற் பெற்றனை
சிறுவனோ டேஅமர் செய்தற் கேகொலாம். 174

---

171. ஒப்பற்ற தம்பியும் மலையும் அழிந்தபோதே சிவகுமாரன்மீது செல்லாதிருந்தீர்! சேனையையேனும் அனுப்பி அவனை வெல்லாதிருந்தீர்! இத்துணைக் காலமும் வீணாகக் கழித்தீர்.

172. கழிந்ததைக் குறித்துக் கவலையுறுதலாற் பயன் இல்லை. இன்றேனும் அசுரப் படையோடு முருகனை வளைத்துப் போர்செய்ய விரைந்து எழுக; நேற்றுப்போல் இன்றும் காலம் தாழ்க்கலாகாது".

173. என்று மேதியன் சொல்லி முடித்தான். அது கேட்ட துர்க்குணன் என்னும் அமைச்சன் 'நன்று நன்று' என்று கைகளை உதறிக் கிறி முறுவல் செய்து,

174. "அரசே! நீ தவஞ் செய்து எல்லையற்ற ஆயுளும், இலங்கும் ஆழியும், மாசற்ற செல்வமும் மனத் திட்பமும், வீரமும் வேறுள்ள வலிமையும் பெற்றாய்! இவையெல்லாம் பாலனொடு போர் செய்யத்தானோ?

இன்றுநின் பெரும்படைக் கிறைவர் யாரையும்
சென்றிட விடுக்குதி சிறிது போழ்தினில்
குன்றெறி பகைவனைக் கூளி தம்மொடும்
வென்றிவண் மீள்குவர் வினையம் ஈதென்றான். 175

கருதிடு துர்க்குணக் கயவன் இன்னன
உரைதரு முடிவினில் ஒழிக இங்கெனக்
கருமணி ஆழியங் கைய மைத்தரோ
தருமவெம் பகையுடை அமைச்சன் சாற்றுவான். 176

கீள்கொடு நகங்கொடு கிள்ளும் ஒன்றினை
வாள்கொடு தடியுமோ வன்மை சான்றதோர்
ஆள்கொடு முடித்திடும் அவ்வரை வென்றிட
நீள்கொடு மரங்கொடு நீயும் சேறியோ. 177

பலஇனி மொழிவதென் படியில் தானவத்
தலைவரில் ஒருவனை விளித்துத் தானையோடு
இலைஅயில் முருகன்மேல் ஏவு வாய்எனின்
அலைவுசெய்து ஒல்லையின் அடல்பெற் றேகுவான். ()

---

175. பெரும் படைத் தலைவரைப் போர் செய்ய விடு. சிறிது நேரத்தில் பகைவனையும் பூத கணங்களையும் வென்று வருவர். இதுவே உபாயம்" என்றான்.

176. 'போதும் போதும்' என்று அவனை மோதிரக் கையால் அமைத்துத் தருமகோபன் என்னும் அமைச்சன் எழுந்தான்.

177. 'ஐயனே! நகத்தால் கிள்ளி எறியத் தக்கதை வாளால் வெட்டுவாருண்டோ? வலிமை சான்ற ஒருவனைக் கொண்டு முடிக்கத் தக்க பகைவரை நோக்கி வில்லெடுத்து நீயே செல்வாயோ?

178. பலவாறாகச் சொல்வதிற் பயன் என்ன? ஒப்பற்ற அசுர வீரர்களில் ஒருவனை வேற்படையுடைய மாற்றான்மீது அனுப்புவாயாயின் அவனே விரைவில் வென்று வருவான்.

அன்னது செய்கென அறத்தைச் சீறுவான்
சொன்னதோர் இறுதியில் முறுவல் தோன்றிடக்
கன்னிகர் மொய்ம்புடைக் காலசித்தெனும்
கொன்னவில் வேலினன் இனைய கூறுவான். 179

அண்டர்கள் ஒடுங்கினர் அரக்கர் அஞ்சினர்
எண்திசைக் கிழவரும் ஏவல் ஆற்றுவார்
மண்டமர் அவுணரின் வலியர் பூதராம்
கண்டனம் இன்றுயாம் கலியின் வண்ணமே. 180

பணிக்குதி தமியனைப் பரமன் மைந்தனைக்
கணத்தொகை வீரரைக் கால பாசத்தால்
பிணித்திவண் வருகுவன் என்று பேசலும்
துணுக்கெனச் சண்டன்என் றொருவன் சொல்லுவான். 181

ஏவுதி தமியனை இமைப்பிற் சென்றுயான்
மூவர்கள் காப்பினும் முரணில் தாக்கியே
தூவுறு சாரதத் தொகுதி தன்னொடும்
மேலவன் தனை இவண் வென்று மீள்வனால். 182

---

179. அவ்வாறே செய்க" என்றான். அவன் முடித்தவுடன் கல்லையொத்த தோள்களையுடைய காலசித்தன் எழுந்தான். சிரித்த முகத்தினனாய்,

180. "அண்ணலே! அசுரர் திறக்கண்டு அமரர் ஒடுங்கினர்; அரக்கர் அஞ்சினர்; எட்டுத்திசைப் பாலரும் ஏவல் புரிகின்றார்; இன்று அசுரரைவிடப் பூதர் வலியவராம். இது என்ன கலிகாலத்தின் கோலமா?

181. ஐயனே! என்னைப் போகவிடுக; கந்தனையும் பூத கண வீரரையும் கால பாசத்தாற் கட்டி இங்கு கொண்டு வருவேன்" என்று கூறினான். அந்நிலையில் சுருக்கென்று சண்டன் எழுந்து,

182. "அரசே என்னை அனுப்பினால் மும்மூர்த்திகள் தடுத்தாலும் முனைந்து தாக்கி, முருகனையும் அவன் படையையும் வென்று வருவேன்" என்றான்.

பானுகோபன் பேசுதல்

இன்னவை போல்வன இயல்பின் ஏனைய
துன்னெறி அமைச்சரும் சூழ்ச்சித் தொல்படை
மன்னரும் இசைத்தலும் வயங்கு செங்கதிர்
ஒன்னலன் கையமைத்து உரைத்தல் மேயினான். 183

சென்றிடும் முனிவரர் தியங்க மாயைசெய்
குன்றுடன் இளவலைக் குமரன் கொன்றிடும்
அன்றெனை விடுத்திலை அமைத்தொன்று ஓர்ந்திலை
இன்றிது வினவுவ தென்னை எந்தை நீ. 184

ஆயிரத் தெட்டெனும் அண்டத் துக்கெலாம்
நாயக முதல்வநீ நம்பன் நல்கிய
சேயமர் குறித்தெழல் சீரி தன்றுஎனை
ஏயினை வெற்றிகொண் டிருத்தி எம்பிரான். 185

மற்றைய மைந்தர் பேசுதல்

இரவியம் பகையவன் இனைய சிற்சில
உரைதரும் இறுதியின் உலைவு றுதபோர்
முரணுறு தாதைதன் முகத்தை நோக்கியே
குரைகழல் இரணியன் கூறல் மேயினான். 186

---

183. இந்த விதமாகவே மற்றைய அமைச்சரும், தந்திரத் தலைவரும், தானைத் தலைவரும், பேசக்கண்ட பானுகோபன் எழுந்து,

184. "என் ஐயனே! முனிவரும் மயங்குமாறு மாயை செய்த மலையையுப், தாரக வீரனையும் முருகன் கொன்றபோது என்னை அனுப்பினையல்லை; இன்று இதைக் குறித்து மட்டும் வினவுவது என்னோ?

185. ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் அரசனாயுள்ள நீ, சிவன் பெற்ற சிறுவன்மீது சீறி யெழுதல் சரியன்று; என்னை அனுப்பி வெற்றி பெற்று வாழ்க" என்றுரைத்தான்.

186. அப்போது தளராத வலிமையுடைய தந்தையாகிய சூரனை நோக்கி இரணியன் என்னும் மைந்தன் பேசத் தொடங்கினான்.

வெற்றிப் பேரமர் அற்றியே மேவலர் தொகையைச்
செற்றுத் தேவர்கள் யாரையும் தடிந்துசெல்குவனுல்
இற்றைக் கங்குலின் என்தனை ஏவுதி எனலும்
மற்றைத் தம்பியாம் எரிமுகன் இனையன வகுப்பான்.

மூளும் வெஞ்சமர் புரிந்தஎன் இளவல்பன் முடியும்
வாளி னுல்அடும் ஒற்றனை மற்றுள்ளார் தம்மைக்
கேளொ டும்தடிந் தல்லது கேடில்சீர் நகர்க்கு
மீள்க லேன்எனப் பகர்ந்தனன் வெய்யசூள் உரையே.

சிங்கமுகாசுரன் பேசுதல்

என்னும் மாற்றங்கள் எரிமுகம்
உடையவன் இசைப்ப
அன்ன வன்தனை விலக்கியே
கரதலம் அமைத்துச்
சென்னி ஆயிரம் பெற்றுள
சிங்கமா முகத்தோன்
மன்னர் மன்னனை நோக்கியே
வகுத்துரை செய்வான். 189

---

187. "இன்று இரவே என்னை அனுப்பு; நான் சென்று பெரும்போர் புரிந்து, பகைவரைக் கொன்று வான வரையெல்லாம் ஒறுத்து வருகின்றேன்" என்றான் இரணியன். அவனுக்குப் பின் அவன் தம்பியாகிய அங்கிமுகன் எழுந்து,

188. "வெம்போர் புரிந்த என் தம்பியை வாளால் முடித்த தூதனையும், மற்றைய பகைவரையும் கொன்றாலன்றி இம் மாநகர்க்கு நான் வருவதில்லை" என்று வஞ்சினம் கூறினான்.

189. அங்கிமுகன் இவ்வாறு சொல்ல, அவனை விலக்கி ஆயிரந்தலை பெற்ற சிங்கமுகன் மன்னர்மன்னனாகிய சூரனை நோக்கி,

மந்தி ரத்தரும் தானையம்
தலைவரும் மகாரும்
தந்த மக்கியல் வன்மையே
சாற்றிய தல்லால்
இந்தி ரப்பெரும் திருவுறும்
உன்தனக் கியன்ற
புந்தி சொற்றிலர் இம்மொழி
கேள்எனப் புகல்வான். 190

தேவர்கள் யாரையும்
திரைகொள் வேலையின்
மேவரும் மீன் தொகை
விரைவில் தம்மென
ஏவினை இனிது கொல்.
இனைய செய்கைதம்
ஆவியில் விருப்பிலார்
அன்றி யார்செய்வார். 191

அறைகழல் வாசவற்கு அலக்கண் ஆற்றியே
இறையினை அழித்தனை இருந்த மாநகர்
நிறைதரு வளன் எலாம் நீக்கு வித்தனை
சிறையிடை உய்த்தனை தேவர் யாரையும். 192

---

190. "அரசே! இதுகாறும் பேசிய மந்திரத் தலைவரும், படைத்தலைவரும், மைந்தரும் அவரவரிடம் அமைந்த வீரம் பேசினரேயன்றி, இந்திரப் பெருஞ்செல்வமுற்ற உனக்கு ஏற்ற அறிவுரை கூறினரில்லை. நான் கூறுகின்றேன் : கேள்.

191. "வானவர் யாவரையும் கடலிற் சென்று மீன் பிடித்துவரக் கட்டளை யிட்டாய்! இது நன்றாகுமோ? இத்தகைய செய்கையைத் தம்முயிரில் ஆசையில்லார் செய்வரே யன்றி மற்றையோர் செய்வரோ?

192. வானுலக மன்னனாகிய இந்திரனை வருந்த வைத்தாய்! அவன் அரசுரிமையை அழித்தாய், அவன் இருந்த நகரின் செல்வமெல்லாம் கவர்ந்தாய்! வானவரை யெல்லாம் சிறையில் வைத்தாய்.

பொன்னகர் அழிந்தநாள் புகுந்த தேவரை
இன்னமும் விட்டிலை இரக்கம் நீங்கிறுய்
அன்னதற் கல்லவோ ஆறு மாமுகன்
உன்னுடன் போர்செய உற்ற தன்மையே. 193

எத்தி றத்தரும் நுங்களை வெல்கிலர் எமது
சத்தி வென்றிடும் என்றனன் கண்ணுதல் தலைவன்
அத்தி றத்திறைல் அல்லவோ அறுமுகக் குமரன்
உய்த்த செய்யவேல் உண்டது தாரகன் உயிரை. 194

அமரர் தம்பெரும் சிறையினை நீக்குதியாயின்
குமர நாயகன் ஈண்டுபோர் ஆற்றிடக் குறியான்
நமது குற்றமும் சிந்தையிற் கொள்ளலன் நாளை
இமை ஒடுங்குமுன் கயிலையின் மீண்டிடும் எந்தாய்.

சூரன் சிங்கமுகன் பேச்சை மறுத்தல்

தடுத்து மற்றிவை உரைத்தலும்
வெய்யசூர் தடக்கை
புடைத்து வெய்துயிர்த்து உரப்பியே
நகைநிலாப் பொடிப்பக்

---

193. அந்நாளிற் சிறை புகுந்த வானவரை இந்நாள ளவும் விட்டாயல்லை; இரக்கம் துறந்தாய்; அதற்காக வன்றோ அறுமுகன் உன்னுடன் போர் செய்ய வந்தான்.

194. (ஈசனுர் தந்த வரத்தின் தன்மையை எண்ணிப் பார்.) எத்திறத்தவரும் உம்மை வெல்லமாட்டார். நமது சத்தி யொன்றே வென்றிடும் என்றார் ஈசன். அவ்வரத் தின் திறத்திறைலன்றோ தாரகன் உயிரை முருகன் விடுத்த செவ்வேல் கவர்ந்தது?

195. எம் ஐயனே! தேவரைச் சிறையினின்று நீக்கி விடுவாயாயின் முருகவேள் இங்கு போர் செய்யக்கருதார்; நாம் செய்த குற்றமும் மனத்திற் கொள்ளார்; நாளையே கயிலை மலைக்குக் கடிது செல்வார்" என்று பேசினான்.

196. மற்றையோர் பேசியதற்கு மாருகச் சிங்க முகன் சொல்லிய மொழிகளைக் கேட்டபோது கொடிய

கடித்து மெல்லிதழ் அதுக்கிமெய்
பொறித்திடக் கனன்று
முடித் தனித்தலை துளக்கியே
இன்னன மொழிவான். 196

மாலயன்முதல் ஆகிய
முதுவர்கள் வரம்பில்
காலமாகயான் அமரரைச்
சிறைசெயக் கண்டும்
சால என்தனக் கஞ்சியே
இருந்தனர் தனிஓர்
பாலனே கொலாம் அழிவிலா
என்னுயிர் படுப்பான். 197

எண்ணிலாததோர் பாலகன்
எனைவெல்வன் என்கை
விண்ணில் ஆதவன் தன்னையோர்
கனியென வெஃகிக்
கண்ணிலாதவன் காட்டிடக்
கையிலாதவன்போய்
உண்ணிலாதபேர் ஆசையால்
பற்றுமாறொக்கும். 198

சூரன் கையொடு கையறைந்தான்; சுடுமூச்செறிந்தான்; கோதிப்பினாற் சிரித்தான்; பற்களால் இதழைக் கடித்தான்; மேனி வெதும்பினான்; முடித்தலை அசைத்தான்.

197. "திருமால் பிரமன் முதலிய தொல்லோர், எல்லையற்ற காலமாக யான் வானவரைச் சிறை செய்யக் கண்டும் எனக்கு அஞ்சியே செயலற்றிருந்தனர். அன்னவர் நிற்க ஒரு பாலனா அழிவற்ற என்னுயிரைக் கவர வல்லவன்?

198. விண்ணில் உள்ள கதிரவனை ஓர் கனியென்று கண்ணிலாதவன் காட்ட, அதைக் கையிலாதவன் போய்ப் பிடிக்கும் தன்மை போன்றது கருத்திலாச் சிறுவன் ஒருவன் என்னை வெல்வான் எனச் சொல்வது."

மீண்டும் சிங்கமுகன் தன் கருத்துரைத்தல்

என்று மற்றிவை சூரபன்
மா இசைத் திடலும்
துன்று பல்தலைச் சீயமா
முகமுடைத் துணைவன்
நன்று நன்றென வினவியே
இன்னமும் நான் இங்கு
ஒன்று கூறுவன் முனியலை
கேட்டி என் றுரைப்பான். 199

செந்நி றத்திரு மேனியும்
திருமுகம் ஆறும்
அன்ன தற்கிரு தொகையுடைத்
தோள்களும் ஆக
முன்ன வர்க்கு முன் ஆகிய
பராபர முதல்வன்
தன்னு தற்கணால் ஒருதனிக்
குமரனைத் தந்தான். 200

ஞானந் தான் உரு வாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும் என்னால் அஃதெளிதோ
மோனம் தீர்கிலா முனிவரும் தேற்றிலர் முழுதும்
தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை.

---

199. இவ்வாறாகச் சூரன் சொல்லிய மொழிகளைக் கேட்ட சிங்கமுகன் "ஐயனே! இன்னும் ஒன்றுரைப்பேன்; கோபம் கொள்ளாமல் கேட்கவேண்டும்.

200. செந்நிறத் திருமேனியும், ஆறுமுகங்களும், பன்னிரு தோள்களும் கொண்டு யாவர்க்கும் முன்னவனாகிய இறைவன் தமது நெற்றிக் கண்களில் எழுந்த ஆறு சுடர்களாக அறுமுகனைத் தந்தார்.

201. ஞான வடிவான நாயகன் தன்மையை நானும் நீயும் சொல்வது எளிதோ? மோனநிலை நீங்காத முனிவரும் தெளிந்தாரில்லை; அவர் தாமே தம் பெருந் தலைமையை இன்னும் முற்றும் கண்டாரில்லை.

அழிவில் மெய்வரம் பெற்றனம்
என்றனை அதற்கு
மொழி தரும்பொருள் கேள்மதி
மூச்சகம் தன்னுள்
கெழிய மன்னுயிர் போற்சில
வைகலிற் கெடாது
கழி பெரும்பகல் இருந்திடும்
பான்மையே கண்டாய். 202

கெடுதல் இல்லாதோர் வளனொடு
நீயும்நின் கிளையும்
படுதல் இன்றியே வாழ்தியென்று
இன்னன பகர்ந்தேன்
இடுதல் கொண்டிடு சிறையிடத்
தேவரை இன்னே
விடுதல் செய்குதி என்றனன்
அறிஞரின் மிக்கான். 203

சூரன் ஏளனம் பேசுதல்

இன்ன பான்மையால் மடங்கலம்
பெருமுகத் திளவல்
சொன்ன வாசகம் வினவியே
மணிமுடி துளக்கிக்

---

202. அரசே! அழியா வரம் பெற்றிருப்பதாகக் கூறினாய்! அதற்கு (அறிந்தோர்) சொல்லும் பொருளை அறிவிக்கின்றேன் கேள். மூவகைப்பட்ட உலகங்களிலும் வாழும் உயிர்களைப் போல் சில நாட்களில் இறந்திடாமல் பல நாள் இருந்திடும் பான்மையே அவ் வரத்தின் கருத்தாகும்.

203. அழியாச் செல்வத்தோடு நீயும் நின் சுற்றமும் கேடின்றி வாழ்தல் வேண்டி இவற்றைச் சொன்னேன். ஆதலால் வானவரைச் சிறையினின்று விட்டுவிடு'' என்றான் அறிவாளரிற் சிறந்த சிங்கமுகன்.

204. இங்ஙனம் தம்பி பேசிய வாசகத்தைக் கேட்டான் சூரன்; மணி முடி அசைத்தான்; செவியில்

கன்ன மூடுசெங் கனல்செறித்
தால்எனக் கனன்று
முன்னை யாகியோன் பின்னரும்
சிற்சில மொழிவான். 204

காற்றில் தள்ளுண்டு நெருப்பினில்
சூடுண்டு கங்கை
ஆற்றில் தாக்குண்டு சரவணம்
புக்கலை யுண்டு
வேற்றுப் பேர்முலை உண்டு
அழுதேவிளை யாடும்
நேற்றைப் பாலனை யோபரம்
பொருள்என நினைந்தாய். 205

உரைப்ப தென்இனி ஒருவயிற்று
என்னுடன் உதித்துப்
பெருக்கம் உற்றனை நம்குலப்
பகைஞரைப் பெரிதும்
நெருக்கல் இன்றியே அவர்கள்பால்
பட்டனை நீயே
இருக்க மற்றொரு தெவ்வரும்
வேண்டுமோ எனக்கே. 206

நெருப்பைச் செருகினாற்போல் எரிவுற்றான் சிங்கமுகனை நோக்கி,

205. "நீ புகழ்ந்து பேசிய பாலன் காற்றிலே பறந்தவன்; நெருப்பிலே எரிந்தவன்; கங்கை ஆற்றிலே மிதந்தவன்; சரவணப் பொய்கையிலே கிடந்தவன்; பல மாதரிடம் பாலுண்டு விளையாடியவன். நேற்றுப் பிறந்த அப் பாலனையா பரம்பொருள் என்றாய்!

206. இனிச் சொல்வது என்ன? என்னுடனே ஒரு தாய் வயிற்றில் பிறந்தாய்! உடன் உண்டு பெரிதாக வளர்ந்தாய்! நம் குலப் பகைவரை ஒறுக்கக் கருதாது அவர் வசப்பட்டாய். நீ இருக்க எனக்கு வேறொரு பகைவனும் வேண்டுமோ?

மறம்தனை இழந்தனை மானம் நீங்கினை
சிறந்திடும் அவுணர்தம் சீர்த்தி மாற்றிடப்
பிறந்தனை ஈண்டொரு பயனும் பெற்றிலை
இறந்தனை போலும் நீ இருந்து ளாய்கொலோ. 207

பூதரைத் தலைவரைப் புராரி மைந்தனை
ஏதிலர் யாரையும் யான்வென் றேகுவன்
நீதளர் வெய்திடல் நினது மாநகர்
போதுதி என்றனன் புலனில் புந்தியான். 208

ஆவது விதியெனின் அனைத்தும் ஆயிடும்
போவது விதியெனில் எவையும் போகுமால்
தேவருக்காயினும் தீர்க்கத் தக்கதோ
ஏவரும் அறியொணா ஈசற் கல்லதே. 209

மன்னவர் மன்னவன் வள்ளல் வேலினால்
இன்னினி இறந்திடும் இதுவும் நோக்கியே
பின்னுமிங் கிருந்திடல் பிழைய தாகுமால்
முன்னுற முடிவதே முறைய தாம்என. 210

---

207. நீ வீரம் இழந்தாய்; மானம் துறந்தாய்; சிறப்புடைய அசுரரது மேன்மையை அழிக்கப் பிறந்தாய்; இப்பிறப்பில் எப் பயனும் பெற்றாயல்லை; இருந்தவருள்ளே நீ இறந்தவன் ஆனாய்!

208. நானே பூதரையும் தலைவரையும், பாலனையும் பிற பகைவரையும் வென்று வருகின்றேன். நீ வருந்தாமல் உன் ஊர் போய்ச் சேர்" என்றான் சூரன்.

209. "ஆகும் விதியிருந்தால் எல்லாம் ஆகும்; போகும் விதியிருந்தால் எல்லாம் போகும்; ஈசன் ஒருவனலன்றி வானவராலும் ஊழ்வினையை ஒழிக்க முடியுமோ?

210. முருக வள்ளலின் வேலால் மன்னர் மன்னன் இறந்துபடுவான். அதைக் கண்டு பின்னும் உயிர் தரித்திருத்தல் பிழையாகும். தமையனுக்கு முன் இறத்தலே தக்கது" என்று,

சிந்தனை செய்திடு சிங்க மாமுகன்
தந்தையை நிகர்வரு தம்முன் தாள்தொழா
வந்தனை செய்தனன் மன்ன சீறிடேல்
புந்தியி லேன்பிழை பொறுத்தல் வேண்டுமால். 211

செருவினுக் கேகுவன் செறுநர் தம்மிசைத்
தருதியால் விடையெனத் தம்பி கேட்டலும்
பெரிதுளம் மகிழ்ந்தனன் பிறங்கு காதலால்
வருதியென் றனையனை மார்பில் புல்லினான். 212

இற்றைநாள் இந்நகர் ஏகி ஆயிடை
உற்றிடு படையெலா மொருங்கு கொண்டுநீ
கொற்றமோ டிருக்குதி குமரன் ஈண்டுறின்
மற்றுனை விளிக்குவன் வருதியால் அரன்றுன். 213

ஆனதோர் பொழுதினில் அரசன் ஆண்டுறை
தானையந் தலைவரைத் தனையர் தங்களை
ஏனையர் யாரையும் ஏகச் செய்துதன்
மாநகர் இந்திர வளத்தின் வைகினான். 214

---

211. சிந்தித்த சிங்கமுகன் தமையனாகிய சூரனடிகளில் விழுந்து வணங்கினான். "அரசே! சீற்றம் கொள்ளாதே! சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தல் வேண்டும்."

212. பகைவர்மீது போர் செய்ய, இதோ! போகின்றேன். விடை தருக" என்று வேண்டினான். அந்நிலையில் சூரன் அகமகிழ்ந்தான். தம்பியை வருக என்றழைத்து மார்போடு அணைத்தான்.

213. 'இன்று ஊருக்குச் சென்று அங்குள்ள படைகளை யெல்லாம் திரட்டி ஆயத்தமாய் இரு! கந்தன், இங்கே வந்தால் உன்னை அழைப்பேன்! அப்போது வருக' என்று விடை கொடுத்தான்.

214. அங்கிருந்த படைத்தலைவரையும் மைந்தரையும் பிறரையும் அனுப்பிவிட்டு மகேந்திரமா நகர மாளிகையில் இருந்தான் சூரன்,

இவ்வாசிரியர் இயற்றிய
வேறு நூல்கள்

1. வேலும் வில்லும்
2. ஆனந்தக் குமரன்
3. திருவள்ளுவர் நூல் நயம்
4. சிலப்பதிகார விளக்கம்
5. தமிழ் நாட்டு நவமணிகள்
6. வீரமாநகர்
7. பன்னிரு கட்டுரை
8. திருக்காவலூர்க் கோயில்
9. தமிழ் விருந்து
10. திருஸ்தவத் தமிழ்த் தொண்டர்

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் — சென்னை